20 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 20 | பாலம் 01 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JANUARY 01, 2010

# இலங்கை ஜனாதிபதி தேர்தலும் தமிழர்களின் தடுமாற்றங்களும்

இம்முறை இலங்கையின் அரச தலைவர் தேர்தலில், யாரை ஆட்சியாளராக அனுமதிக்க வேண்டும் என்ற மிகப் பெரிய பொறுப்பு தமிழர் தரப்பிடம் விடப்பட்டுள்ளது. ஆனால் எந்த முடிவையும் எடுக்க முடியாமல் ஒரு பெரிய தடுமாற்றத்தில் மிகப்பெரிய சிறுபான்மை இனமான தமிழ் தேசிய இனம் உள்ளது.

இலங்கை தேர்தல் நடைமுறைகளின் படி தமிழர் தரப்பில் இருந்தோ அல்லது எந்த சிறுபான்மைச் சமூகத்தில் இருந்தோ ஒருவர் அரச தலைவர் ஆக வாய்ப்பு இல்லை. இது வெளிப்படை. இந்நிலையில் தமிழர் விரும்பாவிட்டாலும் தேர்தலில் பங்கு கொள்ளா விட்டாலும் சிங்களவர் ஒருவர் இலங்கையின் அரச தவைவர் ஆவார் என்பதாலும் அவ்வாறு ஆட்சி அதிகாரங்களை பெற்றுக் கொண்டவரின் செயற்பாட்டின் விளைவு தமிழ் மக்களை பாதிப்புக்குள்ளாகும் என்பது நிச்சயம்.

இந்தத் தேர்தல் தமிழரின் அன்றாட வாழ்வியல் தொடக்கம் இனத்தின் இருப்பு மற்றும் அரசியல் கோரிக்கைகள் வரை தாக்கத்தை உருவாக்கும் என்பதாலும் ஆட்சிக்கு வரும் சாத்தியப் பாடுடையவர்களில் சார்பளவில் பொருத்தமான வரை ஆட்சியாளராக அனுமதிக்க வேண்டிய அல்லது தெரிவு செய்ய வேண்டிய தேவை தமிழர்களின் பொறுப்பு என்று சில அரசியல்வாதிகள் தெரிவித்துள்ளனர்.

"இன்று இலங்கை அரசியலை, ஆட்சியாளரை தீர்மானிப்பவர்கள் தமிழர்கள் என்பதையும் ஆட்சியாளரின் அரசியல் இருப்பும் கூட தமிழர் கைகளில்தான் உள்ளது என்பதையும் சிங்களத் தலைமைகளுக்கு உணர்த்த வேண்டியவர்களாக தமிழர்கள் காணப்படுகின்றனர். இது எந்த சிங்கள ஆட்சியாளருக்கும் பேரடியாகவும் தலையிடியாக வும் இருக்கும் என்பது மட்டுமல்ல குறைந்த அளவு அவர்களின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளை வரையறை செய்யவும் தமிழரின் பேரம் பேசும் அரசியல் பலத்தை வலுப்படுத்தவும் வாய்ப்பாக இருக்கும். தமிழரை பலிக்கடாவாக்கி, பலவீனப்படுத்தி பிரித்தாள நினைக்கும் சக்திகளுக்கு எதிராக தமிழர் ஒருமித்து சொல்லவிருக்கும் செய்தி, வேண்டியதெல்லாம் ஆடிவிட்டு, நினைத்ததெல்லாம் செய்து விட்டு தமிழரை இலகுவில் ஏமாற்றி விடலாம் என நினைப்பவர்களுக்கு தகுந்த பாடத்தை தமிழர்கள் புகுத்த வேண்டும், இது சிங்கள அரசியல் ஆளருக்கு விடப்படும் ஒரு எச்சரிக்கையாக அமையும்" என்றும் ஒரு கருத்து நிலவுகின்றது.




**விளம்பரம்** எழுத்தாளர்கள், வாசகர்கள், விளம்பரதாரிகள், நண்பர்கள் மற்றும் அனைவரிற்கும் விளம்பரம் செய்தி இதழின் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

கடந்த காலங்களில் தமிழர் தரப்பு கற்றுக்கொண்ட பாடங்களில் இருந்து, ஆட்சி ஏறும் எந்த சிங்கள ஆட்சியாளரும் தமிழருக்கு உரித்தான உரிமைகளை வழங்கி, தமிழரின் மரபு வழித்தாயகம் - தேசியம் - தன்னாட்சி என்பனவற்றை ஏற்று, தமிழருக்கு நிறைவான விடுதலையை பெற்றுத் தருவார்கள் என்றோ தமிழரின் அடிப்படைப் பிரச்சினைகளை தீர்த்து வைப்பார்கள் என்றோ எதிர்பார்க்க முடியாது என்பதை தமிழ் மக்கள் மிகத் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கின்றார்கள்.

ஆட்சிப் பீடம் யார் வந்தாலும் தமிழரின் அடிப்படை, அரசியல் விருப்புக்களை நிறைவேற்றப் போவதில்லை. அவர்கள் ஒவ்வொருவரும் தமிழர் விடயத்தில் ஒரே கொள்கை உடையவர்கள். பேரினவாத அரசியல் சித்தாந்தங்களுக்குள் சிக்குண்டு கிடப்பவர்கள்.

அரசியலுக்கும் எமக்கும் தொடர்பு வேண்டாம். இப்படியான தேர்தலில் தமிழர் தரப்பு பேசாமல், ஆதரவு அளிக்காமல் இருந்து விடுவதான் நல்லது என நினைப்பவர்கள் இன்று கூட இருக்கின்றனர். இவர்களின் ஆதங்கம், உணர்வு பூர்வமான சிந்தனை ஒருவகையில் நியாயமானதுதான். ஆனால் இது தற்காலத்திற்கும், நடைமுறை அரசியல் ஒழுங்கிற்கும், மக்களின் அன்றாட, உடனடி அடிப்படைத் தேவைகளுக்கும் பொருத்தப்பாடு உடையதா என சிந்திக்கவும் அலசி ஆராய வேண்டியதுமான விடயமாகின்றது என்று ஒரு தரப்புக் குரல் ஒலிக்கின்றது.

அரசியலில் இருந்து விடுபட்டு இருப்பதே நடுநிலைமையும் பெருமை சேர்ப்பதும் என எண்ணிக்கொள்பவர்கள் கணிசமான அளவினர் இருக்குமளவிற்கு அரசியல்வாதிகள் பலரின் செயற்பாடுகள் காணப்படுகின்றன என்பது உண்மை. ஆட்சியாளர் புரிகின்ற சரி பிழைகளில் இருந்து பிறப்பெடுக்கின்ற ஒவ்வொரு தாக்கமும் பாதிப்பும் நாட்டில் ஒவ்வொரு குடிமகனையும் சென்றடைகின்றன. ஆட்சியாளர் இழைக்கின்ற தவறுகளினால் அதிகம் அல்லற்படுவது அரசியல் வாதிகள் அல்லர். மக்கள்தான் என்பது இன்னொருவர் சொல்லித்தான் தெரிந்து கொள்ளும் விடயமல்ல. இது மக்கள் அனுபவித்த, அனுபவித்துக் கொண்டிருக்கும் வெளிப்படையான விடயம்.

சனநாயக அரசியலில், மக்கள் பிரதிநிதிகள் என்றும் தமது செயற்பாட்டிற்கு மக்களின் ஆதரவும் அனுமதியும் கிடைத்தது என்றும் கூறிக்கொள்ளும் ஆட்சியாளரின் ஒவ்வொரு நடவடிக்கையின் சாதக, பாதக விளைவுக்கும் முகம் கொடுக்க வேண்டியவர்கள் மக்கள்தான் என்பதை மறந்து விடக்கூடாது. இதனால் ஆட்சியாளர் யார் என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு ஒவ்வொருவரிடமும் ஒப்படைக்கப்படு கின்றது. இதனை சரியாக பயன்படுத்த வேண்டிய கடப்பாடு கொண்டவர்களாக மக்கள் காணப்படுகின்றனர். தவறான தெரிவின் ஊடாக ஒரு கொடுமையான ஆட்சியாளரை உருவாக்கி விட்டு, நாளை அவ் ஆட்சியாளரால் ஏற்படும் பாதிப்புக்கு பொறுப்புடையவர்கள் ஆட்சியாளர் என்பதற்கு அப்பால் ஒரு வகையில் ஒவ்வொருவரும் தார்மீக பொறுப்பாளிகளாக வேண்டிய நிலையும் ஏற்படலாம் என்றும் ஒரு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

RBC Royal Bank® MORTGAGES
Gteat Options for all your Mortgage needs
• Switch to Royal Bank for free. • 24 hours fast, efficient and friendly service.
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
•Renewals ¶ Refinance •Consolidate Debts for free.
• Reduce borrowing costs. • Home Equity line of credit
•New immigrant and self-employed programs simplified welcome !
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்

Paskaran K. Sabapathy Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

RBC Royal Bank

Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee • No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

Sales & LEASING
MARKVILLE TOYOTA


➤KUMAR JEGASOTHY➤
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி<
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

SATHYA SAIRAM DRIVING SCHOOL

• உங்களுக்கு பாஷை ஒரு பிரச்சினையா?
• பரீட்சை கேள்விகள் விளங்காததனால் வாகன எழுத்து பரீட்சையில் அல்லது வீதிப்பரீட்சையில் சித்தியடைய முடியவில்லையா? கவலை வேண்டாம்.
• உங்கள் வாகனம் சம்பந்தப்பட்ட எந்த பரீட்சையிலும் சித்தி அடைய வேண்டுமா?
அழையுங்கள் - 416-831-5217


Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

துரித பணமாற்றுச் சேவை
• 52 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 19 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை


மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated


# எமக்கு அண்மையில் இன்னொரு பூமி

வானசாத்திர வல்லுனர்கள் பல கிரகங்களை அண்டவெளியில் பல ஆண்டுகாலமாக கண்டுபிடித்து வருகிறார்கள். அக்கிரகங்களின் நிறையில் பூமியின் நிறையை விட கூடவும் அதன் நிறையின் பத்துமடங்குகளுக்கு உள்ளும் இருக்கும் கிரகங்களை பெரிய - பூமி (Super - Earth) என பெயரிட்டு அழைப்பார்கள்.

இவ்வாறான பெரிய - பூமி முதன்முதலாக 1991 இல் கண்டுபிடிக்கப்பட்டது. இது எமது பூமியைவிட நிறையில் கிட்டத்தட்ட நாலுமடங்கு பாரம் கூடியது. இதை தொடர்ந்து நவம்பர் 2009 வரை 30 பெரிய - பூமிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

கடந்த மார்கழி 16, 2009 திகதி ஹவார்ட் சுமித்சோனியன் மையத்தை சேர்ந்த (Harvard Smithsonian Center) வானசாத்திர பேராசிரியரான David Charbonneau என்பவர் தாங்கள் ஒரு புதிய பெரிய பூமியை எமக்கு அண்மையில் (40 ஒளியாண்டு தூரத்தில்) கண்டு பிடித்துள்ளதாக கூறியுள்ளார். இது எமது பூமியை விட 6.5 மடங்கு பாரம் கூடியதும், 2.7 மடங்கு பெரிய விட்டத்தை உடையதும் ஆகும். இதற்கு GJ 1214b என பெயரிட்டுள்ளார்கள்.

இப்புதிய பெரிய - பூமி சுற்றிவரும் நட்சத்திரம் (சூரியன்) எமது சூரியனைவிட சிறியதும் பிரகாசம் குறைந்தது ஆகும். இது ஒரு சிவப்பு குள்ள நட்சத்திரம் (Red Dwarf star), இதனை GJ 1214 என அழைப்பர். எமது சூரியனை 1000 Watt மின்குமிழிற்கு ஒப்பிட்டால் இப்புதிய பெரிய - பூமியின் சூரியனை 3 Watt மின்குமிழிற்கு ஒப்பிடலாம். இக்கண்டுபிடிப்பே வானசாஸ்திரவியலாளரின் தற்போதைய நம்பிக்கையான அண்டவெளியில் உள்ள மற்றைய சூரிய குடும்பங்களின் சூரியன்கள் எமது சூரியனின் அளவாதல் இருக்க வேண்டும் என்ற கருதுகோளை சிதறடிக்கச் செய்துள்ளது. இந்த நம்பிக்கையால் எமது சூரியனை விட சிறிய சூரியனை கொண்ட சூரிய குடும்ப கிரகங்களை இதுவரை வானசாத்திரவியலாளர்கள் ஆராய்ச்சி செய்ய முயற்சிக்கவில்லை. இதனாலேயே



எமக்கு அண்மையில் உள்ள இந்த பெரிய - பூமியான GJ 1214b இதுவரை கண்டுபிடிக்கப்படாமல் இருந்தது. இப்பெரிய - பூமியை மிகவும் சிறிய தொலை நோக்கியால் (16 அங்குல தொலை நோக்கியால்) பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

இப்பெரிய - பூமி கிட்டத்தட்ட 75% தண்ணீரை பளிங்கு நிலையில் கொண்டுள்ளதால் இங்கு உயிரினங்கள் இருக்கலாம் என சந்தேகம் ஏற்பட்டது. இப்பெரிய - பூமியின் அதிகூடிய வெப்பநிலையால் இங்கு உயிரினங்கள் இருக்கமுடியாது என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இப்பெரிய - பூமியின் வெப்பநிலை 200 பாகை செல்சியசாக இருக்கிறது. இவ்வாறு அதிகூடிய வெப்பநிலை இருந்தாலும், இங்கு தண்ணீர் பளிங்கு நிலையில் இருப்பதற்கான காரணம் அக்கிரகத்தின் அதி கூடிய அமுக்கத்தை (High Pressure) உடைய சுற்றுப்புற சூழல் காணப்படுவதேயாகும். இப்பெரிய - பூமியின் அமுக்கம் எமது பூமியின் அமுக்கத்தைவிட 20,000 மடங்கு கூடவாகும்.

இந்தப்பெரிய - பூமி தனது சூரியனை 20 இலட்சம் கிலோ மீற்றர் தூரத்தில் 38 மணித்தியாலத்திற்கு ஒரு தடவை சுற்றி வருகிறது. இதை எமது சூரியக்குடும்பத்தில் உள்ள புதன் கிரகத்துடன் ஒப்பிட்டால் புதன் கிரகம் எமது சூரியனை 580 இலட்சம் கிலோ மீற்றர் தூரத்தில் 88 நாட்களுக்கு ஒரு தடவை சுற்றிவருகிறது.

இப்பெரிய-பூமியே இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள கிரகங்களில் கிட்டத்தட்ட எமது பூமிக்கு பல விடயங்களில் ஒத்ததாகக் காணப்படுகிறது என Harvard Smithsonian Center சேர்ந்த Zachory Berta தெரிவித்துள்ளார்.



சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca



## வாசகர்களின் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram, 5215 Finch Ave. E. #201, Scarborough, ON M1S 0C2
2. Fax: 416.282.8059
3. email: vlambaram@sympatico.ca

வணக்கம்

விளம்பரம் செய்தி இதழின் வாசகி நான். தரமான தகவல்களை தரம் குன்றாமல் மாதமிருமுறை 1ஆம் 15ஆம் நாட்களில் எங்கள் கைகளில் தவழவிடுவதற்கு முதற்கண் எனது நன்றிகள். வாழ்விற்கு தேவையான ஆரோக்கியம், பொருளாதாரம், விளையாட்டு, இலக்கியம்.... போன்ற சகல-தையும் சேர்த்து தரும் ஒரு பத்திரிகை விளம்பரம். புத்தாண்டில் மேலதிக கனடிய செய்திகளையும் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன். உங்கள் சேவை என்றும் தொடர வேண்டும்.

புவனா இலங்கேஸ்வரன்
மார்க்கம் - 18/12/2009

•••••••••••••

15 ஆண்டுகளாக கனடாவில் பாரபட்சமின்றி விளம்பரங்களையும், செய்திகளையும், பல முக்கிய தேவைகளையும் கொண்டு வரும் மூத்த பத்திரிகையாக விளங்கும் 'விளம்பரம்' பத்திரிகை மென்மேலும் தொடர்ந்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

ஞானா செல்வம்
மார்க்கம் - 29/12/2004

•••••••••••

The Editor,
Vlambaram

I very much appreciate your very valuable articles and the advertisements appearing in all your fortnightly magazine is, ofcourse issued free in most shops.

Dr. S. Sabaratnam
Scarborough
July 21, 1998



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

விளம்பரம் VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

Sales Reps. Welcome

For All your Real Estate & Investments Needs!

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)




* INDEPENDENTLY OWNED AND OPERATED

HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 28, Mississauga -905.712.2666

# கனடாவின் கதை - 12

## மத்திய பலேயோ எஸ்கிமோ கலாசாரம்

இது மேற்கில் மக்கென்சி ஆற்றுவாய் மண்திடல் பகுதியையும் கிழக்கே கிறீன்லாந்தையும், வடக்கே வட எல்ஸ்மேயர் தீவையும் தெற்கே நியூபவுன்லாந்து தீவையும் உள்ளடக்கிய பெரும் பகுதியாகும். இது கிழக்கு மேற்காக 3700 கி.மீ தூரத்துக்கும் வடக்குத் தெற்காக 4000 கி.மீ தூரத்துக்கும் பரந்துள்ளது. இப்பகுதி பல்வேறுபட்ட பூகோளவியல் பகுதிகளையும், விலங்குகளின் மூலவளங்களையும் கடற்பனி பாறைகளையும் கொண்ட பகுதியாகும். எனவே இது பலகலா-சாரப் பிரிவுகளைக் கொண்டிருக்குமென்பது கூறாமலே விளங்கும். மேலும் இப்பகுதியில் வெவ்வேறு காலப்பகுதிகளில் இடப்பெயர்வுகளும் நிகழ்ந்ததற்கான சான்றுகளும் காணப்படுகின்றன. வடகியூபெக், லப்றடோர், நியூபவுண்லாந்து ஆகிய விடயங்களின் மத்திய பலேயோ எஸ்கிமோ குறொஸ்வோட்டர் கலாசாரப் பிரிவின் முன்னோடியானது அயலிலுள்ள எல்ஸ்மேயர் தீவிலும் கிறீன்லாந்திலும் ஏற்பட்ட கலாசார விருத்தியிலிருந்து பெறப்பட்டது. ஹட்சன் வளைகுடாப் பகுதியில் நடைபெற்ற குடியேற்றம் மேற்கிலுள்ள பொக்ஸ் பேசின் (Fox Basin) மக்களால் ஏற்பட்டது.



படம் - 1 மத்திய பலேயோ எஸ்கிமோ கலாசார உபகரணங்கள்.

இடது பக்கத்தில் இரு மீன்பிடி ஈட்டி முனைகள் உள்ளன. இவை முறையே கி.மு. 900 ஆண்டும், கி.பி. 500 ஆண்டும் பயன்படுத்தப்பட்டவை. வலது பக்கத்தில் கல்லாலான செதுக்கு கருவியும், முக்கோண கூருள்ள ஒரு முனையுங் காணப்படுகின்றன. இவற்றிற்கு வலமாக சவர்க்கார கல்லாலான விளக்கு உள்ளது.

இக்கலாசாரத்தில் காணப்பட்ட கல் ஆயுதங்கள் ஒப்பீட்டளவில் சிறியவையாயும், கலாசார வடிவங்களை பின்பற்றி ஆக்கப்பட்டவையாயும் இருந்தன. எனினும் இவை மிகவும் கவனமாகச் செய்யப்பட்டவையாயும் இருந்தன. பியூறின் (Burin) எனப்படும் ஒருவகைக் கல்லே பெரும்பாலான கருவிகள் செய்வதற்கு உபயோகிக்கப்பட்டது. வெட்டுதல், பிளத்தல், செதுக்கல் போன்றவற்றிற்குத் தேவையான கருவிகள் இக்கல்லினால் செய்யப்பட்டன. மேலும் இக்கருவிகள் மிருகங்களின் கொம்பு, என்பு, பல் ஆகியவற்றிலிருந்து ஆபரணங்கள் செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டன. வெட்டும் கத்திகளும் பிளக்கும் கத்திகளும் மரக் கைபிடிகளைக் கொண்டிருந்தன. மெல்லிய கல் தகடுகளாலான முனைகள் என்புகளாலும் கொம்புகளாலும் செய்யப்பட்ட ஈட்டி முனைகளில் பொருத்தக் கூடியவாறு குழிகளைக் கொண்டிருந்தன. இவ்வாறே பெரிய மீன்கள், திமிங்கிலங்களைப் பிடிக்கப் பாவிக்கப்பட்ட ஈட்டிகளிலும் கல்லால் செய்யப்பட்ட முனைகள் பொருத்தப்பட்டன. விறாண்டு கருவிகளும் வாய்ச்சுக்களும் கல்லால் செய்யப்பட்டன.

இப்பிரதேசத்தில் இருந்த உறைபனி காரணமாக மரத்தால் செய்யப்பட்ட கத்திக்கைபிடிகள் படகு, சறுக்கு பலகைகள் ஆகியன நல்ல நிலையில் கண்டு பிடிக்கப்பட்டன. மேலும் தந்தம், கொம்பு, மரம், சவர்க்காரக்கல் ஆகியவற்றால் செய்யப்பட்ட கலைப் பொருட்களும் பெருவாரியாகக் கண்டெடுக்கப்பட்டன.

கடுங் குளிர் காரணமாக கலைமான்கள் கிடைப்பது அரிதாகி விட்டதால் மக்கள் கடலுணவுகளில் நாட்டஞ்செலுத்தினர். தரை வாழ் விலங்குகள் உப உணவாகப் பயன்படுத்தப்பட்டன. இதனால் இவர்கள் வேட்டையாடும் இடங்களை விட்டு கடலுக்கருகே தமது வாழிடங்களை மாற்றிக் கொண்டனர். இக்கலாசாரம் 1,500,000 சதுரகிலோமீற்றர் பரப்பளவில் பரந்திருந்ததால் மாவட்டங்களுக்கிடையே பல வேறுபாடுகள் உணவிலும் கலாசார முறைகளிலுங் காணப்பட்டன. பனிக்காலத்தில் கடல் பனிப்பாறைகள் மேல் “இக்லூ” எனப்படும் பனிக்கட்டிகளால் வீடுகள் அமைத்து திமிங்கிலங்கள், சீல் மீன்கள், பறவைகள் போன்றவற்றை பிடித்து உணவாகவும் விளக்கு எரிப்பதற்கு வேண்டிய எண்ணெய் முதலியவற்றைப் பெற்று வாழ்ந்தனர்.

வடதுருவம், வடகிறீன்லாந்து, லப்றடோர், நியூபவுண்லாந்து போன்றவற்றில் கூடார வடிவில் அரைவாசி நிலத்தில் பதிந்துள்ள வீடுகள் கட்டப்பட்டன. நடுவில் சமையலறையும் இரு மருங்கிலும் படுக்கை அறைகளையும் கொண்டனவாய் இவை காணப்பட்டன. ஆவிகளில் இவர்கள் ஓரளவு நம்பிக்கை கொண்டிருந்தார்கள் என்பது இவர்களின் கலை வடிவங்களில் இருந்து அறியக் கூடியதாய் இருந்தது. சில என்பாலான, கொம்பாலான, வடிவங்களைத் தாயத்துப் போன்று அணிந்திருக்கலாமென நம்பப்படுகின்றது. இக்கலாசாரத்தில் சவ அடக்குமுறைகள் எதுவும் பின்பற்றப்படவில்லை. மிகவும் அரிதாகவே மனித எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. கிடைத்த சான்றுகளைக் கொண்டு இவர்கள் வடமொங்கோ லொயிட் இனத்தை முன்னோடிகளாகக் கொண்டிருக்கலாம். தற்போதைய இன்யூட் மக்கள் இவர்களது வழித்தோன்றல்கள் ஆவர்.

- துறையூரான் -

ஐரோப்பிய ஆய்வாளர், சமயம் பரப்புவோர், வேட்டையாடுவோர், நாடு கைபற்றுவோர் யாவரும் கனடாவுக்கு வந்தபோது பல்லாயிரம் வருடங்களாக வாழ்ந்த மக்களைச் சந்தித்தனர். ஐரோப்பியர் வருகையின் போது 12 முக்கிய மொழி பேசும் மக்களைக் கண்டனர். எனினும் இவர்களுக்குள் பல்வேறு மொழிகளைப் பேசும் உபகுழுக்கள் இருந்தன. ஐரோப்பியர் வருகையால் இம்மக்கள் எண்ணிலடங்கா இன்னல்களுக்கும் பேராபத்துக்களுக்கும் உள்ளாகினர். 80% மக்கள் ஐரோப்பியரோடு வந்த நோய்களுக்காளாகி மடிந்தனர். மிஞ்சியிருந்தோர் அந்நிய அரசாட்சி பொருளாதார முறைகளை எதிர்கொண்டனர். வெள்ளை மக்களால் உள்வாங்கப்படுவதை எதிர்த்து நின்று போராடி சமூக நீதி பெறுவதில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளனர்.

பின்குறிப்பு

இத்துடன் கனடாவின் கதை முதலாம் பாகம் முற்றுப் பெறுகின்றது. இரண்டாம் பாகத்தில் ஐரோப்பியர் வருகையினால் பூர்வீகக் குடிகள் அடைந்த இன்னல்கள், ஆட்சி முறையிலும் சமூக மட்டத்திலும் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிப் பார்ப்போம்.

*எல்லோருக்கும் எனது மனம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.*

நன்றி வாசகர்களே!

ஆதாரம்: *History of native people canada*

A1 கொழும்பு
போட்டோ ஸ்ருடியோ & விடியோ
அனைத்து போட்டோ, விடியோ படப்பிடிப்புகள்
எல்லா வகையான போட்டோ விடியோ வேலைகள்
2 பாஸ்போட் $5.00 2 லாண்டட் காட் $5.00
2 சிற்றிசன் $5.00 - 2 அனைத்துவிதமான ஐ. டி.$5.00
3 - 5X7 ஸ்ருடியோ போட்டோ $15.00
From: அல்பத்துடன் போட்டோ PACKAGES
25 - 5X7 பிறந்த நாள் போட்டோக்கள் $75.00
50 - 5x7 பூப்புனித நீராட்டு விழா $150.00
100 - 5x7 திருமணவிழா $300.00
2296 EGLINTON AVE. EAST @ BIRCHMOUNT ROAD
UNIT 3 LOWER LEVEL, Web: www.tamilsyellowpeages.com
Mobile: 416-752-4444 Tel: 416-755-2333


STATE FARM INSURANCE
DISCOUNTS UP TO 30% ON CAR INSURANCE
Li Chen, Agent
http://www.licheninsurance.ca
Bus: 416-431-6800
Mano Selvam
Auto Insurance Representative
Bus:416-431-6800
தமிழில் உரையாடுவோம்
1200 Markham Road, Suite# 123, Scarborough, ON M1H 3C3
Intersection: Markham Road & Ellesmere Road
State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# உண்மையான பிரார்த்தனை

## பிரார்த்தனை என்பது கடவுளை சென்றடைவதற்கான வழியல்ல. கடவுள் தான் நம் பிரார்த்தனைக்கான ஒரு வழி.



## சத்குரு வாசுதேவ்

பிரார்த்தனை என்றால் என்ன? கடவுளே அது கொடுப்பா, இது கொடுப்பா, காப்பாற்றுப்பா என்பதா? நீங்கள் கடவுளிடம் கேட்பது பிரார்த்தனை அல்ல. இலவசமான சந்தோஷம். உங்களுக்கு தேவை ஆரோக்கியம். அதை வெளிப்படையாகச் சொல்ல உங்களுக்கு விருப்பமில்லை. முதலில் எதையும் நேர்மையாக உங்களுக்கு என்ன வேண்டுமென்று நேரடியாக கேட்டுப் பழகுங்கள். அதன்பிறகு உண்மையான மகிழ்ச்சிக்கும், நலவாழ்வுக்கும் என்ன வழி என்பதைப் பார்க்கலாம். நீங்கள் உங்கள் முட்டாள்தனத்தை பார்த்துக் கொள்ளாமல் கடவுளைப் போய் பார்ப்பதில் எந்தப் பயனுமில்லை. சமயம் சார்ந்து உங்களுடைய ஆழமான உந்துசக்தி என்னவென்றால் தெய்வீகம் சார்ந்ததாக உங்களுக்கு இருக்கும் என்று சொல்ல இயலாது. உங்கள் உச்சத்தைத் தொட வேண்டும் என்று மதத்தை நீங்கள் அணுகியதில்லை. வசதி, செல்வவளம், அதிகாரம், இன்பம் இவற்றிற்காகத்தான் பலர் மதத்திற்கு வருகிறார்கள். இதற்கெல்லாம் கடவுளை கருவி என்று நீங்கள் கருதிக் கொண்டிருக்கிறீர்கள். பாதுகாப்பையோ, பொருளியல் சார்ந்த நலன்களையோ நீங்கள் தேடுகிறபோது உங்கள் பிரார்த்தனைக்கு அடித்தளமாக ஆசையும், அச்சமும் இருக்கிறது. எனவே இந்தப் பிரார்த்தனையில் எந்த பலனும் இருக்காது.

### புத்தாண்டு வாழ்த்து

மரம் ஒன்றை நடுவதன் மூலம்
உங்களினும் பெரிய ஒன்றை..
உங்களுக்குப் பிறகும் வாழும் ஒன்றை
உருவாக்குகிறீர்கள்.
மற்றவர் நலனுக்கான
இந்த அக்கறையையும் அர்ப்பணிப்புணர்வையும்
வெளிப்படுத்துவது மனிதர்களின் புரிதலையும்
தாண்டிய
அழகும் தனித்தன்மையும் வாய்ந்த மகத்தான
ஒன்று.

நீங்கள் எதன் அங்கமாய் இருக்கிறீர்களோ
அதன்மீது அளப்பரிய பரிவையும் வெளிப்படுத்த
மிக நல்ல வாய்ப்புகள் உங்களுக்கு அமையட்டும்.

பசுமைமயமான செல்வமும் நலவாழ்வும்
வரும் ஆண்டில் உங்களுக்கு அமையட்டும்

அருளும் ஆசிகளும்
சத்குரு

தொடர்புகளுக்கு: 416.300.3010
website: www. ishafoundation.org
www. ishayoga.org

பிரார்த்தனை கடவுளை சென்றடய வழி என்று பலரும் கருகிறார்கள். ஆனால் கடவுளைப் பற்றி என்ன உங்களுக்குத் தெரியும்? நீங்கள் உண்மையாக இருப்பீர்களேயானால், கடவுளைப் பற்றி உங்களுக்கு எந்த அனுபவமும் இல்லையென்று ஒப்புக் கொள்வீர்கள். ஒரு குறிப்பிட்ட நம்பிக்கை முறைகளிலிருந்து நீங்கள் வருகிறீர்கள். நேரடியாக அனுபவமில்லாத கடவுளை சென்றடைய பிரார்த்தனையை பயன்படுத்துவது ஒரு மாயையாகக் கூட இருக்கக் கூடும். எண்ணங்களும், சிந்தனைகளும் ஒரு மனிதனுக்குள் ஒரு திறப்பை ஏற்படுத்தினாலும், அவை சில மாயத் தோற்றங்களயும் ஏற்படுத்தும். அந்தத் தோற்றங்கள் வளரத் தொடங்கி ஒரு பெரிய பரி-மாணைத்தை ஆட்கொள்ளத் தொடங்கும். ஏனென்றால், உண்மையை விட கற்பனைக்கு வலிமை அதிகம். ஒரு மாயத்தோற்றம் எதுவாக வேண்டுமானாலும் உருக்கொள்ளக் கூடிய இயல்புடையது. நிதர்சன வாழ்க்கையை விட திரைப்படம் வலிமையாக இருப்பது ஏனென்றால், நீங்கள் வேண்டியதை அது மிகைப்படுத்தித் தருகிறது. உங்களுடைய மாயத்தோற்றங்கள் மிகைப்படும்போது அது உங்கள் வாழ்க்கையை விட வலிமையாகிறது. அதனால் தான் நாம் பிரார்த்தனையிலிருந்து தள்ளியிருக்கிறோம். ஏனென்றால் பிரார்த்தனை தவறாகப் பயன்படுவதோடு, ஏமாற்றத்திற்கும் இட்டுச் செல்லும். உள்நிலையை எட்டுவதற்கும் தெய்வீகத்தை உணருவதற்கும் பிரார்த்தனையோடு ஒப்பிடுகிற போது தியானம் இன்னும் உகந்த வழியாகத் திகழ்கிறது.

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் தெய்வீகத்தோடு ஆழமாகத் தொடர்பு கொள்ள உண்மையான பிராத்தனை ஒரு வழி. அது ஒரு தன்மை. நாம் பிரார்த்தனைப் பூர்வமாக மாறுகிற போது அது மிக உன்னதமான நிலை. ஆனால் உள்நிலையோடு நீங்கள் தொடர்புக்கு வந்தால்தான் அது நிகழும். அப்படி வந்து விட்டால் அந்த அனுபவம் ஆனந்தமயமானது.

நாம் ஆனந்தமயமாக இருக்கிற போது திறந்த மனநிலையில் இருக்கிறோம். பெறுவதற்குத் தயார் நிலையில் இருக்கிறோம். பிரார்த்தனை என்பது ஒருவழிப் பாதையாக இருக்காது. ஆனால் அது ஒரு அற்புதமான அம்சமாகவும், கொண்டாட்டத்தைக் கொண்டு வருகிற ஆனந்தமாகவும் அமையும். அந்தநிலையில் அச்சத்திற்காகவோ, ஆசைக்காகவோ நாம் பிரார்த்தனை செய்வதில்லை, ஏனென்றால் பிரார்த்தனையே நமக்குக் கிடைக்கிற பெரிய வரம். 'யோகக்கலையின் தந்தை' என்று கருதப்படும் பதஞ்சலி ஒன்று சொல்கிறார்: 'உண்மையில் பிரார்த்தனத்தன்மையோடு ஒருவர் இருப்பாரேயானால், 'பிரார்த்தனை என்பது கடவுளை அடைவதற்கான வழியல்ல. கடவுள் தான் பிரார்த்தனையைச் சென்றடைவதற்கான வழி என்று உணரமுடியும்' என்கிறார்.


என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்



Interest Rate going up soon
best time to buy Real Estate

**ESSO Gas Station with property at HWY exit to Quebec**

**Scarborough Bankrupt Sale**
30,000sq.ft **Banquette Hall**
**in 4.5 acre Land with zoning**


*Buy low, Sell high - 40 years Low Interest*
வங்கியின் பணத்தில் முதலீடு - 5 வருடத்தில் Cash out
*5 year plan 3.9% interest* **Power of Sale**
*Properties with Tenant's Pay the cost*
**What's your Risk?**

வீடும் வியாபாரமும் *Business Zoning*
**Future long term Investment**

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு
அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.

**APARTMENTS FOR RENT**



**$250 Move In Bonus**
*Best Building in Scarborough!*
*Clean, family building, FREE parking.*
*Close to schools, bus stop, Tamil store in building.*
**Pl. Call: 416.264.2818**

# H1N1 ஃபுளூவைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன



- ஃபுளூ காலம் இன்னமும் முடியவில்லை. ஏப்ரல் மாதம்வரை அது தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
- H1N1 ஃபுளூவானது புதியதும், வித்தியாசமானதும், வெகுவிரைவில் பரவக்கூடியதுமாகும்.
- H1N1 ஃபுளூ அனைவரையும், ஆரோக்கியமான இளையவர்களைக்கூட பாதிப்பதோடு கடுமையான சுகவீனத்திலும் வைத்தியசாலையில் அனுமதிப்பதிலும் விளைவடையலாம்.
- வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோரில், சுமார் பாதிப்பேர் 20 வயதுக்கும் குறைந்தவராவர்.
- H1N1 ஃபுளூ ஊசி பாதுகாப்பனது, உங்களையும் உங்கள் குடும்பத்தையும் உங்கள் சமூகத்தையும் பாதுகாக்க சிறந்த வழி இதுவே, மற்றும் இந்த ஊசி இலவசமானது.

**உங்கள் சுகநல பராமரிப்பாளருடன் பேசுங்கள்.**
**அருகில் உள்ள ஃபுளூ கிளினிக்கை தெரிந்துகொள்ள, செல்லுங்கள்:**

**ontario.ca/flu**

**அல்லது சர்வீஸ் ஒன்டாரியோ இன்ஃபொலைனை அழையுங்கள்: 1-800-476-9708**
**TTY: 1-800-387-5559**

## இந்த வருடம் ஒரு வித்தியாசமான ∴ப்ளூக் காலம்

**ஃப்ளூவிலிருந்து உங்களை பாதுகாத்திடுங்கள்**



H1N1 ப்ளூ ஊசியைப் போட்டுக்கொள்ளவும்



கைகளை நன்றாக அடிக்கடி கழுவவும்



அல்கஹால்கொண்ட கைசுத்தமாக்கி மருந்தை அருகில் வைக்கவும்



சட்டைக் கையில் அல்லது டிஷுவில் இரும அல்லது தும்மவும்



மேற்பரப்பு மற்றும் பொருட்களில் கிருமி நீக்கவும்

Ontario

# FIFA - Player of the year 2010

## விளையாட்டுத் தகவல்கள் 274

***World Cup 2010***

உலகக்கிண்ணம் 2010 உதைபந்தாட்டம் ஆபிரிக்க கண்டத்தில் உள்ள தென் ஆபிரிக்காவில் வெள்ளி யூன் 11, 2010 தொடங்கி வெள்ளி யூன் 2010 வரை 15 நாட்கள் நடைபெற உள்ளது. எட்டு பிரிவுகளாக 32 நாடுகள் இதில் விளையாட உள்ளன.

| Group A | Group C | Group E | Group G |
|---|---|---|---|
| South Africa | England | Netherlands | Brazil |
| Mexico | USA | Denmark | Korea DPR |
| Uruguay | Algeria | JapanJ | IVORY COAST |
| France | Slovenia | Cameroon | Portugal |
| **Group B** | **Group D** | **Group F** | **Group H** |
| Argentina | Germany | Italy | Spain |
| Nigeria | Australia | Paraguay | Switzerland |
| Korea Republic | Serbia | New Zealand | Honduras |
| Greece | Ghana | Slovakia | ChileChile |

### ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் வாய்ப்பை வென்றது பிரேசில்

வரும் 2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் வாய்ப்பு தென் அமெரிக்க நடான பிரேசிலின் தலைநகர் ரியோ டியோ ஜெனிரோவுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்போட்டிகளை நடத்தும் முதல் தென் அமெரிக்க நாடு என்ற பெருமையை பிரேசில் பெற்றுள்ளது. கடைசி சுற்றில் ஸ்பெயினின் மெட்ரிட் நகரை விட அதிக வாக்குகளை பிரேசில் பெற்றது.

முன்னதாக 2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை சிகாகோ நகரில் நடத்த வேண்டும் என்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவும் அவரது மனைவி மி'சல் ஒபாமாவும் உணர்சிகரமாக கோரிக்கை விடுத்தனர்.

டோக்யோ நகருக்குத்தான் இந்தப் போட்டிகளை நடத்தும் வாய்ப்பு கிடைக்கும் என்று பலர் பந்தயம் கட்டினர். ஆனால் டோக்யோவும், சிகாகோவும் முதல் சுற்றிலேயே வெளியேற்றப்பட்டன.

### "சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு வழங்கிய ஆண்டின் சிறந்த வீரர்

அர்ஜென்டினா கால்பந்து வீரர் லியோனல் மெஸ்சிக்கு இந்த ஆண்டு, சிறப்பானதாக அமைந்தது. பார்சிலோனா கிளப் அணி சார்பில் விளையாடி வரும் இவர், நட்சத்திர வீரராக உருவெடுத்துள்ளார். இவரது சிறப்பான ஆட்டம் கைகொடுக்க, சாம்பியன்ஸ் லீக், ஸ்பானிஷ் லீக் தொடர்களில் பார்சிலோனா கோப்பை வென்று அசத்தியது. ஐரோப்பாவின் சிறந்த கால்பந்து வீரருக்கு வழங்கப்படும் "தங்கப்பந்து" விருதை வென்ற மெஸ்சி, "சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பிபா) வழங்கிய ஆண்டின் சிறந்த வீரர் விருதையும் தன்வசப்படுத்தியுள்ளார். இதன் மூலம் ரியல் மாட்ரிட் அணி வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவை பின்னுக்குத் தள்ளி உலகின் "நம்பர்-1" வீரர் என்ற அந்தஸ்துக்கு உயர்ந்துள்ளார். தனது செயல்பாடுகள் குறித்து மெஸ்சி அளித்த சிறிய பேட்டி:

• ஆண்டின் சிறந்த வீரர் வென்றது மகிழ்ச்சி அளித்ததா?

சிறந்த வீரர் விருது வென்றது எனது வாழ்வின் மறக்க முடியாத தருணம். இருப்பினும் விருது வெல்ல வேண்டும் என்று நோக்கில் போட்டிகளில் பங்கேற்பது இல்லை. கால்பந்து அரங்கில் தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த விரும்புகிறேன்.

• உலகின் "நம்பர்-1" வீரராக உருவெடுத்துள்ளது பற்றி உங்கள் கருத்து?

கால்பந்து உலகில் நான் ஒன்றும் ராஜா அல்ல. "நம்பர்-1" இடத்தில் எனக்கு நம்பிக்கையும் இல்லை. என்னைப் பொறுத்த வரை, நான் பங்கேற்கும் போட்டிகளில் எனது அணி வெற்றி பெற வேண்டும். இதுவே எனது விருப்பம்.

• கிளப் போட்டிகளில் பார்சிலோனா அணியின் செயல்பாடுகள் எப்படி உள்ளது?

இந்த ஆண்டின் கிளப் சாம்பியன் பார்சிலோனா தான். சாம்பியன்ஸ் லீக், ஸ்பானிஷ் லீக் தொடர்களில் எனது அணி சிறப்பாக செயல்பட்டுள்ளது. எனது செயல்பாடுகளால் மட்டும் அணிக்கு இப்பெருமை கிடைக்க வில்லை. அணி வீரர்கள், நிர்வாகிகள், பயிற்சியாளர் அனைவருமே பார்சிலோனாவின் எழுச்சிக்கு காரணம்.

• உங்களது ஆட்டம், மாரடோனாவின் ஆட்டத்துடன் ஒப்பிடப்படுவது பற்றி உங்கள் கருத்து?

உலகின் தலைசிறந்த வீரர் மாரடோனா. அவரை என்னுடன் ஒப்பிடுவது மகிழ்ச்சி என்றாலும், அதற்கான தகுதி எனக்கிருப்பதாக நான் கருதவில்லை. தற்போது தான் எனக்கு 22 வயதாகிறது. கால்பந்து அரங்கில் சாதிக்க, இன்னும் போதிய அனுபவம் தேவை என கருதுகிறேன்.

• உங்களுக்கு நாட்டுப்பற்று இல்லை என சமீபத்தில் எழுந்த குற்றச்சாட்டு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

அது மீடியாவில் வெளியான தவறான குற்றச்சாட்டு. முதலில் நான் அர்ஜென்டினாவை சேர்ந்தவன். தேசிய அணியில் தாய்நாட்டுக்காக விளையாடுவதையே பெருமையாகக் கருதுகிறேன். பார்சிலோனா அணி சார்பில் கிளப் போட்டிகளில் பங்கேற்பது காலத்தின் செயல். அதற்காக என்னை நாட்டுப்பற்று இல்லாதவன் என்று கூறுவது ஏற்றுக் கொள்ள முடியாது.

•உலககோப்பையை அர்ஜென்டினா கைப்பற்றுமா?

உலககோப்பை தகுதிச் சுற்றுப் போட்டிகளில் அர்ஜென்டினாவின் செயல்பாடுகள் பெரிய அளவில் திருப்தி அளிக்க வில்லை. இருப்பினும் உலககோப்பைக்கு தகுதி பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. தொடருக்கு இன்னும் 6 மாதங்கள் மட்டுமே உள்ளது. அதற்குள் தீவிர பயிற்சி மேற்கொண்டு அணியை வலுப்படுத்துவோம். கோப்பை வெல்ல கடுமையாகப் போராடுவோம்.

### கால்பந்தின் பிதாமகன்!

இசைக்காக பிறந்தவர்தான் பீத்தோவன் என்று கூறுவார்கள். அதுபோல் கால்பந்துக்காகவே பிறந்தவர்தான் பீலே. பீலேயின் இயற்பெயர் எட்சன் அரன்டெஸ் டு நஸ்ஸிமென்டோ. பிரேசிலில் உள்ள ட்ரெஸ் கோரகோஸ் நகரில் 1940ம் ஆண்டு அக்டோபர் 23-ம் தேதி பிறந்தார். பீலே எப்போதும் கால்பந்து விளையாட்டிலேயே மோகம் செலுத்தி வந்ததால், அவருடைய பள்ளி நண்பர் தனக்குப் பிடித்த கால்பந்து வீரர் "பைலே"வின் பெயரை, அவருக்கு சூட்டினார். "பைலே" பின்னர் மருவி பீலே ஆனது. முதன்முதலில் தனது வீட்டை சுற்றியுள்ள நண்பர்களை வைத்து கால்பந்து அணியை உருவாக்கினார் பீலே.

படிப்படியாக முன்னேறி 15வது வயதில் பிரேசிலின் சாண்டோஸ் எ.்.ப்சிஜூனியர் அணியில் இடம்பிடித்தார். பின்னர் சீனியர் அணிக்கு முன்னேறி, அணியில் முக்கிய வீரராக இடம்பிடித்தார். அதன்பிறகு தேசிய அணியில் சேர்ந்து 18வது வயதில் சர்வதேசப் போட்டிகளில் கால்பதித்தார். 1958-ம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டியில் பங்கேற்றார். இறுதிப் போட்டியில் ஸ்வீடனுக்கு எதிராக இரண்டு கோல்களை அடித்து உலக வரலாற்றில் இடம்பிடித்தார். அதன் பின்பு 1962 உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் சதைப் பிடிப்பு காரணமாக அவர் வெளியேறினாலும், முன்னதாக அவர் அடித்த 2 கோல்களால் அவரது அணி இறுதிப் போட்டியில் வெற்றிவாகை சூடியது. 1966-ல் உலகக் கோப்பை போட்டியில் மூன்றாவது சுற்றிலேயே அவரது அணி வெளியேறி அதிர்ச்சிக்குள்ளாகியது. ஆனால் 1970-ல் இத்தாலிக்கு எதிரான இறுதிப் போட்டியில் 4-1 என்ற கோல் கணக்கில் பிரேசில் அணி வெற்றிபெற்றது. பின்னர் 1974 வரை சாண்டோஸ் கிளப்புக்காக ஆடிய அவர், பின்னர் சர்வதேசப் போட்டிகளிலிருந்து விலகினார். இவர் அடித்த மொத்த கோல்கள் 584. இதில் சர்வதேசப் போட்டிகளில் மட்டும் 92 கோல்கள். இவரது வாழ்நாள் முழுவதுமான கோல்களின் எண்ணிக்கை 1283.

1999-ம் ஆண்டு நூற்றாண்டின் தடகள வீரர் என்ற பட்டத்தை சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி வழங்கி கௌரவித்தது. 2000-மாவது ஆண்டு சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் நூற்றாண்டுக்கான கால்பந்து வீரர் விருது, புகழ்பெற்ற லாரஸ் காஸ்மோஸ் விருது, 2005-ம் ஆண்டில் பிபிசி விளையாட்டு வீரர்களுக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

### 20-ம் நூற்றாண்டின் ஒப்பற்ற டென்னிஸ் வீராங்கனை

மேற்கு ஜெர்மனியில் 1969-ம் ஆண்டு, ஜூன் 14-ல் பிறந்த ஸ்டெ.்.பைனி மரியா கிரா.்.ப் (ஸ்டெ.்.பி கிரா.்.ப்) உலகின் நம்பர் ஒன் வீராங்கனை பட்டத்தை நீண்ட நாட்களுக்கு (377 வாரங்கள்) தக்கவைத்துக் கொண்டவர்.

ஸ்டெ.்.பி கிரா.்.ப் மூன்று வயதாக இருக்கும்போது வீட்டில் இருக்கும் டென்னிஸ் மட்டையை லாவகமாக சுழற்றுவதைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தார் அவரது தந்தை. அவரிடம் ஒளிந்திருந்த திறமையை வெளிக்கொணர அவரை டென்னிஸ் பயிற்சி மையத்தில் சேர்த்தார். 5 வயதாக இருக்கும்போது முதல் போட்டியில் பங்கேற்றார். அதன்பிறகு ஜூனியர் பிரிவில் தொடர்ச்சியாக பட்டங்களை குவித்தார். 12 மற்றும் 18 வயதுக்குட்பட்டோருக்கான ஐரோப்பிய சாம்பியன் பட்டத்தை 1982 இல் வென்றார்.

1982-ல் தொழில்முறையாக டென்னிஸ் விளையாடத் தொடங்கினார். ராங்க் பட்டியலில் 124வது இடத்தில் இருந்தவர் ஒரே ஆண்டில் 84வது இடத்துக்கு முன்னேறினார். 1984-ல் விம்பிள்டன் போட்டியில் பிரிட்டனின் ஜோ டூரியைத் தோற்கடித்து ஆச்சரியத்தை ஏற்படுத்தினார். அதன்பிறகு படிப்படியாக முன்னேறி உலக அரங்கில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார். அடுத்தடுத்து பல பட்டங்களைப் பெற்றார்.

ஆஸ்திரேலியன் ஓபன் (4 முறை), பிரெஞ்ச் ஓபன் (6 முறை), விம்பிள்டன் ஓபன் (7 முறை), அமெரிக்கன் ஓபன் (5 முறை), டபிள்யூடிஏ சாம்பியன்ஷிப் (5 முறை), ஒலிம்பிக் போட்டி (1988-ல் தங்கம்) என மகளிர் டென்னிஸில் உள்ள அத்தனை போட்டிகளிலும் பங்கேற்று சாம்பியன் பட்டம் வென்றவர். அனைத்து கிராண்ட் ஸ்லாம் ஒற்றையர் போட்டிகளிலும் தலா நான்கு முறை வெற்றிபெற்ற ஒரே பெண் இவர். இரட்டையர் போட்டியிலும் 11 முறை பட்டம் வென்றுள்ளார். எல்லாவற்றுக்கும் மேலாக 22 முறை கிராண்ட் ஸ்லாம் ஒற்றையர் பட்டத்தை வென்றவர் (உலகின் நம்பர் 2). (மார்கரெட் கோர்ட் என்பவர் 24 முறை பட்டம் வென்றுள்ளார்.)

1988-ல் ஒரே ஆண்டில் அனைத்து கிராண்ட் ஸ்லாம் போட்டிகளிலும் ஒலிம்பிக் போட்டியிலும் பட்டம் வென்று உலகின் நம்பர் ஒன் வீராங்கனையாக திகழ்ந்தவர். மகளிர் டென்னிஸ் சங்கத்தின் உலகின் நம்பர் ஒன் வீராங்கனையாக நீண்ட நாட்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர். ஒற்றையர் பட்டங்களை 107 முறை வென்றுள்ளார். அசோசியேட்ஸ் பிரஸ் சார்பில் அமைக்கப்பட்ட குழுவின் முடிவின்படி 20-ம் நூற்றாண்டின் ஒப்பற்ற டென்னிஸ் வீராங்கனை என்ற பட்டத்தைப் பெற்றவர்.


1999-ல் ஓய்வுபெறும்போது உலகின் 3-வது வீராங்கனை என்ற பட்டத்தைப் பெற்றிருந்தார். ஆடவர் டென்னிஸ் போட்டியில் ஜாம்பவனாக இருந்த ஆந்த்ரே அகஸ்ஸியை 2001 அக்டோபர் 22-ம் தேதி மணம் முடித்தார்.



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி 16ஆம் பக்கம்


**ELECTRICAL WORKS**



***FRIDGE, WASHER, DRYER*** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - ***416-286-2880***

# 2010 இல் ஆதனத்தில் முதலீடு

## ஒரு நோக்கு

புது வருட வாழ்த்துக்கள்

புதிய வருடத்தில் ஆதனவியல் சம்பந்தமான முதல் கட்டுரை. இதில் எனது அனுமானம் தொடர்கிறது. 2009ஆம் ஆண்டு ஆதன வியாபாரம் பல கேள்விக்குறிகளுடன் ஆரம்பமாகியது, என்பதனை பலர் அறிந்திருப்பீர்கள். 2009 ஆண்டில் முதல் மூன்று மாதங்களும், அதற்கு முந்தைய வருடத்தில் (2008) இறுதி நான்கு மாதங்களிலும் (செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் 2008), வியாபாரம் விலை, விற்பனை விழுக்காட்டின் தொடர்ச்சியாகவே ஆரம்பமாகியது. பல முகவர் நிலையங்கள் பணநெருக்கடி நிலையிலேயே இருந்தன. முகவர் நிலையங்களில் (Brokerages) சில திவாலாகி விட்டன. சில அந்தக்கட்டத்திற்கு அண்மித்து விட்டன.

ஆனால்..., உலக நாடுகளின் ஒற்றுமையான திட்டங்கள் கனடிய மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு Jim Flagerty, இன் அனுசரணையுடன் மத்தியவங்கியின் ஆளுனர் திரு. மார்க்கார்னி கனடிய வங்கியின் வட்டிவீதத்தை, சரித்திரத்திலேயே அறிந்திராதளவிற்கு குறைத்து, தொடர்ந்து அந்தளவிலேயே வைத்திருந்தது, போன்றவை ஆதன வியாபாரத்திற்கு மீண்டும் புத்துயிரைக் கொடுத்தது எனக்கூறலாம்.

வியாபார மாற்றம் ஏற்பட்டது. மீண்டும் மக்கள் ஆதனச் சந்தைக்கு வந்தார்கள். ஆதன வியாபாரம் புத்துணர்ச்சி பெற்றது. ஏப்ரல், மே இவ்வாறு ஒவ்வொரு மாதங்களும் வியாபாரம் அதிகரித்தே சென்றது. இதனால் இவ்வருடத்தின் பல மாதங்கள் புதிய, புதிய வியாபாரச்சாதனைக்களை படைத்தன. ஆதனவியல் வியாபாரத்தில் இதற்கு முந்தைய காலத்தில் (1989 - 1996) ஏற்பட்ட கசப்பான அனுபவத்தில் இருந்து பலரிற்கு இந்த, உடனடியான மாற்றத்தை ஏற்கமுடியாமல் இருந்தது. ஏழு மாதத்திற்குள் வியாபாரம் உள்ள நிலையை அடைந்தது. பொருளாதாரம் நெருக்கடியான கட்டத்திலிருந்து, பொருளாதார வளர்ச்சியை நோக்கி மெல்ல மெல்ல மாறியது. முக்கியமாக, 2008ஆம் ஆண்டு சராசரி வீட்டு விலையை விட 2009 ஆண்டு அதிகமாகவே இருந்தது. 2009 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஆதனவியல் சம்பந்தமான, சகல எதிர்வு கூறுபவர்களினதும், கருத்தை மறுதலித்தது போல 2009ஆம் ஆண்டு நிறைவடைந்துள்ளது.

2007ஆம் ஆண்டின் சராசரி வீட்டுவிலை $376,236
2008ஆம் ஆண்டின் சராசரி வீட்டுவிலை $379,347
2009ஆம் ஆண்டின் (Project) $395,000

மே 2008 ஆம் ஆண்டில் உலக நாடுகளில் குறிப்பாக அமெரிக்காவில் ஏற்பட்ட Sub Prime Mortgage Crisis, இதனைத்தொடர்ந்து உலகளவில் பொருளாதார நெருக்கடி, இதனை முறையாக கையாளுவதற்காக மத்திய நிதி அமைச்சர் 2008ஆம் ஆண்டின் ஒக்ரோபரில் ஏற்கனவே நடைமுறையிலிருந்த பூச்சிய முதலீட்டுடன் வீடு வாங்கலாம் என்ற நிலையை குறைந்தது 5% முதலீட்டுடனும் 40 வருடங்களில் வாங்கிய ஆதனக்கடனை 35 வருடத்தில் திருப்பி வழங்க வேண்டும் என்ற புதிய நிலைப்பாட்டை ஏற்படுத்தினார். இதனால் வீடு, மனை வாங்குபவர்களின் நிலைமை இறுக்கப்பட்டது. ஆஸ்தி வியாபாரம் மந்த நிலையை அடைந்தது. இந்நிலைமை மார்ச் 2009வரை தொடர்ந்தது எனக் கூறலாம். தொடர்ச்சியான வட்டிவீத இறக்கம் வியாபாரத்தை மாற்றம் அடையச் செய்தது. இந்நிலை ஏப்ரல் 2009இல் அதிகரிக்க தொடங்கியது. இதன் தொடர்ச்சியாக வீடு, மனை, வியாபாரம் தொடர்ந்து அதிகரித்தே வருவதனை அவதானிக்க கூடியதாக உள்ளது.

உதாரணமாக ஏற்கனவே கட்டப்பட்டு, வாழ்ந்து வருகின்ற வீடு, மனைகள் விலை சராசரியாக இருக்கவேண்டிய விலையைவிட (15 -35)% அதிகமாக இருப்பதாக Bay Street பொருளதார நிபுணர் David Rosenberg தெரிவித்துள்ளார்.

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 311**

தொடர்ச்சி 14ஆம் பக்கம்


HomeLife GTA Realty Inc., Brokerage*
HomeLife Higher Standards
Independently owned & operated
"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"



Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

1711 McCowan Rd. #206, Toronto
Tel.: 416.321.6969

145 Traders Blvd # 29, Mississauga
Tel.: 905.712.2666

Morningside heights - New Plaza
- 4 Buildings
- Medical Building
- Retail Building
- 21,000 Sqft
- Restaurant Building
- Food/Restaurant Building
- **Location - Moringside & Mcnicoll Ave** (South West Corner)
- Entrances from Morningside and Mcnicoll Ave
- Surrounded by Residential Area
- Very close to newly constructing Banquet halls and TTC.

TRIDEL - Special Prices
Highrise Condo. Unit for sale.
1. Downtown - Next to CN Tower / Rogers centre (Sky dome) / MTCC
2. Kennedy / HWY 401 - 1 bedroom , 1 bedroom + den, 2 bedroom, 2 bedroom + den, 3 bedroom. (upto **$15,000** discount)

Party Rental Business for Sale
- Brimley/Progress
- Lots Of Rental Items Meant For Variety Of Functions/Occasions.
- Complete Training To Be Provided.
- Gross Rent $2800/Month Plus Utilities.
- Asking Price $99,000 Plus Stock

NEW PROJECT IN MARKHAM
- PROFESSIONAL OFFICE
- RESTAURANT
- RETAIL AND MORE

Commercial/Retail Lease
- Markham/Steeles
- 3331 Markham Rd
- Great Location! Brand New Plaza Located At The High-Traffic
- Golden Opportunity To Start Your Own Business.
- Asking price $1,799 Gross Lease



Commercial/Retail for sale
- 9909 Highway 48 Rd. • Markham/Major Mac
- Total Area: 1,233 Sq Ft • Price $429,900
- Sought After Location In A High Visibility Strip Plaza.
- Many Suitable Uses Including Restaurant/Retail & Services.

Commercial/Retail for Lease
- 5215 Finch Ave E, Middlefield & Finch
- Rent $950 Gross Lease
- Lowest Rent To Afford Any Bussiness, Great Opportunity!
- Underground And Surface Parking

Nantha Aiyadurai
Cell: 613 850 9931
Coldwell Banker Coburn Realty
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்




Relocation Service
OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை
Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# வீட்டில் நடந்த விபத்தில் விரல்கள் துண்டிக்கப்பட்டவருக்கு கைகொடுத்த வீட்டுக் காப்புறுதி!

## COMPENSATED BY HOME LIABILITY INSURANCE COVERAGE

## கனடிய தகவல் தொடர் 116

அந்த கோடைக்காலத்தின் ஒரு இனிமையான மாலை நேரம்!

வீட்டு மின் இணைப்பில் வயர்களினால் தொடுக்கப்பட்ட புல் வெட்டும் இயந்திரத்தின் உதவியுடன் தங்கள் வீட்டின் முன் பகுதியிலிருந்த அடர்ந்து படர்ந்திருந்த புற்களை வெட்டிக் கொண்டிருந்தார் எங்கள் தமிழ் பெண்மணி ஒருவர்.

அந்த புல் வெட்டும் இயந்திரமோ விட்டுவிட்டு ஏதோ கோளாறுகளினால் அந்த நேரம் தொல்லைகொடுத்து கொண்டிருந்தது. எந்நேரமும் அவர்களுக்கு மனமுவந்து உதவும் பக்கத்து வீட்டு அந்த வேற்று நாட்டு இளைஞன் இயந்திர கோளாறினால் குழம்பிக்கொண்டிருக்கும் எங்கள் பெண்மணிக்கு இயந்திரத்தில் என்ன கோளாறு என்பதனை பார்த்து உதவி செய்ய அந்த நேரம் முன்வந்தான்.

இயந்திரத்தினை பின்பக்கமாக பிரட்டி பிரட்டி ஏதாவது கோளாறுகள் தடங்கல்கள் உள்ளதா என அந்த இளைஞன் கூர்ந்து பார்த்தான். இயந்திரத்தின் கீழ் அடிப்பகுதியில் கூர்மையாக இருந்து பம்பரம் போல் சுழன்று சுழன்று புற்களை வெட்டிக் கொடுக்கும் அந்த இரும்பு பிளேற்றினுள் ஏதாவது தடங்கல்கள் உள்ளதா? என தமது கைவிரல்களை விட்டு பார்த்து அதற்கிடையில் சிக்குப்பட்டுக்கொண்டிருந்த புல் துகள்களை துப்பரவாக்கி அந்த பகுதியில் ஏதாவது கோளாறுகள் உள்ளதா? என்பதே அந்த நேரம் அவரின் பரிசோதனையாக இருந்தது.

இங்கு மின் இணைப்புக்கள் தொடுக்கப்பட்டிருந்தது. ஓடிக்கொண்டிருந்த இயந்திரம் நிறுத்தப்படாத நிலையில் ஆபத்து எந்த ரூபத்திலும் திடீர் என வந்து உருவாகும் என்ற எச்சரிக்கையில்லாது கோளாறு எங்கே உள்ளது என்பதனை பரிசோதனை செய்து கொண்டிருந்த அந்த கணம்!

பம்பரம் போல் சுற்றியடித்து புல் வெட்டும் கூர்மையான அந்த பிளேற் திடீரென சுழன்று கண் மூடி விழிக்கும் அந்த இமைப் பொழுதில் அந்த இளைஞனின் விரல்களை துண்டித்துவிட்டது.

இரத்தம் பெருக்கோடும் நிலையில் அந்த இளைஞன் அலறிய அலறல் பூட்டியிருந்த வீடுகளினுள் இருக்கும் அயலவர்கள் யாவரையும் அந்த இடத்துக்கு ஓடி வர பண்ணியது. வழமை போல் அவசர அம்புலன்ஸ் சேவையினர் அழைக்கப்பட்டு ஆஸ்பத்திரிக்கு அந்த இளைஞன் எடுத்து செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது.

என்ன? ஒரு கையின் விரல்கள் ஏதோ கவலையீனமான செய்கையினால் துண்டாடப்பட்ட ஒரு பரிதாப நிலைமை. உதவி செய்ய வந்த அந்த இளைஞனுக்கு தங்களால் தங்கள் வீட்டின் முன்பு தங்கள் மின் இணைப்பில் இருந்து ஏற்பட்ட விபத்தினால் நிரந்தரமாக விரல்கள் துண்டிக்கப்பட்டுவிட்டதே என்பது வாழ்வில் தாங்கமுடியாத ஒரு நிரந்தர துக்கமாக அந்த பெண்மணிக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் இருந்தது.

இது ஒரு எதிர்பாராத துர்பாக்கிய பரிதாபகரமான ஒரு சம்பவம்! சம்பவம் முடிந்து விட்டது. நிரந்தரமாக கை விரல்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் குணமடைந்து அந்த இளைஞனும் வந்துவிட்டான்.

**பாதிக்கப்பட்ட இந்த இளைஞனுக்கு காப்புறுதியின் அரவணைப்பு என்பது எப்படி கைகொடுத்தது?**

**காப்புறுதி முகவர் என்ற ரீதியில் எப்படி? எந்தவழியில்? காப்புறுதி என்ற உதவும் கரத்தினை இந்த இளைஞனை நோக்கி இணைத்துக்கொண்டோம் என்பதே யாவரும் இங்கு அனுபவரீதியாக அறிந்து கொள்ள வேண்டிய தகவல் பிரிவு ஆகும்.**

ஒவ்வொரு வீட்டுக் காப்புறுதியிலும் (Home Owners Insurance)

பொறுப்பு காப்புறுதி பிரிவு (Liability Insurance Coverage) என ஒரு பிரிவு உள்ளது. தங்கள் வீட்டுக்கு வருகை தரும் மூன்றாவது நபர் எவருக்கும் தங்கள் வீட்டினுள் இருந்து ஏற்படும் ஏதோ ஒருவகையான தங்களின் தப்பு அல்லது தவறு என்பது பாதிப்புக்கள் ஏதாவது ஒன்றினை உருவாக்குமாயின் அந்த பாதிப்பினை எதிர்கொண்டவர்களுக்கு நட்டஈடு வழங்கவேண்டும் என்பதனை இப்பிரிவு (Home Insurence Liability Section) வலியுறுத்துகின்றது.

ஏனையோருக்கு வீட்டில் இருந்து ஏற்படலாம் என எதிர்பார்க்கும் ஆபத்துக்களை பின்வருமாறு குறிப்பிடலாம்.

(1) வீட்டின் முன் உள்ள பனிகட்டிகள் துப்பரவாக்காத நிலையில் ஒருவர் வீழ்ந்து கை, கால், நாரிகள் உடம்புகளை உடைத்து அது நிரந்தரமாக பாதிக்கப்பட்டால் அதற்கு ஒரு நட்டஈடு.

(2) வீட்டிற்கு வருகை தந்த வெளியார், வீட்டினுள் இடறி விழுந்து காயப்பட்டு அக்காயம் நிரந்தர உடல் பாதிப்பினை உருவாக்கினால் அதற்கு ஒரு நட்டஈடு. (ஆனால் ஒன்று வீட்டினுள் வசிப்பவர்கள் எவராவது விழுந்து காயம்பட்டு விட்டு நட்டஈடு இப்பிரிவிலிருந்து கோரமுடியாது.)

(3) மேலே குறிப்பிட்ட நிலையில் உள்ளோர் சிறுகாயங்களுக்கு உட்பட்டால் அதற்குரிய மருத்துவ செலவுகள் (Voluntary Payment For Medical Expenses)

(4) வீட்டு உரிமையாளர்கள் மற்றும் வீட்டில் இருப்பவர்களினால் பக்கத்து வீட்டுக்காரனின் சொத்துக்கள் உடமைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள். உதாரணமாக தங்கள் வீட்டிலிருந்து உருவாகும் தீ என்பது பக்கத்து வீட்டுகள் அவர்களின் உடமைகளை பாதித்து இருந்தால் அதற்கு வழங்கும் நட்டஈடுகள்.

(5) கொண்டோமீனியம் (Condominium) அல்லது தொடர்குடியிருப்பு வீடாக (Apartment Resident Building) இருந்தால் கீழ் மாடியில் குடியிருப்பவர்களுக்கு நீர் குழாய்களில் இருந்து கசியும் நீரினால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு நட்டஈடு.

இப்படி பல்வேறு நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கி வீட்டு உரிமையாளர்களாகிய தங்களை அந்த பாதிப்புக்குள்ளான பொறுப்பில் இருந்து விடுவிப்பதனை வீட்டு காப்புறுதியின் இப்பிரிவு என்றும் கைகொடுக்கும் நிலையில் உள்ளது.

இங்கு மேலதிகமாக அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான விடயம்! இதே உரிமையாளர் உலகில் எந்த இடத்திலும் தற்காலிகமாக போய் நிற்கும் இடத்தில் தமது தெரியாத்தனமான தவறினால் ஏனையோருக்கு பாதிப்புக்கள் ஏற்பட்டு பாதிக்கப்பட்டவர் அதனை சரியான முறையில் பாதிப்பினை உருவாக்கியவரை நோக்கி சட்ட ரீதியாக நட்டஈடுகோர முயற்சிக்கும் போது இப்பாதிப்பு நிஜமானது என்பது நிரூபிக்கப்படும்போது கனடாவில் உள்ள வீட்டு காப்புறுதி இந்த சந்தர்ப்பத்திலும் பாதிக்கப்பட்டவனுக்கு நட்டஈடு வழங்கி அடுத்தவனின் நட்டத்திற்கும் பாதிப்புக்கும் காரணமான வீட்டு உரிமையாளரையும் பாதுகாக்கின்றது.

பூரணமாக பாதிக்கப்படாத ஒருவர் பாதிக்கப்பட்டதாக குறிப்பிட்டு இதே வழியில் நட்டஈடு கோர சில நேரங்களில் முயற்சித்தாலும் கூட வீட்டு உரிமையாளரை தப்பிக்க வைக்க வேண்டிய சகல வக்கீல் செலவுகள் சட்ட செலவுகளையும் (Legal Cost For Groundless Claims) இக்காப்புறுதி பிரிவு கைகொடுத்து உதவுகின்றது.

பாதிக்கப்பட்டவரின் பாதிப்பின் அளவு என்பது எவ்வளவு நிலைப்பாட்டில் எந்த அளவில் நிஜமாக பாதிக்கப்பட்டவர் என்பது காப்புறுதி சட்டத்தின் முன்பு நிரூபித்தல் வேண்டும்.

இப்பாதிப்புக்கு காப்புறுதி செய்துள்ள வீட்டின் உரிமையாளர் ஏதோ ஒரு வகையில் பொறுப்பாளர் ஆகின்றார் என்பதும் நிரூபிக்கப்படல் வேண்டும். (ஏனெனில் நட்டஈடு வழங்கும்போது காப்புறுதி கம்பனி காப்புறுதி செய்த தமது வாடிக்கையாளர் பக்கம் தப்பு இல்லாமல் இருக்குமா? என்ற ஆதாரங்களை தேடி நிரூபிப்பதற்கென தங்கள் செலவில் முயற்சி செய்யும் தப்பு என்பதும் இத்தப்பில் வீட்டு உரிமையாளரின் பொறுப்பு என்பதும் நிரூபிக்கப்படும் போது நட்டஈடு வழங்குவதில் கம்பனி தப்பவே முடியாது)

சரி இங்கு நடந்த சம்பவத்திற்கு வருவோம். இங்கு நடந்தது நிஜமான சம்பவமே! தங்களுக்கு உதவி செய்ய என வந்து தங்களால் பாதிக்கப்பட்டவருக்கு ஏதோ ஒரு வழியில் நட்டஈடு வழங்கினால் அதுவே தங்களுக்கு ஒரு ஆத்ம திருப்தியாக இருக்கும் என்பதில் அந்த தமிழ் குடும்பமும் ஆர்வமாக இருந்தார்கள்.

நட்டஈடு கோரும் விசாரணை முன் எடுக்கப்பட்ட போது இவர்களின் காப்புறுதி கம்பனியின் புலன்விசாரணைக் குழு நேரடியாக வீட்டிற்கு வந்து விசாரணை நடத்தியது. நடந்த சம்பவத்தில் உதவி செய்ய அழைத்தபோது ஏற்பட்ட விபத்து என்பதனை நல்ல மனதுடன் இவர்கள் ஏற்று கொண்டார்கள்.

அந்த வீட்டின் முன்பகுதி புற்றரை, புல் வெட்டிய இயந்திரம் யாவற்றினையும் இவர்களினது காப்புறுதி கம்பனியின் புலன்விசாரணை பிரிவினர் படம் எடுத்துக் கொண்டார்கள். பாதிக்கப்பட்டவரின் மருத்துவ அறிக்கைகள் யாவும் காப்புறுதி கம்பனி எடுத்து பரிசிலனை செய்து கொண்டது. சம்பவம் நடந்தது உண்மைதான் என்பது மேலும் ஆதார பூர்வமாக நிரூபிக்கப்பட்டபோது விரல்களை நிரந்தரமாக இழந்தவனுக்கு காப்புறுதி கம்பனி நட்டஈடு வழங்கி பாதுகாப்பு அளித்தது. தங்களுக்கு உதவ முன்வந்து பாதிக்கப்பட்டவனுக்கு ஏதோ ஒரு நிவாரணம் கிடைத்தது எங்கள் தமிழ் குடும்பத்தினருக்கு ஒரு பூரண ஆத்ம திருப்தி. ஆனால் தொடர்ந்து வீட்டுக் காப்புறுதியினை புதுப்பிக்கும் போது விலை கட்டணம் என்பது இந்நட்டஈடு கோரல் காரணமாக உயர்வது என்பது தவிர்க்கமுடியாத ஒன்று! பரவாயில்லை காப்புறுதி கைகொடுத்துவிட்டது.

இங்கு வீடுகள் சொந்தமாக வைத்திருப்பவர்கள் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம்! இவ்வாறு பாதிக்கப்பட்டவர் ஏதாவது ஒருவர் சட்டரீதியாக வழக்கு தொடர்ந்து வீட்டு உரிமையாளரை ஆட்ட தொடங்கினால் முதலில் வழக்கு செலவும் தொடர்ந்து தீர்ப்பும் இந்த வழிகளில் பாதிக்கப்பட்டவருக்கு சாதகமாக பாதகமாக போனால் சொந்த பணத்திலிருந்தே வீட்டு உரிமையாளன் கொடுத்து தீர்க்க வேண்டி வந்திருக்கும்.

இங்கு வீட்டுக்கு காப்புறுதி செய்து வைத்துவிட்டால் பயப்பட தேவையில்லை. காப்புறுதி பார்த்து கொள்ளும். நாம் நிம்மதியாக தூங்கலாம்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

ஆடைகள் விற்பனைக்கு
NEILSON & WICKSON TRAIL
இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சாறிகள், சுடிதார்கள் விற்பனைக்கு உண்டு. மிகமிக மலிவான விலையில் பெண்களுக்கும், சிறுவர்களுக்குமான உடைகள்.
தொடர்புகளுக்கு : 647.407.1109




வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...
Elaguppllai (Mike) Srinathan B.Sc
Sales Representative
Dir: 416-276-1225 Off: 905-470-9800
Email: esrinathan@trebnet.com
RE/MAX
SOLD
Mccowan/ Hwy 401
$184,900
Condo Apartment. Bed rooms 1+1, Washroom 1 Well Maintained Suite, In Mint Condition, Located Close To 401 & Town Centre Steps To Ttc
Markham/Lawrence
$278,900
Detached Bungalow Bed rooms 3+2, Washrooms 2 All Brick Bungalow Renovated Main Floor Bath, Finished Basement With 2 Br
9th & Riverwalk
$299,000
Detached 1½ Story Bed rooms 3, Washroom 0 House Approx 1700 Sf * Addition & Detached Garage Allowed
Sheppard/ Meadowvale
$319,800
Townhouse 3 story, Bed rooms 3+1, Washrooms 4 Gleaming Hardwood Floors On Main & Upper Level Steps To Ttc , Close To 401.
Hoover Park & 9th Line
$334,900
Semi Detached 2 Story Bedrooms 3, Washrooms 3, Years Old. Bright, Open Concept With Many Windows Close To Schools
16th Ave/Markham Bypass.
$339,900
Townhouse 2 Story, Bedrooms2+1, Wasroom 3 Well Appointed Freehold Townhome , Walk To New Shoppes In Cornell
Markham And Passmore
$379,900
Detached 2 Story, Bed rooms 4 Washromss 3, Approx. 1900 Sq.Ft, Large Linen Closet On 2nd Flr. Long 2 Car Driveway
Markham & Steeles
$384,900
Semi Detached 2 Story, Bed rooms 3+1 Washrooms 4. 6Yr Old , Double Door Entrance,Close To Schools,Shopping
Morningside/401
$424,900
Detached 2 Story, Bed rooms 4, Washrooms 3 1924 Sq.Ft. 4 Yrs New Home, Double Door Entry, Master Bdrm W/4 Pc, Family Rm With Fire
Markham/Steeles
$429,900
Detached 2 story, Bed rooms 3 Washrooms 3, Close To School,Shopping,All Brick,Majectically Upgraded Beautiful Location
Morningside / Old Finch
$438,000
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, Only 7 Years Old! Approx. 2800 Sq.Ft., 4 Large Bedrooms Oak Staircase
Markham/16th Ave.
$439, 900
Detached 2 Story, Bed rooms 4, Washrooms 3 Close To Mount Joy 'Go'station, Schools,& Shopping Clear Open View
Mccowan/Steeles
$444,900
Detached 2 Story, Bedrooms 4+2, Washrooms 4, Ready To Move In Condition, Upgraded Floorsand Kitchen, Roof (3Yrs), Windows (2Yrs) Close
Markham/Denison
$449,900
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Beautifully Upgraded! 2 Years Old!, Closer To Schools, Shopping Incl: Wal
9th Line/16th Avenue
$ 459,900
Detached 2 Story, Bedrooms 3, Washroom 3 Only 6 Years Old. Separate Living And Dining Rooms. Top Quality Interlocking
9th Line/14th Avenue
$524,900
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, 2419 Sq Ft. Water Sprinkler System, Backyard Fenced With Cedar Trees, Interlock Driveway
Highglen/Mccowan
$529,000
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Hardwood Floors, Close To School, Shops, Mosque, Church, Community Centre &
14th/9th Line
$549,000
Detached 2 Story, Bedrooms 5 Washrooms 3, Close To Schools, Parks, Shopping. Exterior Pot Lights, Oak Stairs, High Ceiling.
Woodbine/Major Mac
$559,000
Detached 2 Story Bed rooms 4+1, Washrooms 4 Steps To Highway 404, Yrt, Schools, Parks, Supermarket, Plazas, Banks
9th Line/14th Ave
$649,980
Detached 2 Story Bed rooms 5, Washrooms 4, Brand New Home, 3445 Sf,Bright & Stunning, Sep Entrance To Bsmt.Steps To School, Park,
Audley & Williamson
$324,800
Detached 2 story. Bed rooms 3, Washrooms 3, 4 Yr Old 3 Bedroom 1600 Sq Ft Home In North Ajax. Just Steps To Park, Transit
Gore/Don Min./Hwy
$379,900
Detached 2 story. Bed rooms 3, Washrooms 3 Over 1800 Sqft Area. Large E/I Kitchen + B/Fast Bar And Family Room On Main
Sales of Business
$298,000 For Sale
Sale Of Business Without Property Gas Stations. Very Busy Olco Gas Station Plus Variety Store With Coffee
RE/MAX
Realtron Realty Inc. Brokerage
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7
'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

## HORMONES இயக்கு நீர்

எமக்கு உடம்பும் அதன் உறுப்புக்களும் இருந்தால் போதுமானதல்ல. இவற்றுக்கு இயக்குநீர்கள் இன்றியமையாதன. அதாவது நமது உடலின் செயல்களை கட்டுப்படுத்தும் நாளமில்லாச் சுரப்பிகளில் இயக்குநீர்கள் (Hormones) சுரந்து கொண்டு இருக்கின்றன. இச்சுரப்பிகள் உடலை இயக்குவதற்கு முக்கியமாக இருப்பதினால் இதனை 'இயக்குநீர்கள்' என அழைக்கப்படுகின்றன.

இந்த இயக்கு நீர்கள் ஒவ்வொரு உறுப்புக்களில் இருந்து உருவாகி நாளம் வழியாக வந்து இரத்தத்துடன் கலக்காமல் இரத்தத்தில் இரசாயனப் பொருளாகச் சுரப்பதினால் 'நாளமில்லாச் சுரப்பிகள்' என அழைக்கப்படுகின்றன. இதன் உறுப்பியல் பின்வருமாறு

கபச்சுரப்பி - Pituitary Gland
அட்ரீனல் சுரப்பி - Adrenal Gland
அட்ரீனல் மேற்பட்டை - Adrenal Cortex
அட்ரீனல் மைய விழையம் - Adrenal Medulla
சதையச் (கணையம்) சுரப்பி - Pancreas
தைரோயிட் சுரப்பி - Thyroid Gland
பரா தைரோயிட் சுரப்பி -Parathyroid Gland
விதை - Testicles
சூலகம் - Ovaries
என்பனவாகும்.

இந்த இயக்குநீர்கள் 7 வகையாகும். அவைகள்

1. கபச்சுரப்பி - Pituitary Gland
2. தைரோயிட் சுரப்பி - Thyroid Gland
3. பராதைரோயிட் சுரப்பி - Parathyroid Gland
4. அதிரீனல் சுரப்பி - Adrenal Gland
5. சதையச்சுரப்பி (கணையச்சுரப்பி) - Pancreas


**பாலுணர்வு சுரப்பிகள் (2)**
ஆண் - (Male) - Testicles - விதை
பெண் - (Femal) - Ovaries - சூலகம்
போன்றவையாகும்.

### கபச்சுரப்பி - Pituitary Gland

இது உடம்பில் உள்ள மற்றும் சுரப்பிகளைச் செயல்படத் தூண்டும் சக்தி கொண்டது. உடல் வளர்ச்சிக்கு முக்கிய (வளர்ச்சி, வளர்ச்சியின்மை) காரணமாக இருக்கின்றது. எலும்புகள், தசை வளர்ச்சிக்கும் உறுதுணை அளிக்கின்றது. அத்துடன் நரம்பு மண்டலத்திற்கும் நாளமில்லாச் சுரப்பிகளுக்கும் தொடர்புடையது.

**தைராய்டு சுரப்பி** - Thyroid Gland
பட்டாம்பூச்சி உருவத்தில் கழுத்தில் காணப்படுகின்றது. நமக்குத் தேவைப்படும் சக்திக்கும், திசுக்கள் வளர்ச்சிக்கும் இராசாயன மாற்றத்திற்கும் (Body Metabolism) காரணகர்த்தாவாயிருந்து செயலாற்றுகின்றது. நரம்புகள் எலும்புகள் வளர்ச்சிக்கும் தூண்டுகோலாகவும் அமைகின்றது.

**பராதைரோயிட் சுரப்பி** - Parathyroid Gland




இது தைராய்ட் சுரப்பியுடன் இணைந்து காணப்படும். கல்சியத்தை அளவாக வைத்திருக்க உதவுகின்றது. ஆனால் தைராய்ட் சுரப்பியும் இதுவும் ஒன்று அல்ல.

**சதையச்சுரப்பி (கணையச்சுரப்பி)** Pancreas
இரத்தத்தில் காணப்படும் சர்க்கரையின் அளவை ஒழுங்காக வைத்திருக்க உதவும். இதில் எபிதீலிய செல்கள் காணப்படுகின்றன. இதனகத்தே இருவகை செல்கள் (Cell) உண்டு. அவை ஆல்பா, டெல்டாவாகும். ஆல்பா ஆனது குளுக்கோசையும், டெட்டா இன்சுலினைச் சுரக்கின்றன. உணவு சீரணம் ஆவதற்கு சதையநீர் முக்கியமாகும்.

**அட்ரீனல் சுரப்பி** - Adrenal Gland
சிறுநீரகத்தின் (Kidney) மேல் முக்கோணவடிவில் அமைந்துள்ளது. 40 மி.மீ நீள அளவு கொண்டதாக இருக்கும் எனக் கூறப்படுகின்றது. நமது உடம்பிற்கு தேவைப்படும். திரவமும், உப்பும் அளவுடன் இருக்க உதவுகின்றது. உடலில் கொழுப்பில் இருந்து பல உயிர்பொருட்கள் தயாராகிக் கொண்டு இருக்கின்றன. இவற்றை Steroids என அழைக்கப்படுகின்றது. இது இரத்தோட்டத்தின் போது சுற்றிக் கொண்டு இருக்கும் கொழுப்புப் பொருள் இதனால் தயாரிக்கப்படுகின்றது.

**பாலுணர்வுச் சுரப்பிகள்** 2 Sex Glands
1. ஆண் (Male) - Testicles - விதை
2. பெண் (Femal) Ovaries - சூலகம்

இருவகைகள் பால் உணர்வுகள் வளரவும், குழந்தைகள் பிறக்கவும் இன்றியமையாதவையாகும்.

இயக்குநீர்களில் ஏற்படும் தாக்கத்தினால் சுரப்புநீரில் கூடிக்குறைந்த நிலை ஏற்பட்டுச் சிலவகை வியாதிகள் ஏற்பட இடம் உண்டு. இவற்றைச் சற்று ஆராய்வது நன்மை பயக்கும் எனக் கருதுகின்றேன்.

சலரோகத்தில் ஏற்படும் மயக்கம் - Diabetic Coma
அதிகூடிய ஊன்ம ஆக்க சிதைவு மாறுபாடு - Hyper Thyrodism

அதிகுறைந்த ஊன்ம ஆக்கச்சிதைவு மாறுபாடு - Hypothyrodom.

**இன்சுலின் அதிர்ச்சி** - Insulin Shock.

சதையச் சுரப்பில் புற்று Cancer of the pancreas அட்ரீலை சுரப்பில் புற்று Cancer of the Adrenal Gland தைரோயிட் சுரப்பியில் புற்று Cancr of the Thyroid Gland நீரிழிவு நோய்.

தைரோயிட் சுரப்பியில் வீக்கம் Goitre மேலும் பிறக்கும் எம் குழந்தைகளுக்கும் தைரோயிட் கூடிக் குறைந்து காணும் இடத்து உடலின் வளர்ச்சியும் மூளையின் பகுதிகள் பாதிக்கப்படும் நிலையும் ஏற்படலாம். கற்பமாக இருக்கும் போது தாய்மார் இதில் கண்ணும் கருத்துமாக இருந்து தவறாது உரிய வைத்தியர்களிடம் சென்று நன்கு பரீட்சித்து சிகிச்சை பெற்று வருவது மிக நன்று.

மேலும் எமக்கு தைரோயிட் சுரப்பு அதிகமாகச் சுரப்பதினால் Hyper Thyrodstm என்னும் வியாதி ஏற்படும். இது பெரும்பாலும் பெண்களுக்கு ஏற்படுவதுண்டு. இது ஒருவகை வைரசினால் தைரோயிட் சுரப்பி தாக்கப்படுவதினால் ஏற்படுகின்றது எனவும் கூறப்படுகின்றது. பெண்கள் கற்பமாக இருக்கும் போது ஏற்படும் பின்பு சாதாரண நிலையை அடைந்துவிடும் எனவும் கூறப்படுகின்றது.

சிலருக்கு கழுத்து பகுதியில் கட்டித்தன்மையான உருவம் ஏற்பட்டிருப்பதை நாம் நன்கு அறிவோம். இக்கட்டியினால், ஆபத்து அதிகம் இல்லை. இருந்தும் அத்தன்மை கட்டிபுற்றுநோய் கட்டியாக இருந்தால் அதற்குரிய சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். அப்படி ஏதும் இல்லாவிடில் தீங்கு எதுவும் ஏற்படாது. இதனை நன்கு பரீட்சித்துப்பயன் பெற உரிய வைத்தியர்களிடம் தாமதியாமல் செல்வது மிக நன்றாகும். உப்பில் அயோடின் சத்துக்குறைவதினாலும் ஏற்படும் எனவும் கூறப்படுகின்றது. மீன்வகையில் அயோடின் உண்டு. ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும். சிலர் பிறந்து வளர்ந்து வயது ஏறிவரும்போது எலும்புகள் அதாவது கை, கால், எலும்புகள், பற்கள் என்பன அதிக வளர்ச்சி அடைந்து வரும். இந்நிலை கபச்சுரப்பிகள் (சதையச்சுரப்பி) Pituitarygulani) அளவுக்கு மிஞ்சிய சுரப்பு நீர்களைச் சுரப்பதினால் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. சாதாரண வளர்ச்சியிலும் பார்க்க வேறுபட்டுக் காணப்படும். எதற்கும் உரியவைத்தியர்கள் தகுந்த பரீட்சைகள் செய்து நிலைமையைக் கண்டு சிகிச்சை முறைகளைக் கூறிக் கொள்வர்.

சிலருக்கு கை, கால் பகுதி தசைகள் முறுக்கப்பட்டு வலியினால் இழுத்துப் பிடித்த மாதிரி இருக்கும். இந்நிலை இரத்தத்தில் கல்சியக்குறைபாடு ஆகும். இதனால் தசைகளில் பெரும்பாலும் சுருக்கம் அடைந்து காணப்படும். இதற்கு காரணம் அதாவது பராதைரோயிட் சுரப்பு சரியான முறையாக வேலை செய்யாததேயாகும்.

எனவே கல்சியச் சத்து உணவு சமச்சீர் உணவில் சேர்க்கப்பட வேண்டும். உ+ம் பால், பழம், மரக்கறிவகை, கோழிச்சூப்பு எலும்புகள், கீரைவகை, என்பன பாவித்துவருதல் மிகநன்று. இவை பாவிப்பது சிரமமாக இருப்பின் மூலிகை வர்க்க கல்சியக் ளிகை மற்றும் கல்சிய மாத்திரக்குளிசைகள் பயன்தரும். எல்லாம் தங்கள் வைத்தியர் களைக் கண்டால் யாவும் கூறி பாவனைக்குரிய மருந்துகளையும் தந்து கொள்வார்கள். கணையம் முறையாக வேலை செய்யாது விட்டால் இன்சுலின் தேவையான அளவு சுரப்பதில்லை. இதனால் மதுமேகம் அதாவது நீரிழிவு (சலரோகம்) வியாதி ஏற்படும்.

இதில் இருவகை உண்டு.
முதலாவது 'Type I Diabetes' இது தேவையான இஞ்சுலின் இல்லாமல் இருக்கும் நிலையாகும்.

இரண்டாவது 'Type II Diabetes' இதில் இஞ்சுலின் அதிகம் சுரக்கும் நிலை. இதில் மற்றும் திசுக்கள் வேலை செய்யாது. இதனால் சக்கரை அளவு கூடிக்காணப்படும். இதில் பாதிப்பு நிலை கூடுதலாகும். இந்த நீரிழிவு வியாதியால் பெரும்பாலும் இருதய நோய், இரத்த அழுத்தம், சிறுநீர் நோய்கள் வருவதற்குக் காரணம் எனவும் மரணம் நிகழக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாம் எனவும் அறியக்கிடக்கின்றது.

எனவே இந்நோய் அதாவது நீரிழிவு நோய் தங்களுக்கு உண்டா? என்பதை முன்கூட்டி அறிந்து கொள்ள சில குணம் குறிகள் உண்டு. அவையாவன சலம் அடுத்தடுத்து கழிதல், அதிக பசி, தாகம், நாவரட்சி, களைப்பு, இளைப்பு, சோர்வு, எடையும் குறைந்து காணப்படும். இதனை நன்கு அறிந்து கொள்ள இரத்தம், சிறுநீர் பரீட்சை முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஆகையினால் தங்கள் வைத்தியர்களிடம் சென்றால் சகல பரீட்சைகளைச் செய்வதுடன் தகுந்த மருந்துகளைப் பெற்றுக்குணம் அடையமுடியும்.

மேலும் இதனைப்பற்றி கூறுவோமானால் Type I நீரிழிவுக்கு இஞ்சுலின் குறைவதினால் இஞ்சுலின் இருக்க வேண்டியது முக்கியம். Type II நீரிழிவு உள்ளோருக்கு வேறு திசுக்ககள் வேலை செய்யாத நிலை இருக்கும். இதற்கு இன்சுலின் தேவை யில்லை. இருப்பது போதுமானது. ஆனால் எடையைக் கவனித்து உடற் பயிற்சிகள் எடுப்பது மிகநன்று.

அளவுக்கு மிஞ்சிய இன்சுலினை எடுத்தால் சர்க்கரையின் அளவு குறையும். இதனை Hypoglycemia எனக் கூறப்படுகின்றது. 'இஞ்சுலின் அதிர்ச்சி' எனவும் அழைப்பர். இந்நிலை எவருக்கும் ஏற்படுவதில்லை. ஆனால் இவ்வாறு ஏற்பட்ட ஒருவருக்கு

**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013



தொடர்ச்சி 16ஆம் பக்கம்


SMILE....
• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES
RK CONSULTANTS
PL. CALL: 905.887.7457 / 905.751.7537
24 hrs, 365 days

52 52 52 52 52 அகவை 52 52 52 52 அகவை 52 52 52 52 52 52

# வர்த்தகத்துறையில் 52 வது அகவை

# இதில் கனடாவில் 19 வது அகவை

இதுவரை காலமும் எமக்கு ஆதரவு
நல்கிய வாடிக்கையாளர்கள் அனைவர்க்கும் எமது
இதயம் கனிந்த

**புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

மென்மேலும் எங்கள் ஸ்தாபனம் வளர்ச்சி
அடைவதற்கு உங்களின் பூரண
ஆதரவு கிடைக்குமென்ற நம்பிக்கை எமக்கு உண்டு

**துரித பணமாற்றுச் சேவை**

**பொன்விழா**
**கண்ட ஸ்தாபனம்**
இதில் 19 வருடங்கள் கனடாவில்
**கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?**
தமிழ் மக்கள் இதயங்களில் பணமாற்றுச் சேவையில் இடம் பிடித்தவர்கள்



## இரு இடங்களில்

## மு. காசிப்பிள்ளை சகக புத்திரர்கள்

**3228 EGLINTON AVE.EAST, SUITE #3**
SCARBOROUGH, ON. M1J 2H6
தொலைபேசி எண்: 416-267-8221

**3351 MARKHAM ROAD, SUITE #109**
SCARBOROUGH, ON. M1X 0A6 (Markham & Steeles)
தொலைபேசி எண்: 416-321-8221

# மனநோய் குணமாக யோகா மருத்துவம்

## Healing Mental Problem

மனிதனின் வாழ்க்கையை தடுமாற வைக்கும் நோய்களில் இதுவும் ஒன்று. சாதாரணமாக மனநோயாளிகள் தமது பாட்டில் கதைத்து திரிவதை நாம் எங்கும் பார்க்கின்றோம். இதனை வெறி நோய், பித்தநோய், பைத்தியம், உள்வாதம், கிறுக்கு என்றும் அழைப்பார்.

### இந்த நோய் வரக் காரணங்கள்

சுவையான உணவுகளை அளவு கடந்து உண்ணுதல், பல நாட்களாக பட்டின கிடத்தல், அடிக்கடி மது பானங்களைக் குடித்தல், தூக்க மாத்திரைகளை அதிக அளவில் சாப்பிடுதல், பணம், பொருள் போன்றவற்றில் அபார ஆசை வைத்தல் (Crazy), பயந்து வாழ்தல், அடிக்கடி கோபமடைதல், அளவு மீறிய மகிழ்ச்சி, தீராத மனக்கவலை போன்றவற்றால் உடலும் மனமும் பாதிக்கப்பட்டு இந்த நோய் வருகின்றது.

பரம்பரை மூளைக்கோளாறு விபத்தினால் உடலில் பாதிப்புக்கள், சில தீராத நோய்கள், குடும்ப சூழ்நிலை தோல்வியை எதிர்கொள்ளும் மனவலிமை இல்லாமை, போதை மருந்துகள் அருந்துதல், கர்ப்பமுற்ற பெண்களுக்கு இந்த நோய் வந்த பின்பு குழந்தை பெற்றதும் தானாகவே மாறிவடும். எனினும் பரபரப்பு (Tension) மனஇறுக்கம் (Stress) அடிக்கடி ஏற்படும் போது மூளையில் ஏற்படும் இரசாயன மாறுதல், சத்தற்ற உணவு, மண்டையிலி அடிபடுதல், முதியவர்களுக்கு இரத்த குழாய் வெடித்தல் போன்றவற்றாலும் இந்த நோய் வர வாய்ப்புண்டு.

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

### இதன் குணங்கள்

மனநிலை பாதிப்பு, எதிற்கும் பயப்படுதல் அல்லது முரட்டு தைரியமடைதல், பாலியல் உறவில் அதிக நாட்டம் அல்லது மிகவும் வெறுப்பு, ஓரிடத்தில் இருக்காது அலைந்து திரிதல், தேவையற்ற சிந்தனை, தூக்கமின்மை, அர்த்தமில்லாத பேச்சு போன்று இன்னும் பல.

### இதன் வகைகள்

1. வாத மனநோய்
2. பித்த மனநோய்
3. சுப மனநோய்
4. கலப்பு மனநோய்
5. சோக மனநோய்
6. விஷ மனநோய்

இந்த வகைகளுக்கேற்ப அவரவர் குண இயல்பு மாறுபடுகின்றது. இவற்றின் வகைகளைத் கண்டறிந்த பின்தான் சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### யோகாசன சிகிச்சை மூலம் நிவாரணம்

இவ்வகையான மனநோய்கள் தோன்றுவதற்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து அதற்குப் பொருத்தமான யோகாசனப் பயிற்சிகளை தெரிவு செய்து பழகவேண்டும். பொதுவாக வெவ்வேறான நோயாளிகளுக்கு தலையின் பின்பகுதி பிடரி, கழுத்து, தோள்களின் பின்புறம் முழங்கைகள் என்பன இறுக்கமடைந்து காணப்படும். முதலில் இந்த இறுக்கத்தைப் போக்கி அந்த பகுதிகளை தளர்ந்த நிலை அடையச் செய்யும் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பின்பு மூளைச் சோர்வைப் போக்கி மண்டையோட்டின் அடிப்பகுதியில் படர்ந்திருக்கும் கழிவுப் பொருட்களான பழுதடைந்த இரத்த திசுக்கள் கட்டிப்போன சளி போன்றவற்றை வெளிக் கொண்டுவரும் கபால பாதி, பஸ்தரிகா போன்ற மூச்சுப் பயிற்சி முறைகளை மேற்கொள்ள வேண்டும். இதன் பின் இறுதியாக ஆழ்நிலை தியானப் பயிற்சிக்கு தயாராக வேண்டும். ஆரம்பத்தில் இவ்வாறான நோயாளிகளுக்கு மனம் ஒரு நிலைப்படாது. தொடர்ந்து முயற்சி செய்யும் போது சில நாட்களில் நல்ல பலன் கிடைக்கும். இந்த பயிற்சிகளை ஒரு யோகாசன நிபுணரின் உதவியை நாடி பயிற்சிகளை மேற்கொள்வது சிறந்தது.

### சித்த மூலிகை மருத்துவத்தில் நிவாரணம்

1. வெண்தாமரை பூவை கசாயம் செய்து 48 நாட்கள் குடித்துவர இந்நோய் குணமாகும்
2. அகத்தி கீரையை வாரத்திற்கு 2 நாட்கள் சமைத்து சாப்பிட இந்நோய் குணமாகும்
3. வல்லாரை கீரையை அரைத்து பாலில் கலந்து உண்ண இந்நோய் குணமாகும்.
4. கடுக்காய் தூள், நெல்லிக்கா தோலின் தூள், கஸ்தூரி மஞ்சள், வெள்ளை மிளகு, வேப்பம் விதை இவற்றை சம அளவாக எடுத்து பசுப்பால் விட்டு அரைத்து தலையில் தேய்த்து முழுகி வர இந்நோய் குணமாகும். இந்த மருந்திற்கு பஞ்சகல்பம் என்று பெயர்.
5. சிறிது மஞ்சள், சீரகம், கறிவேப்பிலை யாவும் அரைத்து சிறிதளவு தினமும் ஒரு மாத காலத்திற்கு சாப்பிட்டு வர இந்நோய் தீரும்.
6. தினசரி 2 எலுமிச்சம் பழத்தை வெட்டி தலையில் தேய்த்து குளிக்க இந்நோய் தீரும்



7. சீரகத்தை எலுமிச்சை பழச்சாற்றில் ஊறவைத்து பின் காயவைத்து தூள் செய்து சாப்பிட இந்நோய் குணமாகும்.

### எச்சரிக்கை.

காப்பி போன்றவற்றை தவிர்க்கவும். குளிர்ச்சி தரும் காய்கறி கீரை வகைகளைச் சேர்க்கவும். பழைய சாதம் சாப்பிடுவதும் நல்லது.





ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

YOGA - MEDITATION CLASSLESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு
தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



தொடர்புகுகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

## புத்தாண்டே மலர்க! புதுயுகம் தருக!

- ஆக்கம் அருட்கவி ஞானகணேசன்

பல்லவி:

இருகரம் கூப்பியே வருகவென் றழைத்தோம்
இருபது பத்தே வருக!

அனுபல்லவி:

இருள்தனைப் போக்கியே ஒளிதரும் ஞாயிறாய்
இன் முகத்துடனே வருக!

சரணம்:

இனவெறி மதவெறி இல்லா தொழிந்தே
மனிதம் மண்ணெங்கும் மலர்க!
குணப்பெரும் குன்றெனக் கோனெலா முயர்ந்து
மனிதரின் மனங்களை வெல்க!

இதுவரை யடைந்த இன்னல்க ளகன்றுமே
புது யுகம் பொலிவுவொடு மலர்க!
ஈகை அன்பொடு இரக்கம் பெருகியே
இக மெலா மினிதுற வாழ்க!

வான்பொழிய வேண்டும் நல்வளம் பெருகவேண்டும்
ஊனினிடை நோயெல்லாம் ஓடிவிடல் வேண்டும்
தேனினிய தெள்ளுதமிழ் வானுயர ஓங்கி
தன்னிறைவாய்த் தமிழீழம் அழகுபெறல் வேண்டும்!




mhc
MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# 2010 உங்களுக்கு எப்படி?

## ஓடும் நீர் உறைவதில்லை 93

***அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களே!***

கடந்த ஐந்து தலைமுறைகளால், ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலமாக ஏற்படுத்தப்பட முடியாமற் போன மாற்றங்களை உங்களால் ஏற்படுத்த முடியும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் இரண்டாயிரத்துப்பத்து பிறக்கிறது. அதிலும் கால்நூற்றாண்டுக்கு மேலாக நிலத்தில் இருந்து புலத்துக்கு வந்தவர்கள் எதிர்பார்த்த விளைவுகள் எதுவுமின்றி நிலைகெட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கும்போது இந்த ஆண்டு ஒரு உத்தரவாதத்துடன் பிறக்கிறது. நிலமும் இன்றி புலமும் இன்றி இடைநடுவில் செய்வதறியாது தத்தளிக்கும் உங்களுக்கு இந்த ஆண்டு ஒரு வழிமுறையைக் காட்ட வருகின்றது. மாறுபட்ட பொருளாதார, சமூக, அரசியல் நிலைக்குள் அகப்பட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கும் மக்களுக்கும் இந்த ஆண்டு ஒரு பாதையை வகுத்துவிட வருகிறது. மிகவும் அவதானமாகத் தொடர்ந்து வாசியுங்கள்.

முதலில் உங்களுக்கான பொதுப்பலனையும் அதைத் தொடர்ந்து ஒவ்வொருவருக்குமான தனிப்பட்ட பலன்களும் தரப்படுகின்றன. இந்தப் பொதுப்பலன் என்பதன் முக்கிய குறிப்பு ஒன்றை முதலில் பார்ப்போம். பொதுப்பலன் என்பது இந்த ஆண்டில் வாழும் அத்தனை மனிதப் பிறவிகளுக்குமான பலன். இங்கே இனம், மத, மொழி, நிறம் என்ற வேறுபாடுகள் இல்லாமல் மனிதன் எனும் வகைபடுத்தலுக்குள் மட்டும் இருந்து உயிர்வாழும் ஜீவராசிகள் அனைவருக்குமான பலன். எனவே பொதுப்பலனை அடிப்படையாக வைத்து ஒவ்வொருவரும் தமது கணிப்பீட்டை ஒரு சமநிலைப்படுத்தப்பட்ட உள்நோக்குப் பார்வையால் மேற்கொள்ளல் வேண்டும். இந்த வருடத்துக்கான பொதுப்பலன் என்ன என்பதை பொருளாதாரம், தொழில், ஆரோக்கியம், ஆண்கள், பெண்கள், மாணவர்கள் என்று ஆய்வு செய்யவுள்ளேன்.

### பொதுப்பலன்

#### பொருளாதாரம்

பொருளை ஆதாரமாக வைத்து வாழ்பவர்களுக்கு இந்த வருடம் மிகவும் சிறந்தது. இங்கே பொருளை ஆதாரமாக வைப்பது என்பது வருமானத்திற்கேற்ப வாழும் மனப்பக்குவத்தைக் குறிக்கின்றது. வெறும் பகட்டுக்காகப் போலியான அந்தஸ்த்தை வெளிக்காட்டி தனக்குள்ளே அழுது கொண்டிருக்கும் மனித ஜீவன்களுக்கு முதல் அறுபது நாட்கள் அதாவது தை மாதம் முதலாம் திகதியில் இருந்து பங்குனிமாதம் முதலாம் திகதி வரையிலான காலப்பகுதி அந்த மனோபக்குவத்தை மாற்றியமைப்பதற்கான வாய்ப்பைக் கொடுக்கின்றது. தமது தவறான மனோபாவங்களை இந்தக் காலப்பகுதிக்குள் மாற்றி நேர்த்தியான முறையில் கிடைக்கும் வருமானத்திற்கேற்ப தமது வாழ்க்கையை நகர்த்த விரும்பும் புத்திசாலிகளுக்கு இந்தப் புதுவருடம் ஒரு வரப்பிரசாதம். மாறாக போலிக் கௌரவத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தால் காலத்தின் பிடியில் அகப்பட்டு அடிதாங்க முடியாமல் அல்லற்பட நேரிடும். கடனில்லாக் கஞ்சி கால்வயிறு போதும் என்பதை உணர்வதற்கு ஆயுட்காலம் கூட போதாததாகி விடும். பொருளால் கட்டுப்படுத்தப்படாமல் பொருளைக் கட்டுப்படுத்துபவர்களுக்கு இந்த வருடம் புதுப்பொலிவைத்தரும்.

> அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
>
> *நன்றியுடன் KG Master*

#### தொழிலாளர்களுக்கு




**KG Master-*kgmaster@rogers.com***

தொழிலாளர்களுக்கும் தொழில் தருபவர் களுக்கும் இந்த வருடம் ஒரு முக்கியமானதாக அமைகின்றது. முதலில் தொழிலாளர்கள் தொடர்பாகப் பார்ப்போம். தொழில் என்பது நமது வாழ்க்கையின் ஒது பகுதி மட்டுமே என்பதை உணர்ந்து கொள்ளல் வேண்டும். வாழ்க்கையைத் தொழிலுக்காக மட்டும் அர்ப்பணித்து மகிழ்ச்சியாக வாழ்ந்தவர் களை இந்த உலகம் இதுவரை கண்டு கொள்ளவில்லை. குடும்பம், குழந்தைகள், உற்றார், சுற்றம் என்பவற்றையெல்லாம் புறக்கணித்துவிட்டு உத்தியோகம் அல்லது தொழில்தான் முழுவதும் என்று ஓடுபவர்கள் அந்த ஓட்டத்தை இடைநிறுத்தி ஒருகணம் சிந்திக்க வேண்டும் என இந்த வருடம் அதன் ஆரம்பத்தில் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றது. போலியான அல்லது தமது தகுதிக்கும் அப்பால் சில பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு அதிலிருந்து விடுபடுவதற்கான வழிகள் இருந்தும் கூட தமது கௌரவம் குறைந்து விடுமே என்ற பயனற்ற அச்சத்தால் வாழ்க்கையைத் தமக்கொரு தண்டனையாக்கிக் கொண்டு எட்டு மணித்தியால உழைப்புக்கான உடலைப் பதினெட்டு மணித்தியாலங்களாக வருத்துபவர்களைப் பார்த்து இந்த வருடம் மிகவும் வேதனைப்படு கின்றது. தவறான தெரிவுகளால் அநாவசியமான பொருளாதாரச் சிக்கல்களுக்குள் அகப்பட்டு அல்லும் பகலும் ஓடி ஓடி உழைத்துக் கொண்டு அதுவும் பற்றாக்குறையாக இருப்பதை வெளிக் காட்டாமல் அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு சிலர் அவ்வாறு தாம் கஷ்டப்படுவது தமது குழந்தைகளுக்காகத்தான் என்ற வாசகத்தை அடிக்கடி குடும்பத்தில் உலவவிட்டு, குழந்தைகளுடன் ஒரு சில நிமிடங்களாவது தரமான முறையில் செலவிடமுடியாது வாழும் மனிதர்களைப் பார்த்து இந்த வருடம் "சுகம் வரும் ஆனால் ஆள் தப்பமாட்டார்" என்று எதிர்வு கூறுகிறது. தான் வேலைக்குப் போகாவிட்டால் தனது முதலாளி தலைகீழாக விழுந்து விடுவார் என்பது போல் தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டு குடும்ப நலன்களைப் புறக்கணித்து அலையும் ஜீவன்களைப் பார்த்து ஐயகோ! என்று இந்த வருடம் அழுகின்றது.

இருந்தாலும் இந்த வருடமானது தொழிலாளர் களுக்கு ஒரு உத்தரவாதத்தை நிபந்தனையுடன் கொடுக்கிறது. நிபந்தனை என்னவெனில் கடவுள் - குடும்பம் - தொழில் எனும் நேர்கோட்டில் வாழ்க்கையை நகர்த்துபவர்களுக்கு வாரி வழங்கவிருக்கிறது. எனவே தொழிலாளர் களாகிய நாம் தொழிலைக் கடவுளுக்கு முன்பாகவோ அல்லது குடும்பத்துக்கு முன்பாகவோ நகர்த்தாமல் மனிதவாழ்வில் உயர்வாக வாழ்ந்தவர்கள் அனைவரும் பின்பற்றிய வழிமுறையை நாமும் பின்பற்றுவோம். இந்த ஒழுங்கு முறையை எவ்வளவு வேகமாக நடைமுறைப்படுத்த முடியுமோ அவ்வளவு வேகமாக நடைமுறைப் படுத்துபவர்கள் இந்த ஒழுங்குமுறை ஆரம்பித்து ஆறுமாத காலத்துக்குள் அதற்கான சிறப்பை நிச்சயமாக இந்த வருடம் தரவிருக்கின்றது. எனவே இந்தவருடத்தின் முதல் மாதத்துள் மாற்றங்களைக் கொண்டுவருவது அவசியமாகும்.

#### தொழிலதிபர்களுக்கு

தொழில்தருனர்களுக்கு விழிப்புணர்வைக் கொடுக்கும் வருடமாக இது அமைகின்றது. இந்த விழிப்புணர்வானது தொழில் தருமம் என்ன என்பதைத் தொழிலதிபர்களுக்கு வெளிப்படை யாக உணர்த்துவதாக அமையும். தமது சுயநலத்துக்காக உண்மையான உழைப்பை வழங்கும் ஒரு தொழிலாளியை உறிஞ்சிக்குடிக்க முயற்சிப்பவர்களும், தொழிலதிபர் என்ற நிரந்தரமற்ற ஒரு நிலையைப் பயன்படுத்தி அப்பாவிகளை ஏமாற்றும் அல்லது அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் அதிபர்களும், தொழிலாளர்களது தனிப்பட்ட விடயங்களில் தமது செல்வாக்கை அனுமதியின்றிச் செலுத்துபவர்களும் உடனடியாகத் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என இந்த வருடம் வேண்டி நிற்கின்றது. இந்த வேண்டுதலை புறக்கணிப்பவர்கள் வாழ்நாள் முழுவதும் தமக்குத்தாமே தண்டனையைக் கொடுப்பதாக அமையும் என்பதையும் உறுதிப்படுத்துகின்றது. அதுமட்டுமல்ல குறுக்குவழியில் பணம் சேர்த்திடும் திருட்டு உலகத்தில் இருந்து விலகும்படியும் வேண்டி நிற்கின்றது. அத்துடன் உழைப்புக்கேற்ற ஊதியம், வளங்களை சிறப்பான முறையில் பங்கிடுதல், தொழிலாளர் களது உடல்நலன், உளநலன் சார்ந்த விடயங்களில் முதலீடு செய்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், முற்போக்கான, நேர்த்தியான விடயங்களில் தொழிலாளர்களை ஈடுபடுத்தி உற்சாகப்படுத்தல் போன்ற தொழில் தருமம் சார்ந்த விடயங்களில் ஈடுபடும் தொழிலதிபர்களுக்கு இந்த வருடம் அவர்களே எதிர்பாராத அளவுக்கு சிறப்பையும் வெகுமதியையும் கொடுப்பதாக உத்தரவாதமளிக்கின்றது.

#### ஆரோக்கியம்

ஆரோக்கியம் என்றவுடன் நம் எல்லோருக்கும் முதலில் தெரிவது உடல் நலம்தான். 'சுவர் இருந்தால் தானே சித்திரம் வரையலாம்' என்பது நாம் எல்லோரும் அறிந்த விடயம். சுவர் இருந்தும் சித்திரம் வரையும் சிந்தனைத் திறன் அற்ற கோடானகோடி மனிதர்களை எப்போதா வது சிந்தித்திருந்தால் 'சுவரும் சித்திரம் வரையும் ஆற்றலும் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்' என்று கூறப்பழக்கப்பட்டிருப்போம். இதைத்தான் இந்தவருடம் வற்புறுத்தி நிற்கின்றது. ஆரோக்கியம் என்பது உடல் நலனும், மனநலனும் பின்னிப்பிணைந்தது என்பதைத் தெட்டத்தெளிவாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்த வருடம் வலியுறுத்து கின்றது. உடல் நலனுக்கு இடையூறு ஏற்படும் போது நமது உடம்பே அதை வெளிப்படுத்து கின்றது. உடல் நலத்தைப் பராமரிப்பதற்கு பெற்றோர்கள், கணவன், மனைவி, குழந்தைகள், நண்பர்கள், வைத்தியர்கள் என்ற ஒரு படை இருக்கின்றது. உடலில் ஒரு வருத்தம் ஏற்பட்டுவிட்டால் இவர்களில் சிலர் துடித்து போய்விடுகிறார்கள். எவ்வளவு வேகமாக வருத்தத்தை குணப்படுத்த முடியுமோ அவ்வளவு வேகமாகக் குணப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

ஆனால் நமது மனத்தை நலமாக வைத்திருக்க வேண்டுமானால் நாம் மட்டுமே முயற்சிக்க வேண்டியவர்களாகின்றோம். உடல் நலம் இருந்தோ இல்லாமலோ மனநலம் பாதிக்கப்படு மாயின் பைத்தியம் என்று ஒதுக்கி விடுவார்கள். பாசத்துக்குரியவர்களே பயந்து போய் ஒதுங்கி விடுவார்கள். வேறு சிலர் எம்மை ஒரு வேடிக்கைப் பொருளாகப் பார்த்து மகிழ்வார்கள். இவற்றையெல்லாம் இந்தவருடம் சொல்லி நிற்பதற்கான காரணம் என்னவெனில் மனநல வளர்ச்சிக்கான விடயங்களில் நீங்கள் சிறிது நேரத்தை முதலீடு செய்து நீங்களும் உங்களைச் சார்ந்தவர்களும் சிறந்த மனவலிமையுடையவர்களாக உருவாக்கப்பட வேண்டும் என இந்த வருடம் எதிர்பார்ப்பதால்தான்.

#### ஆண்களுக்கு

'ஆண்' என்பது எந்தவிதமான வயது முதிர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டு குறிப்பிடப்படுவதில்லை. ஒருவர் பிறப்பில் ஆணாக இருந்தால் இறப்பின் பின்னரும் அவர் ஆண்தான். இந்த ஆண் என்பது ஆண்மையின் - ஆளுமையின் வெளிப்பாடே. ஆளுமையே

தொடர்ச்சி 30ஆம் பக்கம்

அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -



மஹாராஜியின் உரைகள்

| On DVD | On TV |
|---|---|
| இலவச DVDக்கு அழையுங்கள் | Saturdays at 11:00 am |
| (416) 431-5000 | Rogers Cable Channel - 20 |
| 1 877 707 3221 | Bell Express vu Channel - 219 |

# இலங்கை ஜனாதிபதி...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

குரல் சொல்லுகின்றது.

எனவே அரசியல் - ஆட்சி என்பவற்றில் இருந்து எவரும் தொடர்பு அற்றவர்களாக, விலகி ஒதுங்கி இருக்கமுடியாது. மக்கள் - அரசியல் - ஆட்சியா-ளர் என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட ஒன்றில் ஒன்று ஆதிக்கமும் செல்வாக்கும் செலுத்துகின்றவையாகும். ஒவ்வொருவரும் விரும்பியோ விரும்பாமலோ ஆட்சியை தீர்மானிக்க வேண்டியவர்களாக ஏதோ ஒரு வகையில் அரசியலோடும் ஆட்சியாளரோடும் தொடர்புடையவர்களாக காணப்படுகின்றனர். இந்நிலையில் "இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? நாங்கள் சோறு திண்டால் சரி " என்று எவரும் இருந்து விட முடியாது. அவ்வாறு இருப்போமாயின் நாட்டில் நடைபெறும் அநீதிகளுக்கும் ஊழல், மோசடிகளுக்கும் நாமும் பொறுப்பு ஏற்க வேண்டியவர்கள். ஆட்சியாளரை தெரிவு செய்யும் போது ஒவ்வொருவரும் நிதானமாகச் சிந்தித்து தமது வாக்கினை சரியாக பயன்படுத்த வேண்டிய தேவை எழுகின்றது என்று இவர்கள் சொல்லுகின்றார்கள்.

ஆனால் தமிழர் தரப்பு முடிவு இன ஒருமைப்பாட்டை, பலத்தை வெளிக்காட்டுவதாக வும் தமிழரின் ஒற்றுமையை சிதைக்க, பிளவுபடுத்த இடமளிக்காத வகையிலும் இருத்தல் வேண்டும். தமிழர் தரப்பால் இனம், தேசிய நலன் கருதி எடுக்கப்படும் ஒருமைப்பாடுடைய முடிவுக்கு எல்லாத் தமிழரும் கட்டுப்பட்டு ஆக வேண்டிய தார்மீக கடப்பாடு, வரலாற்றுக் கடமை எம் முன் நிலை நிறுத்தப்படுகின்றது உண்மை.

இந்த ஒரு சூழ் நிலையில் தமிழர்கள் என்ன முடிவை எடுக்கப்போகுன்றானார்கள் என்பது என்பது ஒரு முக்கியமான கேள்வி. இந்த அரசில் வரலாற்றுக்குக் கேள்விக்கு தமிழிழர்களிள் பதில் என்ன?

எமது வாக்குப் பலம் கூறு போட, பிளவுபடுத்த இடமளிப்போமாயின் வரலாற்றில் நாம் செய்யும் தப்பாக அமையும். அண்மைக் காலங்களில் தமிழர் தரப்பு ஒன்றிணைந்து எதிரிக்கு புகட்டியிருக்க வேண்டிய, செய்திருக்க வேண்டிய கடமைகளில் இருந்து தவறியதன் விளைவை பெரும்பாலான தமிழரின் இன்றைய அவலநிலையில் இருந்து அறிந்து கொள்ள முடியும். நடந்தவை நடந்தவையாக இருக்க, இனத்தின் இருப்பையும் தேசியத்தையும் பாதுகாத்து கொள்ள இனி என்ன செய்ய வேண்டும் என ஒருமித்த சரியான தீர்மானத்தை எடுத்து செயல் ஆற்ற வேண்டும்.

தமிழருக்கான முறையான தீர்வை பற்றி குறிப்பிடாத எந்த முதன்மை வேட்பாளருக்கும் 50 சதவீத வாக்குகள் சென்றடைவதை தடுக்கும் வகையில் போட்டியிடுவதாக கூறி தமிழ் உணர்வாளர் சிவாஜிலிங்கத்தின் உள்ளார்ந்த நோக்கம் எதுவாக இருந்தாலும் இவரின் நிலைப்பாடு தமிழரை பலவீனப்படுத்தி பிரித்தாள நினைக்கும் எதிரிக்கு சார்பானது. ஒரு பொது எதிரியை தோற்கடிப்பதற்காக, காலத்தின் கடமையை தடுக்கின்றது என்றும் ஒரு குரல் எழுகின்றது.

ஓர் ஆட்சிமாற்றத்தின் ஊடாகவே ஆட்சியாளர் செய்த போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மோசடிகள், ஊழல்கள், உள்வீட்டு இரகசியங்கள் சிறிதளவு ஏனும் வெளிவர வாய்ப்பு இருக்கின்றது. கோரப்பிடியில் இருந்து விடுபட அல்லது கோரப்பிடியின் தளர்வுக்காவது தமிழர்களுக்கு உடனடியான ஆட்சி மாற்றம் வேண்டப்படுகின்றது. தமிழரின் மாறுபட்ட முடிவுகளால் தற்போதைய ஆட்சியாளர் மீண்டும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிக் கொள்ள வாய்ப்பு வழங்கப்படுமாயின் தமிழர்கள் கொள்கை அற்றவர்கள் வெறும் ஏமாளிகள் என்னும் எதிரி யின் எண்ணத்தை வலுப்படுத்தும் என்பதோடு தமிழரின் தனித்துவத்தை இருப்பை கேள்விக்குறியாக்கும் என்றும் சிலர் கூறுகின்றனர்.

இந்நிலையில் இலங்கை மலையக மக்களின் பிர-பலமான அரசில் தலைவர் ஆன மனோ கணேசன் ஆட்சி மாற்றம் மற்றும் அரசில் மாற்றத்திற்காக மகிந்த அரசை தோற்கடியுங்கள் என்று எல்லாத் தமிழர்களையும் வேண்டுகின்றார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும், சிரேஸ்ட உறுப்பினர்களில் ஒருவருமான ஆர்.யோகராஜன், எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு வழங்குவது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை யோகராஜன் மேற்கொள்வார் என அரசியல் வட்டாரத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

மேலும், முன்னாள் பிரதிக் கல்வி அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சிரேஸ்ட உறுப்பினருமான எம். சச்சிதானந்தனும் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், குறித்த செய்தி தொடர்பில் ஆர்.யோகராஜன் இதுவரையில் எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை என தகவல்கள் குறிப்பிடுகின்றன.

ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்ட தீர்மானத்துக்கு முரணாக, அக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி பகிஷ்கரிப்பதென்ற தீர்மானத்தை எடுத்திருக்கின்றது. தேவநேசன் நேசையா, நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் போன்ற தமிழ்ப் பிரமுகர்களும் தேர்தலைப் பகிஷ்கரிப்பதென்பது தவறானதென்பதைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தேர்தலைப் பகிஷ்கரிப்பது தமிழ் மக்களை அரசி யல் அநாதைகள் ஆக்கிவிடும் என்பதால் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் கோரிக்கையைத் தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும் என்றும் ஒரு குரல் எழுந்துள்ளது.

தமிழ் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காகவே போட்டியிடுவதாக சிவாஜிலிங்கம் சொல்கிறார். அதற்கு விளக்கமும் கூறுகின்றார். தான் போட்டியிடுவதன் மூலம் பிர-தான வேட்பாளர்கள் இருவரும் ஐம்பது வீதத்துக்குக் கூடுதலாக வாக்கெடுக்க இயலாது போனால் அதுவே வெற்றி என்கிறார். இது எப்படி அவருக்கோ தமிழினத்துக்கோ வெற்றியாக முடியும்?

இரண்டு பிரதான வேட்பாளர்களுள் ஒருவராவது ஐம்பது வீதத்துக்குக் கூடுதலான வாக்குகளைப் பெறாவிட்டால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை தேர்தல் சட்டத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. மற்றைய வேட்பாளர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளிலுள்ள இரண்டாவது தெரிவு வாக்குகளைத் தனித்தனியாகக் கணக்கெடுத்து, பிரதான வேட்பாளர்களின் வாக்குகளுடன் அவரவர்க்குரிய வாக்குகள் சேர்க்கப்படும். இந்த வகையில் ஐம்பது வீதத்துக்கு மேல் வாக்குகளை பெற்றவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார். இந்த முறையில் பிரதான வேட்பாளர்களில் ஒருவரே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார்.

பிரதான வேட்பாளர்கள் இருவரையும் விமர்சிக்கும் சிவாஜிலிங்கம் அவர்கள் ஐம்பது வீத்ததுக்குக் குறைவாக வாக்கெடுப்பது தனக்கு வெற்றி எனக் கூறுவது சிறுபிள்ளைத் தனமானது என்றும் ஒரு குரல் உரத்து ஒலிக்கின்றது.

இறுதி யுத்தத்தில் பல்லாயிரமான தமிழர்களை இனப்படுகொலை செய்த மகிந்தாவையும், சரத் பொன்சேகராவையும் தமிழர்கள் நிராகரிக்க வேண்டும் என்றும் பலமான ஒரு குரலும் உலகம் முழுவதும் ஒலிக்கின்றது.

"இல்லை இராணுவத்தளபதியான பொன்சேகாராவின் கையில் இலங்கை ஒப்படைக்கப்பட்டால் அது இராணுவ ஆட்டிக்கு வழிவகிக்கும்" என்றும் இன்னுமோரு பலமான குரல் ஒலிக்கின்றது.

தமிழ் மக்களின் தேதிய முன்னனி அமைப்போ ஒரு பயங்கரமான மௌனத்தில் இது வரை உள்ளது.

நாம் என்ன சொல்ல முடியும்?

தமிழ் மக்களே உங்கள் மனச்சாட்சி படி வாக்ளியுங்கள் என்ற ஒரு குரலும் ஒலிக்கின்றது.

# 2010 இல்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

நவம்பர் 2009 ஆம் ஆண்டின் விலையானது 2008 ஆண்டு அதே மாதத்தின் ஏற்கனவே கட்டப்பட்டு வாழ்ந்து வரும் வீடு, மனைகள் சராசரிவிலையை விட 73% அதிகரித்துள்ளது. அத்துடன் ஆண்டிற்கு சராசரி வீடு, மனை விலை 19% இனால் அதிகரித்துள்ளது எனவும் CREA என அழைக்கப்படும் Canadian Real Estate Association தெரிவித்துள்ளது.

இவ்வாறு விலையின் தொடர்ந்த அதிகரிப்பானது, வட்டிவீதம் அதிகரிக்கும் போது மாதாந்த கட்டுப்பணத்தை சாதாரண கனடிய மக்களினால் தாங்கமுடியாமால் போகலாம். அத்துடன் வீட்டு வியாபாரத்தில்



மீண்டும் ஒரு தேக்க நிலை உருவாகலாம் என்பதனை கொண்டு நிதி அமைச்சர் பலவிதமான எச்சரிக்கைகளை (Warnings) தொடர்ந்து வெளியிட்டு வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

இதன் தொடர்ச்சியாக..... 2009ஆம் ஆண்டின் Canwest News Service மற்றும் Global National ஆண்டின் இறுதிநேர்முக செவ்வியில் அண்மைக்காலத்தில் வீட்டு வியாபாரத்தில் நிகழ்ந்து வரும் அதீத அதிகரிப்பை மிகவும் கவனத்துடன் அவதானித்து வருவதாகவும் நிதியமைச்சர் கூறியுள்ளார்.

மிகக்குறைந்த வட்டிவீதம், ஆதன வியாபாரத்தை அதிகரிக்க செய்வது, சரியானதாக இருந்தாலும், இவ்வாறான வட்டிவீதம் எவ்வளவு காலத்திற்கு தொடர்ந்து இருக்கும் என்பதனை ஆஸ்தி வாங்குபவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

இந்நிலைமை தொடருமாயின் ஆரம்ப முதலீட்டின் பெறுமதியை அதிகரிப்பதுடன், பெறும் கடன் கொடுக்கும் காலத்தையும் குறைக்க வேண்டிய நிலை ஏற்படலாம் எனவும் எச்சரித்துள்ளார்.

2009ஆம் ஆண்டில் உலகின் வளர்ந்த நாடுகளின் பண ஊட்டலினால் பொருளாதாரம் ஓரளவு ஸ்திர நிலையை அடைந்த போதிலும் பலநாடுகள், இன்று பொருளாதார ஆரோக்கியத்தை அடைந்ததாக கூறமுடியாது. இதனால் நாடுகள் பொருளாதாரக் கடனில் மூழ்கியுள்ளன.

உதாரணமாக கனடிய பொருளாதாரம் இப்பொழுது எதிர்பார்க்கப்படும் 56 Billion வருடாந்த கடனைக் கொண்ட நாடாக உள்ளது.

இதனால் 2010இல் வர இருக்கும் வரவுசெலவுத்திட்டத்தில் (Budget) வரி அதிகரிப்பு ஏற்படலாம் என்ற வாதத்தையும் திரு. Jim Flagerty மறுதலித்துள்ளார்.

ஆயினும் யூலை, 2010 இல் புதிதாக நடைமுறைப்படுத்த இருக்கும் HST என்றழைக்கப்படும், Harmonized Sales Tax, எந்தவிதமான மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதனை எதிர்காலம்தான் பதில் கூறும்.

(இந்த HST என்பது பெரிய பிரித்தானியாவில் (England) நடைமுறையில் இருக்கும் VAT (Value Added Tax) ஐ ஒத்தது. VAT இன் பெறுமதி 17.5% ஆனால் 2009 இல் 2.5% கழிவு கொடுக்கப்பட்டது. எனவே 15% ஆகக் காணப்பட்டது.)

இந்த புதிய நடைமுறைக்கு வரும் வரி (HST) 13% ஆக இருக்கும் என எதிர்பார்க்கலாம். அதேநேரம் இப்பொழுது நடைமுறையில் இருக்கும் மத்திய வரி (GST) 5% உம், மாகாண வரி 8% உம் மறைந்து விடும். இதன் கூட்டுவரியாக ஒரே வரியாக HST காணப்படும்.

புதிதாக வரும் வரியைப்பற்றி ஆதரவாகவும், எதிராகவும் பல வாதங்கள் முன்வைக்கப்பட்ட போதும் நடைமுறையின் நன்மை தீமை கனடாவின் (2010) இல் வரும் பிறந்த தினத்திற்கு பின்பாகத்தான் தெரிய வரும்.

**நல்லதையே சிந்திப்போம்**
**நல்லதே நடக்கும்.**

# கோபன்ஹேகன் - கோப் 15 மகாநாடு

ஆங்கிலத்தில் அழகான வசனம் ஒன்று இருக்கிறது. குளறுபடியை உருவாக்கியவன் நீயாக இருந்தால் அதை நீதான் சரிப்படுத்த வேண்டும். இன்று கோபன்ஹேகன் மகாநாட்டில் ஒரு உருப்படியான முடிவை எடுக்க முடியாமைக்கும் இத்தகைய ஒரு மனப்பான்மையே காரணமாகும். காலநிலை மாற்றத்தால் புவியின் மேற்பரப்பில் வெப்பம் அதிகரித்து பல பாரிய விளைவுகளை உலகம் எதிர் நோக்கப்போவதாக விஞ்ஞானிகள் பயமுறுத்துகிறார்கள். அதற்கு அவர்கள் கொடுக்கும் காரணங்கள் பாமரமக்களால் கூட விளங்ககூடியதாக இருக்கிறது.




Green House Effect என்ற கோட்பாடு புவி வெப்பமடைவதற்கு முக்கிய காரணமாக விஞ்ஞானிகளால் முன் வைக்கப்படுகின்றன. இந்த Green House Effect வெப்பத்தை தன்னுள்ளே அடக்கி, அதனுள் அமைந்திருக்கும் சுற்றாடலின் வெப்பத்தை பாதுகாத்து வைத்திருக்கும். தாவரவியல் பூங்காக்களிலோ அல்லது விவசாய பண்ணைகளிலோ பாரிய கண்ணாடியிலான கொட்டகைகளை அமைத்து இந்த தொழில் நுட்பத்தின் மூலம் தாவரங்கள் வளர்ப்பதை அவதானிக்க முடியும். பேராதனை தாவரவியல் பூங்காவில் அமைந்திருக்கும் ஒக்கிட் ஹவுஸ் அல்லது மொன்றியலில் அமைந்திருக்கும் பயோ டோம் போன்றவற்றில் இத்தகைய முறையில் தாவரங்கள் வளர்க்கப்படுவதை அங்கு சென்றவர்கள் பார்த்திருக்கக்கூடும். கண்ணாடிகள் மூடப்பட்டு, வெயிலில் நிறுத்தப்பட்ட மோட்டர் வாகனத்தினுள் வெப்பம் அதிகரித்து செல்வதை இதற்கு ஒரு சின்ன உதாரணமாக எடுக்கலாம். கண்ணாடியினூடாக உட்புகுந்த ஒளிக்கதிர்கள் உள்ளே தெறிவடைந்து வெப்பக்கதிர்களாக வெளியே செல்ல முற்படும்போது அவை கண்ணாடிகளினால் தடுக்கப்பட்டு வாகனத்தினுள் வெப்பம் அதிகரிக்கிறது. வளிமண்டலத்தின் மேற்பகுதியில் இயற்கையாகவே கரியமில வாயு, மெதேன் வாயு, ஓசென் வாயு மற்றும் நிராவி போன்றன உள்ளன. இவற்றைக் கொண்டு உருவாக்கப் பட்ட தட்டானது, மோட்டர் வாகனத்தின் கண்ணாடி போன்ற இயல்பை கொண்டது. இதன் காரணமாக புவியின் வளிமண்டலத்தை ஒரு ராச்சத Green House என்றுகூட அழைக்கலாம். இது பூமியை வெப்பமாக வைத்திருந்து, பூமியில் உயிரினங்கள் வாழ வழி வகை செய்கிறது. இந்த Green House Effect இல்லாவிட்டால் விஞ்ஞானிகளின் தகவல்களின்படி புவி மேற்பரப்பின் வெப்பம், அதன் உண்மையான வெப்பநிலையிலும் பார்க்க 32 பாகை செல்சியஸ் குறைவாகவே இருக்கும்.

பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட தொழில் புரட்சி காரணமாக, முன்னேற்றம் அடைந்த நாடுகளில் காடுகள் அழிக்கப்பட்டு பாரிய தொழிற்சாலைகள், வீதிகள், கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. விஞ்ஞானம் முன்னேற்றம் அடைந்து பெற்றோலிய பொருட்களால் இயங்கும் மோட்டர் வாகனங்கள், ஆகாய விமானங்கள், கப்பல்கள் போன்றவற்றின் பாவனை அதிகரித்தது. இவற்றிலிருந்து வெளியேறும் வாயுக்களால் வளிமண்டலத்தில் கரியமில வாயுவின் செறிவு அதிகரித்துச் செல்கிறது. இதன் காரணமாக Green House Effect மேலும் இறுக்கமடைந்து, வளி மண்டலத்தில் இருந்து வெளியே கசியும் வெப்பக் கதிர்களை கட்டுப்படுத்துவதன் மூலம் புவி மேற்பரப்பின் வெப்பத்தை அதிகரிக்கச் செய்கிறது. விஞ்ஞானிகளின் தகவலின்படி பூமியின் வெப்பம் 1900 காலப்பகுதிகளில் 0.8 பாகை செல்சியஸ் கூடியுள்ளதாகவும், இது 21 ஆம் நூற்றாண்டில் மேலும் இரண்டிலிருந்து ஐந்து பாகை வரை உயரக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் எதிர்வு கூறப்படுகிறது.

பூமி வெப்பமடைவதால் பாரிய அழிவுகளை நோக்கி உலகம் நகர்வதை நாம் அன்றாடம் கேட்கும், பார்க்கும் செய்திகளில் இருந்து உணரமுடிகிறது. பூமி வெப்பமடைவதால் அதிகளவு நீர் ஆவியாகி எதிர்பாராத மழைவீழ்ச்சி ஏற்பட்டு பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது. அதே நேரம் வாவிகள் ஆறுகள் வற்றி, கடுமையான வரட்சி ஏற்படுகின்றன. வடதுருவத்தில் அமைந்திருக்கும் பனிப்பாறைறகள் உருகி கடலின் நீர்மட்டம் உயர்கிறது. தற்போதைய ஆய்வுகளின் படி கடலின் நீர்மட்டமானது இரு தசாப்தங்களுக்கு மூன்று சென்ரிமீட்டர் என்ற வீதத்தில் உயர்ந்து செல்கிறது. இது 2100 ஆம் ஆண்டளவில் 10 சென்ரிமீட்டரிலிருந்து 1 மீட்டர் வரை அதிகரிக்கலாம் என்று எதிர்வு கூறப்படுகிறது. இதனால் சிறிய தீவுகளை கொண்ட நாடுகள் அழிந்து மறைந்து போகும் அபாயநிலை ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

உலகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக அண்மையில் பல சிறிய தீவுகளை கொண்ட மாலைதீவு நாடு ஒரு விசித்திரமான முறையில் தனது மந்திரிசபை கூட்டத்தை கடலுக்கு அடியில் நடத்தி காட்டியது. தலைநகர் மாலேயில் (Male') இருந்து 35 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கிரிஃபுஷி (Girifushi) தீவில் ஆறு மீட்டர் ஆழத்தில் ஜனாதிபதி முகமது நஷீத் (Mohamed Nasheed ) தலைமையில் கடலுக்குள் அமைச்சரவைக் கூட்டம் நடந்தது. அமைச்சர்கள் அனைவரும் கடலில் முத்தெடுக்கும் வீரர்களை போன்ற உடையுடன் இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். 45 நிமிடம் இவர்கள் கடலுக்கு அடியில் இருந்தனர். அமைச்சரவைக் கூட்டம் 25 நிமிடங்கள் நடந்தது. உலகம் வெப்பம் அடைவதால் எங்கள் நாடு கடலில் மூழ்குவதில் இருந்து காப்பாற்ற உலகத் தலைவர்கள் முன்வர வேண்டும் என இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் இயற்றப்பட்டது.

விஞ்ஞானிகள், சுற்றாடல் ஆய்வாளர்கள், பசுமை புரட்சி அமைப்பினர் போன்றோரின் வற்புறுத்தலால் உலக தலைவர்கள் ஒரு இடத்தில் கூடி மகாநாடுகள் நடத்தி விவாதித்து தீர்மானம் போடுவார்கள். ஆனால் அவற்றை நடைமுறை படுத்துவதுதான் பெரும்பாடாக இருக்கிறது. இதற்கு உதாரணமாக கியோடோ உடன்படிக்கையை கூறலாம். உலக வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றம் போன்றவற்றுக்கு ஏதுவாக இருக்கும் காரணிகளை குறைப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடன் 1997 இல் உருவாக்கப்பட்ட செயல் திட்டங்களே கியோடோ உடன்படிக்கையாகும். இதில் 187 நாடுகள், அமெரிக்கா அடங்கலாக கைசாத்திட்டாலும், அதை நடைமுறை படுத்துவதை அமெரிக்கா உறுதிப்படுத்த வில்லை. முன்னாள் கனடா பிரதமர் ஜோன் கிரிட்டியான் தலைமையிலான அரசாங்கம் இந்த உடன்படிக்கையை நடைமுறை படுத்துவதை உறுதிப்படுத்தினாலும் அதன் பின்வந்த அரசாங்கம் அமெரிக்காவை பின்பற்றி தானும் பின்னடித்தது.

இந்த செயல்திட்டங்களின் படி அபிவிருத்தி யடைந்த நாடுகள் 2008 - 2012 ம் ஆண்டளவில் தமது தொழிற்சாலை களிலிருந்து வெளியேறும் வெப்ப வாயுவின் அளவை 1990 ஆம் ஆண்டளவில் வெளியேறிய வாயுவின் அளவிலும் பார்க்க 5.2 வீதத்துக்கு குறைவாக கட்டுப்படுத்துவது என்பதே முக்கிய குறிக்கோளாகும். இந்தவிடயத்தில் அவுஸ்ரேலியா, ஜப்பான் மற்றும் ஐரோப்பியன் யூனியன் போன்ற நாடுகள் ஓரளவுக்கேனும் உடன்பட்டாலும், அமெரிக்கா இதற்கு உடன்படவில்லை. அமெரிக்காவிலுள்ள தொழிற்சாலைகள் இக்கட்டுப்பாட்டுக்குள் அமையாமல் இயங்கும்போது கனடா தனது நாட்டிலுள்ள தொழிற்சாலைகளில் இக் கட்டுப்பாடுகளை கொண்டுவந்தால், இங்குள்ள தொழில்நிறுவனங்கள் அவற்றிற்கு மூடுவிழா நடத்திவிட்டு அமெரிக்கா நோக்கி நகர்ந்தால் தனது பொருளாதாரம் பாரிய பின்னடைவை சந்திக்கும் என்பதுதான் கனடாவின் நிலைப்பாடு.

இப்படியான ஒரு சூழ்நிலையில்தான் டென்மார்க் என்ற சின்னநாடு 192 அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடைந்து கொண்டிருக்கும் மற்றும் ஏழை நாடுகளின் பிரதிநிதிகளை அழைத்து கோப் 15 என்ற பெயரில் காலநிலை மாற்றம் சம்மந்தமான மகாநாட்டை டிசம்பர் 6 -18 திகதிகளில் கோப்பன்கேஹனில் நடத்தியது. இந்த மகாநாட்டில் மூன்று முக்கிய விடயங்கள் விவாதத்துக்கு விடப்பட்டன.

01. ஏழை நாடுகளுக்கு வருடாந்தம் 100 மில்லியான் டொலர் உதவி
02. விமான எரிபொருள், வங்கிகள் போன்றவற்றிற்கு விசேட காலநிலை வரி
03. வரும் 2050 ஆம் வருடத்துக்குள் கரியமில வாயு வெளியேற்றத்தை 50 வீதம் குறைத்தல்.

பன்னிரண்டு நாட்களாக நடைபெற்ற இந்த மகாநாடு இறுதியில் எவ்வித உடன்பாட்டை யும் அடையமுடியாமல் முடிந்து விடுமோ என்ற அச்சம் ஏற்படுமளவுக்கு அரசியல் தலைவர்களின் நிலைப்பாடுகள் இருந்தன.

காலநிலை மாநாட்டில் முடிவுகள் எட்ட முடியாத நிலை உருவாகியுள்ளது. சீனா, இந்தியா இரண்டு நாடுகளும் மிகவும் ஆமை வேகத்தில் பணியாற்றுகின்றன. கடைசி நாளை நெருங்கிய நிலையிலும் ஓர் உடன்பாட்டை எட்ட முடியாதவாறு இரண்டும், பெரும் தடை போட்டபடி உள்ளன என்று மாநாட்டு மண்டபத்தைவிட்டு வெளியே வந்த பிரான்சிய அதிபர் ஸார்கோஸி தெரிவித்தார். அபிவிருத்தியடையும் நாடுகள் எத்தகைய பிரச்சனையை தந்தனவோ அதேபோன்ற சிக்கலையே சீனா, இந்தியா ஆகிய இரு நாடுகளும் ஏற்படுத்தி வருகின்றன என்று சலிப்புடன் கூறினார். ஒரு கிழமைக்கு முன் வந்து எல்லா ஏற்பாடுகளையும் தானே கவனிப்பதாக கூறிய பராக் ஒபாமா இறுதி நாளே டென்மார்க்கில் காலைப்பதித்தார்.

ஏற்கெனவே இந்தியாவில் விமானக் கோளாறினால் தாமதமாகப் புறப்பட்ட மன்மோகன் சிங் தனது பரிவாரத்துடன் இரவு எட்டு மணிக்கு விமான நிலையம் வந்து, நேரம் பிந்திவரும் ஆசியக் கலாச்சாரத்தை நிலைநாட்டினார். எல்லோரும் விருந்து மண்டபத்திற்குள் போயும் மன்மோகன் சிங் வந்து சேரவில்லை. கடைசியாக வந்து கதவைத்தட்டும் மன்மோகன் சிங் மகாராணி கொடுக்கும் வான்கோழி இறைச்சி விருந்தில் எலும்புத் துண்டைத்தான் பெறப்போகிறார் என்று ஒரு தொலைக்காட்சி அறிவிப்பாளர் வேடிக்கையாகத் தெரிவித்தார்.

கனடா சுற்றாடல் அமைச்சர் தனது மூன்றரை நிமிட உரையில் பட்டும் படாமலும் தமது ஆதரவை தெரிவித்தார். கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் அங்கு சென்றிருந்தாலும் எந்தவிதமான உரையும் நிகழ்த்தாததால் எதிர்கட்சிகளின் விமரிசனத்துக்கு இலக்கானார்.

மகாநாட்டை நீடிப்பு செய்ய வேண்டுமென்று பேசிக்கொண்டிருக்க ரஸ்யத் தலைவர் வானத்தில் பறந்து கொண்டிருந்தார். இரவு ஒன்பதரை மணிக்கே ஒபாமா பறப்பெடுக்கப் போவதாக ஒற்றைக்காலில் நின்றார். சீனத்தலைவர் யாதொரு தீர்விற்கும் வர மறுத்து, பின் ஒபாமாவுடன் பேசி சிறிய மனமாற்றம் அடைந்தார். இருப்பினும் இவர்களை எல்லாம் ஒரு வண்டியில் பூட்டி மகாநாட்டை உருப்படியாக முடிக்க டேனிஸ் பிரதமர் பல வழிகளிலும் முயற்சி எடுத்தார். அவருடைய பணிகளும், இந்த மகாநாட்டை யாதொரு சிக்கல்களும் இல்லாமல் நடாத்தி முடித்த டேனிஸ் அரசின் ஆற்றலும் பாராட்டப்பட வேண்டியது. சின்னஞ்சிறிய நாடாக இருந்தாலும் பென்னம் பெரிய சாதனையை படைத்துள்ளது டென்மார்க் என்பது மறுக்க முடியாத விடயமே.

சுமார் 26 நாடுகளின் தலைவர்கள் இறுதி இரவு முழுவதும் உறங்காது பாடுபட்டு, நடந்து முடிந்த அனைத்தையும் தொகுத்து, கொப்பன்கேகன் அக்கோட் என்ற தீர்மானமாக முன் மொழிந்துள்ளனர். ஜனாதிபதி பராக் ஒபமாவின் இறுதிமுயற்சியால் சில முக்கிய அரசியல் ரீதியான முடிவுகள் எடுக்கப்பட்டு மகாநாடு அரைவேக்காடு நிலையில் முடிவடைந்தது.

1. கரியமிலவாயு வெளியேற்றம் இயலுமான அளவு குறைக்கப்பட்டு, தற்போது நிலவும் சராசரி வெப்பநிலை உயர்வை 2 பாகை செல்சியசால் மட்டுப்படுத்துவது என்பதை அங்கீகரிப்பது.

**அ. அன்ரனி மனோகரன்**
vlambaram@sympatico.ca

தொடர்ச்சி 33ஆம் பக்கம்

## யோகா பயிற்சி வகுப்புக்கள்



அனுபவமிக்க யோகா சிகிச்சை நிபுணரும் (Yoga Therapy Consultant) யோகா ஆசிரியையினால் (Yoga Teacher) நோய்களுக்கான யோகா சிகிச்சையும் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. அத்துடன் தனிப்பட்ட யோகா வகுப்புக்களும் உண்டு. மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 647.348.3423

# FIFA - Player...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

இரண்டு குழந்தைகளுக்கு தாயானார்.

ஸ்டெ்.ப் கிரா்.ப் இளைஞர் டென்னிஸ் மையத்தை தொடங்கினார். போர் மற்றும் இதர இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படும் குழந்தைகளின் வளர்ச்சிக்காக "நாளைய குழந்தைகள" என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தை தொடங்கி நடத்திவருகிறார்.

## 20 ஆண்டுகள் பூர்த்தி

இலங்கை அதிரடி வீரர் சனத் ஜயசூர்யா, சர்வதேச கிரிக்கெட் போட்டியில் கால்பதித்து 20 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. தொடக்கத்தில் டெஸ்ட் போட்டிகளில் அதிரடியாக ஆடி பெயர் பெற்றிருந்தாலும் ஒருதினப் போட்டிகளில் அவர் சோபிக்கவில்லை. 1996 உலகக் கோப்பை போட்டிக்குப் பிறகே ஒருதினப் போட்டிகளில் அவருடைய ஆதிக்கம் தொடங்கியது.

இதுவரை 443 ஒருதினப் போட்டிகளில் விளையாடியுள்ள அவர், 13,397 ரன்களைக் குவித்துள்ளார். இதில் 28 சதங்களும், 68 அரை சதங்களும் அடங்கும். அதேபோல் 110 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 6973 ரன்களை சேர்த்துள்ளார். இதில் 14 சதங்களும், 31 அரை சதங்களும் அடங்கும்.

தான் ஒரு ஆல்-ரவுண்டர் என்பதை நிரூபிக்கும் வகையில் பந்துவீச்சிலும் அவர் சோடை போகவில்லை. ஒருதினப் போட்டிகள் மூலம் 322 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். ஒருதினப் போட்டிகளில் 10 ஆயிரம் ரன்களும், 300க்கும் அதிகமான விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர் இவர் ஒருவரே. ஒருதினப் போட்டிகளில் சிறப்பாக விளையாடி சிறந்த ஆட்டக்காரருக்கான விருதை 48 முறை பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளார். (சச்சின் டெண்டுல்கர் 60 முறை சிறந்த ஆட்டக்காரருக்கன விருதைப் பெற்று முதலிடத்தில் உள்ளார்.)

இலங்கை அணி ஆபத்தான கட்டங்களில் இருக்கும்போது அதிரடியாக விளையாடி பல முறை வெற்றியை ஈட்டித் தந்துள்ளார். 1997-ல் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அவர் எடுத்த 340 ரன்களே அவரது அதிகபட்ச ஸ்கோராகும். டெஸ்ட் போட்டிகளில் மறவன் அட்டப்பட்டுவுடன் இணைந்து, தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கி இருவரும் சேர்ந்து 4469 ரன்களைச் சேர்த்துள்ளதும் ஒரு சாதனையாகும்.

## தடகளத்துக்கு அழகு சேர்த்தவர்

தட களப் போட்டிகளுக்கு அழகு சேர்த்தவர் பிளாரன்ஸ் கிரி்.பித் ஜாய்னர் (38). 1959 டிசம்பர் 21-ல் அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சலீஸில் பிறந்தவர். தனது 7-வது வயதில் இருந்தே ஓட்டப் பயிற்சியில் ஈடுபட்டார்.

அவர் வென்ற பதக்கங்களை விட அவரது நீண்ட கூந்தல், நேர்த்தியான "மேக்-அப்", பாலி' போட்டுக் கொண்ட நீண்ட நகங்கள் ஆகியவற்றுக்காகவே விளையாட்டு ரசிகர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்தவர். அவரிடம் இது குறித்து கேட்டோது, "ஓட்டப் பந்தயத்தில் ஓடுவது எவ்வளவு முக்கியமோ, பார்ப்பதற்கு அழகாக இருப்பதும் முக்கியம்" என்று அவர் பதிலளித்தார். 1984 லாஸ் ஏஞ்சலீஸ் ஒலிம்பிக் போட்டியில் 200 மீ. ஓட்டத்தில் வெள்ளி வென்றார். அதன் பின்னர் ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

1984-ல் மும்முறை தாண்டுதலில் தங்கம் வென்ற அல் ஜாய்னரை 1987-ல் திருமணம் செய்து கொண்டார். பின்னர், 1987-ல் ஓய்வு பெறும் முடிவைத் திரும்பப் பெற்று ரோமில் நடைபெற்ற உலக தட களப் போட்டிகளில் பங்கேற்றார். 1988 சியோல் ஒலிம்பிக்தான் அவரது தட கள வாழ்வின் பொற்காலம் எனலாம். அதுவரை 200 மீ. பந்தயங்களில் மட்டுமே அதிகமாகப் பங்கேற்ற அவர், 100 மீ. ஓட்டத்தில் பங்கேற்றதுடன் அல்லாமல் 10.54 வினாடிகளில் இலக்கை எட்டி தங்கம் வென்றார்.

தனது விருப்பமான 200 மீ. ஓட்டத்தில் கால் இறுதியிலும், இறுதியிலும் 2 முறை உலக சாதனை (21.34 வி.) படைத்து தங்கம் வென்றார். 100 மீ. தொடர் ஓட்டத்தில் தங்கமும், 400 மீ. தொடர் ஓட்டத்தில் வெள்ளியும் வென்ற அமெரிக்க அணியில் இடம்பெற்றார். அந்த ஒலிம்பிக் போட்டிக்குப் பின், திரைப்படம், தொலைக்காட்சி, விளம்பரங்கள் என அவருக்கு ஏராளமான வாய்ப்புகள் குவிந்தன. இதன் மூலம் 1989-ல் மட்டும் அவருக்கு சுமார் ரூ.20 கோடி கிடைத்தது. அந்த ஆண்டே தட களப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அவர் அறிவித்தார். இருப்பினும், தனது கணவருக்குப் பயிற்சியாளராக இருந்து கொண்டே மாடலிங் மற்றும் நடிப்புத் தொழிலில் ஈடுபட்டார்.

1988-ல் அவரது வெற்றிக்கு அவர் ஊக்கமருந்து எடுத்துக் கொண்டதுதான் காரணம் என 1984-ல் தங்கம் வென்ற பிரேசில் வீரர் ஜோகுவிம் குரூஸ் குற்றம்சாட்டினார். ஊக்க மருந்து சோதனை 1989 முதல் அமலுக்கு வருவதாக அறிவித்ததால்தான் அவர் முன்னரே ஓய்வு பெற்றார் என்றும் அவரது எதிர்ப்பாளர்கள் கூறினர்.

குறுகிய காலத்தில் வெற்றிகள் ஈட்டிய பிளாரன்ஸ் எதிர்பாராதவிதமாக, 1998 செப்டம்பர் 21-ல் தூக்கத்திலேயே மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார்.

# எம்மை நாம்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

மயக்கம், பார்வையில் மங்கல், இருதயம் படபடப்பு, அதிக வியர்வை, நடையில் ஒழுங்கீனம், பேச்சில் மாற்றம், சிலவேளை மரணத்தையும் ஏற்படுத்தலாம். தற்பாதுகாப்பிற்காக பழச்சாறு, குளுக்கோஸ் அல்லது இனிப்புப்பானம் கொடுத்து தாமதிக்காமல் வைத்தியசாலைக்குச் சென்று உரியவைத்தியர்களைக் கண்டு சிகிச்சை பெற்றுக் கொள்வது மிகமிக நன்று.

தைராய்ட் சுரப்பி குறைவாகச் சுரக்கும் நிலையில் வேலை செய்யும் போது உடலின் வேலை செய்யும் ஆற்றல் குறைகின்றது. இதனால் பாதிக்கப்பட்டவர் வேலைகள் செய்வதில் மந்தநிலையை அடைவதுடன் உணவும் உண்ணவிருப்பமின்றி உடலும் பருமமான தோற்றத்தைக் கொடுக்கும். குளிர்ச்சிநிலை உடலில் காணப்படும். ஆனால் தைராய்ட் சுரப்பி அதிகரித்திருந்தால் மேல்கூறியவற்றுக்கு எதிரிடையாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொள்ளவும். ஆண்கள் ஒரு சிலரைப் பார்க்கும் போது வயது வந்தவராக இருந்தும் தாடி, மீசை மயிர்கள் வளர்ச்சியில்லாமல் இருப்பர். இது இயக்குநீர் குறைவதால் ஏற்படும் நிலையாகும். இந்நிலையைத் தவிர்த்துக்கொள்ள விஞ்ஞானம் விருத்தியடைந்த இக்காலத்தில் இயக்குநீர்களின் அளவைக்கண்டு கொள்வ தற்குப்பல பரீட்சைகள் வந்துள்ளதினால் நிவர்த்தி செய்வதற்கும் வழியுண்டு. எனவே தங்கள் வைத்தயரிடம் சென்றால் பலன் கிடைக்கும்.

தைரொயிட் இயக்குநீர் ஒழுங்காக சுரப்பதற்கு சிலகாரணங்கள் உண்டு. அதாவது ஆரோக்கியமான தைரோயிட் திசு, தரமுள்ள உணவுகள், தைரோயிட் இயக்கு நீர் சுரக்க தூண்டும் சக்தி. இவை இன்றியமையாதன. தூண்டும் சக்தி மூளையின் அடிப்பாகத்தில் உள்ள கபச்சுரப்பியில் (Pituitary) இருந்து உற்பத்தியாகின்றது என்பதை நன்கு அறிந்து கொள்ளுங்கள்.

மேலும் சிறுவர்களுக்கு தைரோயிட் குறைபாட்டால் ஏற்படும் நோயை (Cretinism) என்றும் பெரியவர்களுக்கு ஏற்படும் நோயை Myxedema எனவும் அழைக்கப்படுகின்றது.

குழந்தை அல்லது சிறுவர்களுக்கு தைரோயிட் குறைவு காணப்படும்போது, உடல் வளர்ச்சி குன்றும். இவர்களின் சருமம் (தோல்) தடித்துக்காணப்படும். நாக்கு, வாய், உதடு தடிப்பதுடன் உடல்சூடு குறையும். மேலும் காதுகள், அழகற்று, மூக்குப் பகுதி சப்பையாகவும் உருவம் மாறியும் இருக்கும். குரல் தடித்த ஒலியில் இருக்கும். இப்படி நிலையில் காணப்படும் குழந்தைகள் பிறந்து 5, 6 வாரத்துக்குள் நிலைமையை கண்டுபிடித்து உரியமருந்தைக் கொடுத்தால் குழந்தை வளர்ச்சியடைந்து யாவும் மாற்றம் பெற்றுச் சுகம் காணமுடியும். இதனைக் தவிர்த்துக் கொண்டால் அக்குழந்தை நாளடைவில் காதுகேட்காத ஊமைத்தன்மையான நிலையும் ஏற்படும் எனக் கூறப்படுகின்றது. கவலையை வரஅழைத்து விடாதீர்கள். பெரியவர்களுக்கு தைரோயிட் சுரப்பி குறைந்து சுரந்தால் உடலில் கொழுப்பும் நீரும் அதிகரிக்கும். பசித்தன்மை இருக்காது. மனமும் உடலும் சோர்வாக இருக்கும். குளிர்தன்மை அதிகரித்து இருக்கும். சருமத் தோல் செம்மை பொருந்தியதாக இருக்கும். தூக்கம் குறைவடையும், பேச்சுத்தன்மை குன்றும், பாலியல் தன்மை உணர்வற்றிருக்கும். சிலவேளையில் நெஞ்சுவலியும் காணப்படும். இது இருதயச் செயல் குன்றுவதினால் ஏற்படும். இத்தன்மையானவற்றை மைக்ஸிடிமா (Myxedema) நோய் எனக்குறிப்பிடுவர். தவறாது வைத்தியர்கள் மூலம் சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள்.

மேலும் தைரோயிட் சுரப்பி அதிகம் சுரப்பதை தைரோக்சி Thyrotoxicosis என அழைக்கப்படுகின்றது. இத்தன்மையுள்ளபோது தைரோயிட்சுரப்பி பெருத்துக்காணப்படும். நாடித்துடிப்பு அதிகரித்து இருக்கும். கண்கள் முன்தள்ளப்பட்டிருக்கும். நரம்புகளில் மாற்றம் தென்படும். இந்த நோயாளிக்கு பசியிருந்தும் உடல் மெலிவுடன் காணப்படும். வியர்வையும் வந்துகொண்டிருக்கும். இருதயத்துடிப்பு வேகத்துடன் காணப்படும். மிகவும் உணர்ச்சி வசப்படுவர். மூச்சுக்கஸ்டமும் தென்படும். நடையில் மாற்றம் இருக்கும். தோல் பகுதியில் கருமஞ்சள் புள்ளிகளும் சிலருக்கு காணப்படும். எதற்கும் நன்கு அவதானித்துக் கொள்ளுங்கள்.

எனவே மேல்கூறியநிலையில் உள்ளவர்கள் உணவு வகையில் சோயாபீன்ஸ், கரட், முட்டைக்கோஸ், பருப்புவகை, பால் முதலியவற்றைப் பாவித்து வரலாம். மேலும் தங்கள் வைத்தியர்களிடம் சென்றால் சகல நோய்க்குரிய பரீட்சைகளைச் செய்து சிகிச்சை பெறுவதுடன் தகுந்த சிறந்த ஆலோசனை களையும் பெற்றுச் சுகம் பெறமுடியும். இங்கு சகல துறைகளிலும் ஆற்றல் உள்ள வைத்தியர்களும் பொருட்களும் உண்டு. எல்லாம் எம்மைப் பொறுத்தவையாகும். நம் முயற்சி திருவினையாக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளுகின்றேன்.

# மாளிகை...

தோல்வியுற்றன, ரனசுராவின் படைகளை வென்று, தர்மபாலாவின் நாட்டிற்குள் நுழைந்து, அங்கே அம்மன்னனை வென்று கங்கை வரை சென்ற ராஜேந்திரன், தோல்வியுற்ற மன்னர்கள் மூலமாகவே கங்கை நதியை சோழநாட்டுக்கு எடுத்து வந்தான். இதற்கான வரலாற்று ஆதாரங்கள் திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் உள்ளது. தன் வெற்றிப் பயணத்தில் மகிபாலனை வென்று வங்காள தேசத்தை சோழநாட்டுடன் இணைத்த வெற்றியைச் சிறப்பிக்கவ, பட்டீஸ்வரத்தில் சோழீச்சுவரம் என்னும் புதிய தலைநகரத்தை உருவாக்கினான், ராஜேந்திர சோழன். கங்கை வரையில் சென்று வெற்றி பெற்றதை நினைவூட்ட, கங்கைப் புனித நீரைக் கொணர்வித்து, சோழீச்சுவரம் மேற்கில் சயங்கொண்டான் செல்லும் சாலையருகே மாபெரும் ஏரியைத் தோண்டி, அதனில் ஊற்றி, ஜலமயமான வெற்றிச் சின்னமாகப் போற்றிக்



கொண்டாடினான். சோழ கங்கையான அந்த ஏரி இக்காலத்தில் பொன்னேரி என்று அழைக்கப்படுகிறது. சோழீச்சுவரம், கங்கை கொண்ட சோழபுரம் ஆனது. பதினொன்றாம் நூற்றாண்டின் நடுவில் ராஜேந்திர சோழனால் சோழர்களின் தலைநகரமான கங்கை கொண்ட சோழபுரம் பதிமூன்றாம் நூற்றாண்டு வரை சோழர்களின் தலைநகரமாக விளங்கியது.

பிற்காலத்தில், பாண்டியப் பேரரசின் எழுச்சியால் வீழ்ச்சியுற்ற சோழப் பேரசு கால ஓட்டத்தில் இல்லாமல் போனது. மாளிகைகள் மண்மேடாயின. கங்கை கொண்ட சோழபுரம் கோயில் மட்டும் சிதைவுகளுடன் எஞ்சி நிற்கின்றது. தமிழின் ஒரே மாமன்னன், ராஜராஜா சோழனின் அருந்தவப் புதல்வன், ராஜேந்திர சோழனின் தலைநகரம், ஏறக்குறைய 250 ஆண்டுகளுக்கு ஒரு மிகப் பெரிய பலமான பேரரசின் தலைநகராக இருந்த ஊர் இன்று மாளிகை மேடு என்ற ஒரு சிற்றூராக மாறிவிட்டது காலச்சக்கரத்தின் கோலம்.

## எப்படிச் செல்வது? எங்கே செல்வது?

மாளிகை மேடு, கங்கைகொண்ட சோழபுரத்திற்கு அருகில் உள்ளது. தஞ்சாவூர் அல்லது கும்பகோணம் சென்று அங்கிருந்து மாளிகை மேட்டுக்குச் செல்லலாம். சென்னை, திருச்சி உட்பட தமிழகத்தின் முக்கியமான எல்லா நகரங்களில் இருந்தும் தஞ்சாவூருக்கும் கும்பகோணத்துக்கும் பேருந்து, ரயில் போக்குவரத்து உள்ளது. கங்கைகொண்ட சோழபுரம் மிகச் சிறிய ஊர். எனவே, அங்கு தங்கும் விடுதிகள் கிடையாது. தஞ்சாவூர் அல்லது கும்பகோணத்தில் தங்கி வருவது சிறந்தது.

# மாளிகை மேடு - சோழப்பேரரசின் தலைநகரம்

## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 70

தமிழர்கள் காலாகாலத்துக்கும் பெருமைபடத்தக்க ஒரு விஷயம் இது.

முதன் முதலில் ஒரு இந்திய அரசன், இந்தியாவுக்கு வெளியே படையெடுத்து அதில் வெற்றியும் பெற்றான் என்றால் அது ஒரு தமிழ் அரசன் தான். அவன், ராஜராஜ சோழனின் மகனான ராஜேந்திர சோழன்.

இந்தியாவுக்குள் பெற்ற பெரிய வெற்றிகளைத் தொடர்ந்து, மிகப்பெரும் கடற்படையுடன் சிங்கை, மலேசியா, இலங்கை நாடுகளின் மீது படையெடுத்து, இந்த நாடுகளை சோழப் பேரரசுக்கு கீழ் கொண்டுவந்தான் இராஜேந்திர சோழன். ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு மேல் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கெல்லாம் தலைநகராக விளங்கியது, இராஜேந்திரச் சோழனின் தலைநகரான கங்கைகொண்ட சோழபுரம். இந்தியா, இலங்கை, மலேசியா (கடாரம்), நக்கவாரம் (நிக்கோபார்), கம்போடியா உள்ளிட்ட தென்கிழக்கு ஆசிய பகுதிகள் எல்லாம் இந்த ஊரிலிருந்து ஆட்சி செய்தவர்களுக்கு கட்டுண்டு கிடந்தன. ராஜேந்திரச் சோழன், தாம் பெற்ற வெற்றிக்கு அறிகுறியாகவும் பக்தியார்வ வெளிப்பாடாகவும் கங்கைகொண்ட சோழபுரத்தில் கட்டிய கோயில் இன்றும் வரலாற்றின் சாட்சியாக கம்பீரமாக நின்று கொண்டிருக்கிறது. (மெய்சிலிர்க்கக் கூடிய கட்டடக் கலையையும் சிற்பக்கலையையும் பிரம்மாண்டமான உருவத்தில் படைக்கப்பட்டிருக்கும் இந்தக் கோயிலை நாம் ஏற்கெனவே பார்த்தோம்.) ஆனால், கடல் கடந்த வெற்றிகளைப் படைத்த ராஜேந்திர சோழன் வாழ்ந்த அரண்மனை எங்கே? தேடினால் ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது. சோழர்களின் கற்கோயில்கள் பலவும் காலவெள்ளத்தை எதிர்த்து நிற்க, சோழ அரண்மனைகள் அழிந்துவிட்டன. அரண்மனைகள் இல்லாவிட்டாலும், அதன் சுவடுகள், அந்த மண் இப்போதும் இருக்கும்தானே. மாமன்னர்கள் வாழ்ந்த அந்த மண்ணில் நம் கால் பதிய வேண்டாமா?

ஆம், இந்த மாதம் நம் பயணம் ராஜராஜசோழனும் ராஜேந்திர சோழனும் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த பூமிக்கு.

சோழ மன்னர்கள், தஞ்சாவூரிலும் கங்கைகொண்ட சோழபுரத்திலும் உறையூரிலும் அழகான அரண்மனைகள் கட்டி வாழ்ந்துள்ளனர். நாளோலக்க மண்டபம், கருவூலம், அந்தப்புரமாகிய உட்கோட்டை, படைக்கலக்கொட்டில், கோட்டைச் சுவர்கள் என திட்டமிட்டு அந்த அரண்மனைகளைக் கட்டியுள்ளனர் என வரலாறு சொல்கிறது. அந்த ஊர் எங்கே என தஞ்சாவூர், கும்பகோணம் சுற்று வட்டாரங்களில் விசாரித்தால், பட்டீஸ்வரம் ஊரைக் கை காட்டுகிறார்கள். மிகமிகத் தொன்மையான அந்த ஊரில் போய் இறங்கினால், அங்கே மிக அழகான ஒரு கிராமம். இப்போதும் அங்கு ராஜராஜசோழன் வாழ்ந்த மாளிகை ஒரு மேடு போல இருக்கிறது. அந்த இடத்தில் சூலங்கள் நட்டு வழிபடுகிறார்கள். மிகப் பெரிய ஒரு ஆலமரம் விழுதுவிட்டு படர்ந்திருக்கிறது.



கங்கைகொண்ட சோழபுரத்தின் தென்மேற்குப் பகுதியில், கி.பி.10ஆம் நூற்றாண்டில் ராஜேந்திரசோழன் மாளிகை அமைத்து அரசாட்சி செலுத்தினான் என்பதை வரலாற்றில் நீங்கள் படித்திருக்கலாம். அந்த இடம்தான் இப்போதிருக்கும் இந்த சிறிய மண்மேடு. ராஜேந்திர சோழன் தொடங்கி ராஜாதிராஜ சோழன், ராஜேந்திர சோழன் - 2, வீரராஜேந்திர சோழன், அதிராஜேந்திர சோழன், குலோத்துங்க சோழன் - 1, விக்கிரம சோழன், குலோத்துங்க சோழன் - 2, ராஜராஜ சோழன் - 2, ராஜாதிராஜ சோழன் - 2, குலோத்துங்க சோழன் - 3, ராஜராஜ சோழன் - 3 என பதினோரு மன்னர்கள் ஆண்ட அரண்மனை இருந்த இடம். அந்த இடத்திற்கு அருகில் போகும்போதே பழமையான, மிகத் தொன்மையான, பல தமிழ் மாமன்னர்கள் வாழ்ந்து மறைந்த ஒரு இடத்திற்கு போகிறோம் என்ற உணர்வு ஏற்பட்டு, மெய் சிலிர்க்கிறது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்பதால் தொல்லியல் துறையினர் அந்த இடத்தைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். வருங்கால சந்ததியினருக்கு தமிழர்களின் வரலாறு தொடர்பான உண்மைகளை உணர்த்தும் விதமாக, எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத்தில் 1980களில் இங்கு அகழ்வாராய்ச்சி செய்ய உத்திரவிடப்பட்டது. இந்த அகழ்வாராய்ச்சி தொடங்கிய கொஞ்ச காலங்களிலேயே, மாளிகை மேடு பகுதியில் அரண்மனை பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டன. தரை மட்டத்துக்கு 6 அடிக்கு கீழ், சுமார் 4 அடி அகலமுள்ள செங்கல் சுவர்கள் வெளிப்பட்டன. இதனால், உற்சாகமடைந்த தொல்லியலாளர்கள் தொடர்ந்து அகழாய்வு செய்ததில் ராஜேந்திர சோழனும் அவனது வழிவந்த சோழ மன்னர்களும் வாழ்ந்த அரண்மனையின் சுவடுகள் கண்டறியப்பட்டது. சுமார் 7 அடிக்கும் மேலாக அஸ்திரம் போடப்பட்ட சுவர்கள், மிகப் பெரிய 5 அடி அகலமுள்ள இரண்டிரண்டு சுவர்கள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு, அதன் மேல் தூண்களையும் சுவர்களையும் எழுப்பி அரண்மனையைக் கட்டி இருக்கின்றார்கள். அவற்றின் பகுதிகள் இப்போது கிடைத்திருக்கின்றன. அத்துடன் வண்ணம் பூசப்பட்ட சுண்ணக்காரைகளும் கிடைத்திருக்கின்றன. அவற்றிலிருந்து மாளிகையின் பல பகுதிகள் அழகிய சித்திரங்கள் தீட்டப்பட்டுத் திகழ்ந்தன என்பதற்கான ஆதாரங்களும் கிடைத்திருக்கின்றன. அகழ்வாராய்ச்சியின் போது, கிடைத்த சில அரிய பொருள்களைக் கொண்டு, மாளிகை மேட்டில் ஒரு சிறப்பு கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. அந்த மதிப்பரிய செல்வங்கள் மறைந்து போன, நாம் மறந்து போன நம் பண்டையப் பெருமையை நமக்கு நினைவூட்டி நிற்கின்றன. முதலாம் ராஜேந்திர சோழனின் பெருமையைப் பறைசாற்றுகின்றன.

ராஜராஜ சோழனின் ஆட்சிக் காலத்திலேயே (கி.பி. 1012), ராஜேந்திர சோழன் இணை அரசனாக பொறுப்பேற்றுக் கொண்டான். அப்போதே அவனது வெற்றிப் பயணமும் தொடங்கியது. ராஜராஜனின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற வேங்கி மற்றும் கலிங்கப் போர்களில் ராஜேந்திர சோழன், ராஜராஜ சோழனின் படைகளுக்கு பொறுப்பேற்று வெற்றிபெற்றான். இதனால், ராஜராஜ சோழனின் இணை அரசனாக பதவியேற்ற இரண்டு ஆண்டுகளிலேயே ராஜேந்திரன் பட்டத்து அரசனாக முடிசூட்டப்பட்டான். அதன்பிறகு ஏறக்குறைய 26 ஆண்டுகளுக்கு இருவருமாய் சோழப் பேரரசை நிர்வகித்து வந்தனர். விஜயாலய சோழன் காலத்தில் தொடங்கிய சோழப் பேரரசு ராஜேந்திரன் காலத்தில் அதன் பொற்காலத்தை அடைந்தது. இதனாலேயே, சோழ மன்னர்களில் ராஜேந்திரனுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்ற பெருமை அவனுக்கு பிற்காலங்களில் கிடைத்தது. தன்னுடைய ஆட்சிக் காலத்தில் ராஜேந்திர சோழன் ஏற்கெனவே பரந்து விரிந்திருந்த சோழப் பேரரசின் பரப்பை மேலும் விரிவுபடுத்தினான். சோழப் பேரரசு, இலங்கை, மாலைத்தீவு, கடாரம், ஸ்ரீவிஜயம், மலேயா (சிங்கப்பூர் - மலேசியா), சுமத்ரா ஆகியவற்றை உள்ளடக்கிய மிகப்பெரிய நிலப்பரப்பாக இருந்தது.

முதலாம் ராஜராஜ சோழன் தொடங்கி வைத்த இலங்கையின் மீதான படையெடுப்பை நிறைவு செய்யும் விதமாகவும், பராந்தக சோழன் காலத்திலேயே தேடப்பட்டு கண்டறிய முடியாமல் போன, பாண்டிய அரசர்களால் இலங்கை அரசர்களிடம் கொடுத்து வைக்கப்பட்டதாகச் சொல்லப்படும், இந்திரன் பாண்டியர்களுக்கு அளித்த இரத்தினக் கற்கள் பொறித்த வாளையும் முத்து மாலையையும் கண்டறியும் விதமாகவும், இலங்கையின் மீது கி.பி. 1018இல் ராஜேந்திரச் சோழன் படையெடுத்தான். இந்தப் படையெடுப்பில் பெரும் வெற்றி பெற்ற இராஜேந்திரன் ஈழநாட்டு பட்டத்து அரசன், அரசி, இளவரசியை சிறைகொண்டு சோழதேசம் வந்தான். சிங்கள அரசன் 'மஹிந்தா - 5' பன்னிரெண்டு ஆண்டுகால சிறைவாசத்துக்குப் பிறகு, ராஜேந்திரனின் சிறையிலேயே இறந்து போனான். இதைப்பற்றி சிங்கள தேசத்து சுயசரிதைக்கு ஒப்பான 'மஹா வம்சமும்' கூறுகிறது.

சிங்களப் படையெடுப்பைத் தொடர்ந்து பாண்டியர்களுக்கும் சேரர்களுக்கும் எதிரான படையெடுப்பை ராஜேந்திரன் மேற்கொண்டான். இதை இம்மன்னனின் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் உறுதி செய்கின்றன. இதில், பாண்டியர்களுடைய ஒளிபொருந்திய மாசில்லாத முத்துக்களை கவர்ந்தான் என்றும், தொடர்ச்சியாக கடுமையான மலைப் பகுதிகளைக் கடந்து சேர மன்னர்களை அழித்தான் என்றும் செப்பேடுகள் உறுதி செய்கின்றன.

இதன்பிறகு, இராஜேந்திரன் தன்னுடைய கவனத்தை மேலைச் சாளுக்கியர்களை நோக்கித் திருப்பினான். ராஜேந்திரன் மேற்கொண்ட யுத்தங்களில் இது மிகவும் முக்கியமானது. சாளுக்கிய அரசன் சத்யாச்சிரயனுக்கு எதிரான

**வழிப்போக்கன்**

போரில் ராஜேந்திரன் துங்கபத்திரா ஆற்றைக் கடந்து சாளுக்கிய நாட்டின் தலைநகர் வரை படையெடுத்துச் சென்று வெற்றிபெற்றான். மேலை, கீழைச் சாளுக்கிய தேசங்களிலும், இலங்கை, பாண்டிய சேர தேசங்களிலும் கிடைத்த தொடர்ச்சியான வெற்றியும், அதன் காரணமாக இல்லாமல் போயிருந்த சோழ நாட்டிற்கெதிரான கிளர்ச்சிகளும் கலகங்களும் ராஜேந்திரனை கங்கை நோக்கிய படையெடுப்பை நடத்த வைத்தன. இதில் சோழர் படைகள் வங்கதேசத்தின் பால வமிசத்து புகழ்பெற்ற மன்னனான மகிபாலனை எதிர்த்து பெரும் வெற்றிபெற்றது. திருவாலங்காட்டுச் செப்பேடுகள் ராஜேந்திரனின் இந்தக் கங்கை நோக்கிய படையெடுப்பு ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் நீடித்தன என்று சொல்கின்றன. இந்த இரண்டு ஆண்டு காலத்தில் வட இந்தியாவின் அரசுகள் சோழர்களின் பெரும்படைக்கு முன்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்




COTTAGE / CAMPGROUND FOR SALE
Property and Business

*10 River front cottages with 1-2-3 bedrooms fully equipped comfortable house keeping. 20 trailer homes. One bungalow house with double car garage. Big party hall. The property has own access to the front river. Motor boating, fishing and swimming, 3 boats. 1 Johndeer, 2 golf carts.* 1½ hours from Toronto



Sugu: 416.727.6525 www.hickorygrovecottages.com www.troutwatercamping.com

# Under The Bombs



## வானரன்

பாலஸ்தீனிய-இஸ்ரேல் போர் பாலஸ்தீனியத்தை இரு பகுதிகளாக பிரித்துள்ளது. காசா, வெஸ்ட் பாங் என்ற இந்த இரு பகுதிகளும் கலாச்சார மாற்றங்களையும் கொண்டுள்ளன. கமாசின் கட்டுப்பாட்டில் உள்ள காசா தீவிர இஸ்லாமிய கலாச்சாரத்தை கடைப்பிடிக்க மக்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். குண்டுகள் இவர்களின் விளையாட்டகங்கள் உட்பட்ட பலவற்றை அழித்துவிட்டது. கமாஸ் திரை அரங்குகளை மூடிவிட்டது. இசையை அங்கு அரிதாகவே கேட்கலாம். இஸ்ரேல் குழந்தைகள் விளையாட்டு பொருட்களை தடை செய்துவிட்டது. கடத்தலில் வரும் விளையாட்டு பொருட்களே குழந்தைகளிடம் உள்ளது. குண்டுகள் குழந்தைகளை கொல்கின்றன. தீவிரவாதிகள் பிள்ளை பிறப்பை அதிகரிக்க உற்சாகப்படுத்துகின்றனர். உலகிலேயே அதிக பிள்ளை பிறக்கும் பிரதேசம் காசாவாகும். இங்கு சராசரியாக 5.1 பிள்ளைகள் ஒரு பெற்றோருக்கு பிறக்கின்றன. பெரும்பாலான மக்கள் வெளி உலகத்தை அறியாதவர்கள். 70 வீதமானோரின் மாத வருமானம் வெறும் ஒரு டொலருக்கு குறைவானவையே. உலகின் முதல் தோன்றிய குடியிருப்புக்களில் காசாவும் ஒன்று கி.மு 3000ம் ஆண்டளவில் ஏற்பட்டதாக கூறப்படுகின்றது.



2006 கோடை காலம் இஸ்ரேலிய துருப்புக்கள், லெபனான் மீது தொடர்ச்சியாக 34 நாட்கள் குண்டுகளை வீசித் தள்ளின. இந்த போருக்கான ஆரம்பம் ஹிஸ்புல்லா படைகளால் என கூறப்படுகின்றது. யூலை 12ம் நாள் இரண்டு இஸ்ரேலிய படை வீரர்களை கைப்பற்றியமையே காரணம் என இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது. ஆனால் இதற்கு முன்பாக ஹமாஸ் படைகள், இஸ்ரேலிய இராணுவ அதிகாரி Gilad Shalit ஐ கைப்பற்றி, பல ஆயிரம் ஹமாஸ் கைதிகளை விடுதலை செய்யக் கோரியது. இதன் தொடர்ச்சியே ஹிஸ்புல்லாவின் நடவடிக்கை. விளைவு இஸ்ரேல் வழமை போல் மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி குண்டு மழை பொழிந்தது. இதற்கு பதிலளித்த ஹிஸ்புல்லா படைகள் C-802 Silkworm missile மூலம் இஸ்ரேலிய கப்பலை மூழ்கடித்தது. இறுதியில் ஒரு மில்லியன் அரபு மக்கள் அகதிகளாயினர். பல ஆயிரம் அரேபியர்கள் கொலை செய்யப்பட்டனர்.

இந்த போர் உச்சத்தில் இருந்த ஒரு நாள் பெய்ரூத் வாடகை கார் நிலையம் பரபரப்புடன் இயங்கியது. தெற்கு லெபனானை நோக்கி குண்டு மழைகள் பொழிந்த வண்ணமிருந்தன. பல கட்டிடங்கள் வீழ்ந்ததையும் பெரும் புகை மண்டலம் கிளம்பிக் கொண்டிருந்ததையும் அமெரிக்க - ஈராக் போரின் போது இக் காட்சிகளை தொலைக் காட்சியில் பார்த்திருப்பீர்கள். மக்கள் திசை கெட்டு ஓடிக் கொண்டிருந்தார்கள். வன்னி இறுதிப் போரை நினைவு படுத்தும் காட்சிகள். குழந்தைகள் பெற்றோரை தேடிக் கொண்டிருந்தன. Zeina (Nada Abou Farhat) வாடகை கார் ஒன்றை தேடிக் கொண்டிருந்தார். பலர் தெற்கு லெபனானுக்கு செல்ல மறுத்து விட்டனர். அனைவரும் டமாஸ்கஸ் வரை செல்லத்தான் விரும்பினர். இறுதியாக ரொனி இதற்கு உடன்படுகின்றார். சினா முதலிலேயே கறாராக 'எவ்வளவு காசு' எனக் கேட்கின்றார். 300க்கு உடன் படுகின்றனர். முதலில் 150ம், இறங்கும் பொழுது மிகுதி 150ம் என தீர்மானமாகின்றது. சினா ஓர் இளம் பெண். சுமார் 35 வயது மதிக்கத்தவள். வசீகரமானவர். வழமையான அரேபிய பெண்களைப் போலல்லாது நாகரிகமாக உள்ளார். தலையைச் சுற்றி துண்டு அணியவில்லை. ரொனிக்கு ஆரம்பம் முதலே சினா மீது ஒரு கண்.

இவர்கள் மிகவும் கடினமான பாதையில் பயணிக்கின்றனர். இடையில் ரொனி மீண்டும், மீண்டும் கேட்ட பின்னர், சினா தான் தனது மகனையும், சகோதரியையும் தேடிச் செல்வதாக கூறுகின்றாள். ரொனிக்கு வாடகைக் கார் ஓட்டுவதை விட, பகுதி நேரமாக அகதிகளுக்கு மருந்துகள் விற்பனையும் செய்கின்றார். ரொனி, சினாவை முதல் ஒரு முகாமில் விட்டு விட்டு தனது பகுதி நேர மருந்துகள் வாங்க சென்று விடுகின்றார். சினாவிற்கும், கணவனுக்கும் ஏற்பட்ட சண்டையால் அண்மையில் பிரிந்து விட்டனர். மகன் தங்களது சண்டைகளால் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக சகோதரி மகாவுடன் அனுப்பிவிட்டு டுபாய் சென்று விடுகின்றார். போரின் போது தெற்கு லெபனான் மிகவும் பாதிக்கப்பட்டதை அறிந்தே இங்கு வந்துள்ளார்.

இவர்களது தேடும் படலம் தொடர்கின்றது. இறுதியாக ஒரு உடைந்த கட்டிடத்தின் முன்னால், அங்குள்ளவர்களால் சினாவின் சகோதரி மகா குண்டு வீச்சில் இறந்தது உறுதிப்படுத்தப்படுகின்றது. மகன் கரீம் உயிருடன் இருப்பது உறுதியாகின்றது. பிரெஞ்ச் ஊடகவியலாளர்கள் கூட்டிச் சென்றதாக கூறுகின்றனர்.

மகாவின் மரணம் சினாவை மிகவும் பாதிக்கின்றது. போரை நோக்கி சினா எழுப்பும் கேள்விகள் நியாயமானவை. அன்றிரவு அங்குள்ள விடுதியில் தங்குகின்றனர். இரவு மகாவை நினைத்து அழுகின்றார். மகாவின் உடலைக் கூட சினா காணவில்லை. சினாவின் துயரம் வார்த்தைகளாக வெடிக்கின்றது.

"Let them bury her themselves"

"They didn't ask her opinion nor mine either, even for this war"

"No…it is not my war…..it is not yours"

இவை மிகவும் முக்கியமானவை. இந்தப் போரைப்பற்றி எங்களிடம் அபிப்பிராயம் கேட்கவில்லை. இறந்தவர்களிடமும் கேட்கவில்லை. நாங்கள் போரில் யார்? இறக்கப்படுபவர்கள். எங்களது எண்ணிக்கையில் தான் உங்களது அரசியல் உள்ளது. சினாவின் மற்றொரு கேள்வி மிகவும் உக்கிரமானது 'இது எனது போரல்ல' உனதுமல்ல". இந்த உனது என்பது பலரை நோக்கி வீசப்படுகின்றது. குண்டுகளை வீசும் இராணுவ வீரர்களுக்கும் இது பொருந்தும். போரை காவிச் செல்பவர்கள் இந்த இறந்தவர்கள், இராணுவ வீரர்கள், காயமடைந்தோர், அகதிகள். போரை நடாத்துவோர் பெரும் அறைக்குள் குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டுபவர்கள்.

இறுதியாக கேட்கின்றார் "Do we have right to live"

'நாங்கள் உயிர் வாழ்வதற்கு உரிமையுண்டா?' இது உலகெங்கும் போரால் பாதிக்கப்படும் மக்களின் குரலாக வெளிப்படுகின்றது. சினா ஒரு அறைக்குள் அழுது கொண்டிருக்கும் பொழுது மற்ற அறையில் ரொனி விடுதி வரவேற்பாளருடன் உறவு கொண்டிருக்கின்றான். இது தான் மனித இயல்பா? சினாவின் பெரும் அலறும் சத்தத்தைக் கேட்டு ரொனி மற்ற அறைக்கு உறவை இடையில் விட்டு விட்டு ஓடிச் செல்கின்றான்.

மறு நாள் இவர்களது பயணம் தொடர்கின்றது. இப்பொழுது சினா வழமையான அரேபிய பெண்களைப் போல் முழு நீள உடையணிந்து முக்காடிட்டு காணப்படுகின்றார். வண்டிக்கு பெற்றோல் அடிக்க ஒரு பெற்றோல் நிலையத்திற்கு செல்கின்றனர். இது குண்டு வீச்சால் முற்றாக சேதமடைந்துள்ளது. நிலைய முதலாளி, தனது மகன் வெளி நாட்டில் வேலை பார்க்கின்றான். அவன் அனுப்பும் பணம் மூலம் நிலையத்தை புதுப்பிக்கப் போவதாக கூறுகின்றார். சினாவின் பெருமூச்சில் இயக்குனரின் தொனி வெளிப்படுகின்றது. உடைந்த கட்டிடத்தை புதுப்பிக்கலாம், அழிந்த நகரத்தை உருவாக்கலாம், வீடுகளை கட்டலாம். இறந்த உயிர்களை புதுப்பிக்கலாமா? சினாவின் சகோதரி மகா திருப்பிக் கிடைப்பாரா?

பல முகாம்கள் ஏறி இறங்கி ஒருவாறு சினாவின் மகன் கரீம் இருக்கும் இடத்தை கண்டுபிடித்து விடுகின்றனர். மற்றொரு நகரத்தில் உள்ள கிறிஸ்தவ விடுதியில் கரீம் உள்ளார். கரீமுடன் சினா கைத்தொலை பேசி மூலம் கதைக்கின்றார். கரீம் எதுவுமே கூறவில்லை. அந்த நகரத்தை நோக்கிச் செல்லும் போது இருண்டு விடுகின்றது. ரொனியின் நண்பர் ஒருவரின் வீட்டில் தங்குகின்றனர். அந்த நண்பர் இஸ்ரேலில் சென்று வேலை செல்ல விரும்புகின்றார். அவருடன் ரொனி சண்டை பிடிக்கின்றார். எதிரியின் வீட்டில் சென்று வேலை செய்வதா? ஏன் அங்குள்ள மற்றொரு நண்பர் 'நாங்கள் கிறிஸ்தவர்கள், எங்களையும் இஸ்ரேலியர் அரேபியராகத்தான் கருதுகின்றார்கள்' என கவலைப்படுகின்றார்.

சினா இரவே அங்கு சென்று விடவேண்டும் என பிடிவாதம் பிடிக்கின்றார். ரொனியின் நண்பர்கள் அது மிகவும் கடுமையான பாதை. இஸ்ரேலியர் ரோந்து அதிகம். வாகனத்தைக் கண்டாலேயே சுட்டு விடுவார்கள் எனக் கூறி தடுக்கின்றனர். அரை மனதுடன் சினா உடன் படுகின்றார். அங்கு சினா, ரொனியுடன் நெருக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் பொழுது, ரொனி இப்பொழுதே அங்கு செல்வோம் எனக் கூறி செல்கின்றனர்.

கடுமையான பாதை. ஆளரவமற்றுள்ளது. வாகனங்கள் எதுவுமே இல்லை. சிறிது தூரத்தின் பின்னர் ரொனி வாகனத்தின் முன் பக்க விளக்குகளை அணைத்து விட்டு வாகனத்தை ஓட்டுகின்றான். வாகனம் இடையில் நின்று விடுகின்றது. வாகனத்தை அப்படியே விட்டு விட்டு நடந்து பல மைல்களை கடக்கின்றனர். காலையில் கரீம் தங்கியுள்ள விடுதியை சென்றடைகின்றனர்.

கரீமின் தங்கியுள்ள அறைக்குள் சினா செல்கின்றார். அங்கு கரீமின் ஜக்கெட்டை அணிந்து கொண்டு ஒரு சிறுவன் காணப்படுகின்றான். கரீம் எங்கே? சினாவின்

தொடர்ச்சி 33ஆம் பக்கம்


# REAL ESTATE
# வகுப்புகள்

ரொறொன்ரோவில் இலவச ஆதனவியல் (*Real Estate*) வகுப்பு ஆரம்பிக்க இருக்கின்றது.
தொடர்புகளுக்கு: ***Vanessa - 416.321.6969***







# எமது புதுவருட நல்வாழ்த்துக்கள்




ஸ்காபரோ, மிசிசாக 2 இடங்களில்

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

*Independently owned & operated

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969** /145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**

# எதிர்கால தமிழ் சினிமா நல்லா இருக்கும்!

## சந்திப்பு: இயக்குனர் சந்தான பாரதி

'பன்னீர் புஷ்பங்கள்' தொடங்கி 'எங்கிருந்தோ வந்தான்' வரை பல வெற்றிப் படங்களைத் தந்தவர், இயக்குநர் சந்தானபாரதி. இவர் இயக்கத்தில் கமலஹாசன் நடித்த 'மகாநதி'யும் 'குணா'வும் இன்னும் தமிழ் ரசிகர்களின் நெஞ்சில் நீங்காத இடம் பிடித்திருப்பவை. 'மகாநதி', சிறந்த படத்துக்கான இந்திய அரசின் தேசிய விருதை பெற்றது. இயக்குநராக மட்டுமல்ல, ஒரு நடிகராகவும் முத்திரை பதித்திருப்பவர் சந்தானபாரதி. இயக்குநரும் நடிகருமான சந்தானபாரதியை அவருடைய திருவான்மியூர் இல்லத்தில் சந்தித்தோம்.

பெரிய இயக்குநர்கள் தொடங்கி ஒரு படம், இரண்டு படம் கொடுத்த இயக்குநர்கள் வரைக்கும் பெரும்பாலான இயக்குநர்கள் இப்பொழுது நடிகர்களாக அவதாரம் எடுக்கிறாங்க. இது ஒரு டிரண்டா உருவாகுவதற்கு முன்னாலேயே நீங்க நடிக்கத் தொடங்கிட்டீங்கள். நடிகர் - இயக்குநர் இதில் எந்த முகம் உங்களுக்கு ரொம்ப பிடிச்சிருக்கு?

"ரெண்டு முகமும் பிடிச்சிருக்கு. ஆனா, டைரக்டர்ங்கறதுலதான் சவால் இருக்கு. அதுனால இயக்குநர் முகம் எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஸ்ரீதர் சாரிடம் உதவி இயக்குநராக வேலை பார்த்த காலங்களிலேயே அவரது படங்கள்ல அப்பப்போ சின்ன சின்ன பாத்திரங்களில் நடிச்சிருக்கேன். முதல்ல நடிகனா அறிமுகமானதுன்னா 'என்னுயிர் கண்ணம்மா'தான். நடிகர் சிவசந்திரன் என் நண்பர். அவர் அதுல நான் நடிக்கணும்னு ரொம்ப வற்புறுத்தினார். ரெண்டாவது படம்தான் 'கரகாட்டக்காரன்.' அதுதான் நடிகன்கிற அந்தஸ்தை எனக்குக் குடுத்துச்சு. தமிழ்நாட்ல பட்டி தொட்டில இருக்குறவங்களுக்குக்கூட என்னை அடையாளம் தெரிஞ்சது அந்தப் படம் வந்தப்புறம்தான்."

நீங்கள் ஸ்ரீதரிடம் இருந்தீர்களா? அதைப் பற்றி சொல்லுங்களேன், எப்படி நீங்க சினிமாவுக்கு வந்தீர்கள்?

"நான் பொறந்ததுல இருந்தே சினிமா என்னோடு இருக்கு. எங்கப்பா எம்.ஆர்.சந்தானம் நடிகரா இருந்து, தயாரிப்பாளரானவர். 'வீரபாண்டிய கட்டபொம்மன்'ல தானாதிபதிப் பிள்ளைங்கற முக்கியமான பாத்திரத்துல நடிச்சவர். அப்புறம், மோகன்ங்கிறவரோட சேர்ந்து 'பாசமலர்', 'அன்னை இல்லம்', 'பாலாடை'ன்னு பல படங்களைத் தயாரிச்சார். அதன்பிறகு தனியா படத் தயாரிப்புல இறங்கினார். கே.பாலசந்தர் டைரக்ஷன்ல ஒரு படம் தயாரிச்சிக்கிட்டு இருக்கறப்போ ஹார்ட் அட்டாக் வந்து இறந்து போனார். எங்க அப்பாவும் நடிகர் சிவாஜியும் ரொம்ப நெருக்கமா பழகினவங்க. அந்தக் காலத்துல எங்க அப்பாவை, 'சிவாஜியோட நிழல்'தான் எல்லாரும் சொல்லுவாங்க. இப்படி குடும்பமே சினிமா பின்னணியுடன் இருந்ததால், பெரிய நட்சத்திரங்கள் எல்லோரும் எனக்கு சிறிய வயதிலேயே அறிமுகமாயிட்டாங்க. நான் படிச்சுக்கிட்டு இருந்த காலத்துலயே கமல் எனக்கு நண்பர். நான் எஸ்.எஸ்.எல்.சி. ஃபெயிலாயிட்டேன். அப்போ கமல் எட்டாவது படிச்சுக்கிட்டு இருந்தார். ரெண்டு பேரும் 'மணீஸ் டுடோரியல்'ல ஒண்ணா படிச்சோம், ஒண்ணாவே சுத்தினோம்.

கமல் குழந்தை நட்சத்திரத்துல இருந்து, இளைஞன் நடிகராக மாறுவதற்கு முன்னால் இருந்த காலக்கட்டம் அது. பரதநாட்டியம்லாம் கத்துக்கிட்டு இருந்தார். நான் பிரசிடென்சி காலேஜ்ல பி.ஏ. எகனாமிக்ஸ்ல சேர்ந்தேன். கமல், மீண்டும் நடிக்க ஆரம்பிச்சுட்டார். நடுவுல நாலு வருஷம் எனக்கும் அவருக்கும் இடைவெளி விழுந்துடுச்சு. முன்ன மாதிரி நெருங்கிப் பழக முடியல. ஆனாலும், எங்கயாவது பார்த்தா ஹலோ சொல்லிக்குவோம். எனக்கு நடிகர் ஜுனியர் பாலையா, கண்ணதாசன் மகன்கள் காந்தி கண்ணதாசன், அண்ணாதுரை எல்லாரும் நண்பர்கள். அண்ணாதுரை அப்போ எஸ்.பி. முத்துராமன்கிட்ட வேலை பார்த்துட்டு, 'அன்னக்கிளி' எடுத்த தேவராஜ் மோகன்கிட்ட வேலைக்குச் சேர்ந்தார். பாக்குறப்போல்லாம் சினிமாக் கதை சொல்லுவார். ஷீட்டிங்ல நடந்த விஷயங்களைப் பேசுவார்.

பாலசந்தர் சார் பீக்ல இருந்த பீரியட் அது. அவருடைய 'அபூர்வராகங்கள்' படம் பார்த்தேன், அது என்னை ரொம்ப பாதிச்சிடுச்சி. நாமும் சினிமாவுல முயற்சி செய்யலாமேன்னு எனக்குத் தோணிச்சு. நேரா கவிஞர் கண்ணதாசனைப் போய்ப் பாத்தேன். 'நான் சினிமாவுல சேரணும்'னு சொன்னேன். 'என்ன திடீர்னு'ன்னு கேட்டார். 'இல்ல ரொம்ப ஆர்வமா இருக்கு'ன்னு சொன்னேன். 'சரி யார்கிட்ட சேரணும்னு ஆசையா இருக்கு?'ன்னு கேட்டார். நான் டக்குன்னு 'பாலசந்தர் சார்கிட்ட'ன்னு சொன்னேன். 'சரி கேட்டுட்டு சொல்றேன்'னு சொன்னார். நான் வந்துட்டேன். பத்து, பதினஞ்சு நாள் ஆச்சு. ஒண்ணும் தகவல் இல்ல. மறுபடியும் கவிஞரைப் போய்ப் பார்த்தேன். 'பாலசந்தரைப் பாக்க முடியல. ரொம்ப பிசியா இருக்கார். வேற டைரக்டர்கிட்ட சேர்றியா?'ன்னு கேட்டார். சரின்னேன். அவர் இன்னொரு டைரக்டரை அறிமுகப்படுத்தினார். ஆனா, அது எனக்கு செட் ஆகலை. ஒரு நாள் அண்ணாதுரை வந்தார். 'அப்பா கூப்பிடுறாரு'ன்னு அழைச்சுக்கிட்டு போனார். 'நான் டைரக்டர் ஸ்ரீதர்கிட்ட பேசிட்டேன். அவர்கிட்ட போய் சேர்ந்துடுறியா?'ன்னு கேட்டார். உடனே சரின்னு சொல்லிட்டேன். அந்த பீரியட்ல அவர் ரொம்ப பெரிய டைரக்டர். கவிஞர் கண்ணதாசன் கேட்டார்: 'எப்போ போறே?' நான், 'இப்பவே போய் பாத்துடுறேன்'னு சொன்னேன். 'வேண்டாம். இன்னிக்கி செவ்வாய்கிழமை. மூணுலருந்து நாலரை ராகுகாலம். அது முடிஞ்சதும் போய்ப் பாரு'ன்னார். சரின்னேன். அன்னிக்கி சாயந்தரமே நானும் அண்ணாதுரையும் ஸ்ரீதர் சார் ஆபீசுக்குப் போனோம். நாங்க போறப்போ டைரக்டர் கார்ல வெளியில கிளம்பிட்டார். நாங்க காத்திருந்தோம். அரைமணி நேரம் கழிச்சு திரும்பி வந்தார். அன்னிக்கி ஆபீஸே பரபரப்பா இருந்துச்சு. அப்போ 'ஓ மஞ்சு'ன்னு ஒரு படம் எடுத்துக்கிட்டு இருந்தார். அதுக்கான நடிகர், நடிகை தேர்வு நடந்துக்கிட்டு இருந்துச்சு. யூனிட்ல எங்களையும் அப்பிடி நடிகர் தேர்வுக்கு வந்தவங்கன்னு நினைச்சிட்டாங்க. அப்புறம் புரொடக்ஷன் மேனேஜர்கிட்ட விஷயத்தைச் சொன்னோம். அவர் போய் டைரக்டர்கிட்ட சொன்னார். ஸ்ரீதர் சார் எங்களைக் கூப்பிட்டுப் பேசினார். என்னைப் பார்த்ததும் 'நீங்கதான் சந்தானமா?'ன்னு கேட்டார். எங்க ரெண்டு பேரையும் கொஞ்ச நேரம் வெளியில காத்திருக்கச் சொன்னார். அப்புறம் என்னை மட்டும் கூப்பிட்டுப் பேசினார். 'உனக்கு சினிமாவுல என்ன எக்ஸ்பீரியன்ஸ் இருக்கு?'ன்னு கேட்டார். 'எந்த எக்ஸ்பீரியன்ஸும் இல்ல'ன்னு சொன்னேன். 'சரி, எவ்வளவு சம்பளம் எதிர்பார்க்கறே?'ன்னு கேட்டார். 'எனக்கு அது பத்தி எந்த யோசனையும் இல்ல. வேலை என்னன்னு சொன்னீங்கன்னா, இன்னிக்கே ஆரம்பிச்சுடுறேன்'னு சொன்னேன். 'சரி. உனக்கு மாசம் 100 ரூபா. அதை சம்பளமா நினைக்காதே! பாக்கெட் மணியா வச்சுக்கோ! நாளைக்குக் காலைல வந்துடு'ன்னார். புரொடக்ஷன் மேனேஜர்கிட்ட என்னை அறிமுகப்படுத்தினார். புரொடக்ஷன் மேனேஜர் அடுத்த நாள் காலையில அஞ்சு மணிக்கு வரச் சொன்னார்.

நீங்கள் சினிமாவில் காலடி எடுத்துவைத்த அந்த முதல்நாள் பணி எப்படியிருந்தது?

நான் ஆழ்வார்பேட்டைல இருந்தேன். ஸ்ரீதர்சார் ஆபீஸ் தி.நகர்ல வாணிமஹாலுக்கு எதிரே இருந்துச்சு. அந்தக் காலத்துல அந்த நேரத்துக்கு பஸ் கிடையாது. நடந்தே போனேன். ஆபீஸ் ரொம்ப பரபரப்பா இருந்துச்சு. எல்லாப் பொருள்களையும் வண்டியில ஏத்திக்கிட்டு கிளம்பிக்கிட்டு இருந்தாங்க. எனக்கு கண்ணைக்கட்டி காட்டில் விட்ட மாதிரி இருந்துச்சு. என்னையும் புரொடக்ஷன் மேனேஜர் ஒரு வண்டியில ஏத்திவிட்டார். எண்ணூர்ல ஷூட்டிங்னாங்க. நடிகை கவிதாவுக்கு அதுதான் சினிமாவுல முதல் நாள் ஷூட்டிங். நான் ஸ்பாட்டுக்குப் போனதும் டைரக்டர் ஸ்ரீதர்சாரு அசோசியேட் டைரக்டர் சக்கரவர்த்தியைக் கூப்பிட்டு என்னை அறிமுகப்படுத்தினார். அவர், என்கிட்ட ரெண்டு நாற்பது பக்க நோட்டுகளைக் கொடுத்தார். ஷூட்டிங்கை கவனமாப் பாரு. எந்தெந்த ஷாட் ஓ.கே.யோ அதை ஒண்ணுல நோட் பண்ணிக்கோ. இன்னொண்ணுல ஆர்ட்டிஸ்ட் என்ன டிரெஸ் போட்டிருக்காங்கன்னு, கண்டினியூட்டி பாருன்னார். போயிட்டார். முதல்ல ஒண்ணும் புரியலைன்னாலும் நானா கத்துக்க ஆரம்பிச்சேன். ஒரே மாசத்துல டைரக்டர் என்னைக் கூப்பிட்டார். அவர் டயலாக்கைச் சொல்லச்சொல்ல எழுதணும். ஒரே மாசத்துல எந்த அசிஸ்டெண்டுக்கும் கிடைக்காத பெரிய வாய்ப்பு அது. ஸ்ரீதர் சாரோட 'ஓ மஞ்சு!', 'இளமை ஊஞ்சலாடுகிறது', 'அழகே உன்னை ஆராதிக்கிறேன்', 'மோகனப்புன்னகை', 'மீனவ நண்பன்', 'அண்ணா நீ என் தெய்வம்' ஆகிய படங்களில் வேலை பார்த்தேன்.

சந்தானபாரதி - பி.வாசு என்று இரட்டை இயக்குநர்களாகத்தான் நீங்கள் முதலில் வெளியுலகத்துக்கு அறிமுகமானீர்கள். உங்கள் நண்பர் வாசு எப்பிடி உங்களுக்கு அறிமுகமானார்?

'மீனவ நண்பன்' படப்பிடிப்பு சத்யா ஸ்டூடியோவுல நடந்துக்கிட்டு இருந்துச்சு. அப்போ சினிமாவுல ரெண்டு குழு இருந்துச்சு. 'சிவாஜி கேம்ப்', 'எம்.ஜி.ஆர். கேம்ப்.' நாங்க சிவாஜி கேம்ப். ஆனா, அந்தப் படமோ எம்.ஜி.ஆர். படம். எனக்கு யாராவது ஏதாவது சொல்லிடுவாங்களோன்னு பயமா இருந்துச்சு. ஆனாலும், வெளியே காட்டிக்காம, காஸ்ட்யூமர்கிட்ட அன்னிக்கி என்னென்ன காஸ்ட்யூம் வேணும்னு சொல்லிக்கிட்டு இருந்தேன். அப்போ ஒருத்தர் வந்தார். 'இங்க யாரு எம்.ஆர்.சந்தானம் பையன்'னு கேட்டார். 'நான் தான்'னேன். ஒரு மாதிரி பாத்துட்டுப் போயிட்டார். அதே மாதிரி குண்டா, ஆஜானுபாகுவா இருந்த ஒருத்தர் வந்தார். 'எம்.ஆர்.சந்தானம் பையன் யாரு?'ன்னு கேட்டார். போயிட்டார். மதியம் சாப்பிட்டுக்கிட்டு இருக்கறப்போ இன்னொருத்தர் வந்தார். அதே கேள்வி. 'நான் தான்'னு சொன்னேன். அவர் பீதாம்பரம்ங்கற மிகப்பெரிய, புகழ்பெற்ற மேக் அப் மேன். 'பயப்படாதேப்பா. உங்க அப்பாவும் நானும் ஃபிரெண்ட்ஸ். இது என் பையன் வாசு. இவனும் இந்தப் படத்துல ஓர்க் பண்ணப் போறான். பாத்துக்கோ!'ன்னுட்டு போயிட்டார். அன்னிலருந்து நானும் பி.வாசுவும் ஒண்ணா வேலை பார்க்க ஆரம்பிச்சோம்.



நேர்காணல்: பாலு சத்யா

எத்தனை வருஷம் ஒண்ணா வேலை பார்த்தீங்க?

கிட்டத்தட்ட அஞ்சு வருஷம் ஒண்ணா வேலை பார்த்தோம். கங்கை அமரனை எனக்கு ஆரம்பத்துலருந்தே நல்ல பழக்கம். அப்போ ராஜா சார் கண்ணதாசன் வீட்டுக்குப் பின்னால இருக்குற பாலாஜி கல்யாண மண்டபத்துல அவர் போடுற ஒவ்வொரு பாட்டையும் முழு ரிகர்சல் பாப்பார். அங்க நானும் வாசுவும் போவோம். கங்கை அமரனைப் பாத்துப் பேசுவோம். அவர்தான் ஏன் நீங்க தனியா படம் பண்ணக்கூடாதுன்னு யோசனை சொன்னார். கதை வேணுமே! அப்போதான் ராஜேஷ்வர் அறிமுகமானார். பின்னால நிறைய படங்கள் இயக்கினார். அவர்தான் 'பன்னீர் புஷ்பங்கள்' கதையைச் சொன்னார். எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. காலேஜ்ல படிக்குறப்போ 'மெலோடி'ன்னு ஒரு இந்திப் படம் பார்த்திருந்தேன். கிட்டத்தட்ட அந்த அளவுக்கு இந்தக் கதையும் ரொம்ப நல்லா இருந்துச்சு. நானும் வாசுவும் சேர்ந்து 'பன்னீர் புஷ்பங்கள்' பண்ணினோம். படம் சூப்பர் ஹிட்டாச்சு. அதன்பிறகு 'மதுமலர்', பாரதிராஜா தயாரித்த 'மெல்லப் பேசுங்கள்', 'நீதியின் நிழல்' எல்லாம் சேர்ந்து செய்தோம். இடையில 'சாகசமே ஜீவிதம்'னு ஒரு தெலுங்குப் படம் பண்ணினோம். அதுல என்.டி.ஆரோட மகன் பாலகிருஷ்ணாவை முதன்முதலா ஹீரோவா அறிமுகப்படுத்தினோம்.

தனியா எப்போ படம் பண்ண ஆரம்பிச்சீங்க?

தொடர்ச்சி 29ஆம் பக்கம்



# மனைவி - குடும்பத்தின் காயத்ரி மந்திரம்?

ஒவ்வொரு குடும்பத்திலும் அச்சு ஆக விளங்குபவள் ஒரு பெண்ணே! அவளைச் சுற்றித்தான் அக்குடும்ப அங்கத்தவர்கள் சுழலுகிறார்கள். அவளே ஒரு முன்மாதிரி (Role Model)யாகத் திகழ்கிறாள். இவைதான் யாவரும் ஒப்புக் கொள்ளும் இலட்சிய வாசகம்' எனக் கூறுகிறார், அவதார புருஷராகிய பகவான் சத்தியசாயிபாபா அவர்கள்.

அநாதி காலத்தே பிரம்மமே இருந்தது. அது பேரமைதியின் இருப்பிடமாக இருந்தது. அந்தப் பேரமைதியிலிருந்து இறைவனின் வாக்காகவும், தோற்றமாகவும் ஒலியும், ஒளியும் தோன்றின. 'ஓம்' எனும் பிரணவ நாதம் பிறந்தது. அதுவே பிரபஞ்சத்தின் முதல் ஒலி. அதிலிருந்து பஞ்ச பூதங்களாலான படைப்புகள் தோன்றின. ஓம் காரமே இறைவன்.

சூரியன் இருள் சூழ்ந்த இவ்வுலகுக்கு ஒளியைக் கொடுத்து உயிரை வாழவைக்கும் சக்தியாக விளங்குவதால் மகாசக்தியான காயத்ரியாக கணிக்கப்படுகிறாள். அதனால் எழுந்தது காயத்ரி மந்திரம். கொடுக்கப்பட்டது பெண்வடிவம். இந்து சமயத்துள் அடக்கப்பட்ட சகல பிரிவினரும் மூலமந்திரமாகக் கொள்வது, இக் காயத்ரி மந்திரத்தையே.

ஓ, தேவி! முக்காலம், மூவுலகம், முக்குணம் ஆகியவற்றில் உறைபவளே! என விளித்து எம் அறியாமையைப் போக்கி ஞானத்தைத் தந்தருள்வாய் எனும் கருத்து புலப்படுகிறது.

பிரமம் எனும் கடவுளுக்கு ஆண், பெண் கற்பிதம் நடைபெறவில்லை. இயற்கையை ஒட்டி மகாமுனிவர்கள் கற்பித்தார்கள். சிவனாலும் சக்தி இல்லாது ஒன்றும் செய்யமுடியாது எனக்கண்டு காயத்ரி மந்திரத்தை ஆக்கி காயத்ரி தேவிக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

விஞ்ஞானிகள் அணுவை கண்டுபிடித்தபோது நம்மவர் பிரமம் என்றார்கள். அணு பிரிக்கப்பட்டபோது நடுவே உள்ள சிவந்த நிறம் சிவன் எனவும் வெளியே உள்ள நீலம் சக்தி என்றார்கள். பின்னர் நடுவேயுள்ள சிவந்த நிறம் சமபங்குடைய இரு பிரிவெனக் கண்டபோது அது சம அந்தஸ்துள்ள சிவனும் உமையுமாம், இலத்திரன்கள், புரோத்தோன்கள், நியூத்திரன்கள் எனக்கண்டு மத்தியில் இருக்கும், புரோத்தோன்கள் மிக சக்தி வாய்ந்தவையாம். மேலும் விஞ்ஞான ஆராய்ச்சி ஒவ்வொரு புரோத்தோன்களிலும் மூன்று மூன்று 'குவாக்ஸ்' எனும் அடிப்படைத் துகள்களின் கண்டுபிடிப்பு. அடிப்படைத்துகள்கள் எல்லாம் கிக்ஸ் பொஸன் என்ற துகள்களின் சேர்க்கையே என இனங்காணப்பட்டு விஞ்ஞானிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கிக்ஸ் பொஸன் என்பதை கடவுட் துகள்கள் எனப் பெயரிட்டிருக்கின்றனர் (God Particles). அது மாத்திரமல்ல, ஊழிப் பெரு வெடிப்பின் போது (Bigbang) பிறந்த நாதம் 'ஓம்' என்பது தான். விஞ்ஞானிகளும் பரிசோதனைகளின் மூலம் ஒப்புக் கொண்டிருக்கிறார்களாம். (இவை எங்கள் கனி விமலநாதனின் கட்டுரைகளில் இருந்து பொறுக்கி எடுத்தவை)

மெய்ஞ்ஞானிகளும் விஞ்ஞானிகளும் செய்வன எத்தனையோ இருக்க, ஞான திருஷ்டிகள் மூலமும் கடவுட் துகளிகளின் மூலமும் இறைவனை, அவரது பாலியல் உருவத்தைத் தேடி அலைகிறார்கள். விந்தையிலும் விந்தை.

அன்பே சிவம். ஆங்கிலத்தில் God is Love எனும் போது எம்மதம் ஆயினும் சரி. எல்லாமே அன்பைப் போதிக்கின்ற மதங்களே. பெற்றதாய் கடவுளுக்குச் சமமானவள். மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ, ஆச்சார்ய தேவோ பவ, இயற்கையாலே அறிந்த தாயானவளைத் தெய்வமெனப் போற்றுவோம். தாயால் காட்டித்தரப்பட்ட தந்தையையும் தெய்வமாக மதித்து போற்றுவோம். அவராலே அறிமுகப்படுத்தப்பட்ட குரு - ஆசிரியர் - அந்த ஞானாசாரியார் ஆன்ம ஈடேற்றத்துக்கான வழிவகைகளைத் தருவதால் அவரையும் தெய்வமென போற்றுவோம்.

வீட்டின் ஒப்பற்ற செல்வமாகிய தாய்தான் ஒரு மனிதனின் தெய்வம். கண்கண்ட தெய்வம். தாயின் மடியே ஒருவனுக்கு முதலாவது பள்ளிக்கூடம். அவர்களே நமது மரபு பண்பாடு கலாச்சாரம் முதலியவற்றைப் பேணிப் பாதுகாத்து இளைஞர் சமுதாயத்துக்கு ஊட்டி விடுபவர்.



இவர்களின் பண்புகளாவன இரக்கசிந்தை, பொறுமை, உண்மை பேசுதல், மன்னித்தல், நேச நெஞ்சம் என்பவவையே. சாதாரண நற்குணங்களோடு இவை மேலதிகமான பண்புகள் எனச் சொல்லலாம்.

வேதகாலங்களில் எப்படிப் பெண்களை வளர்த்தார்கள். எப்படி சில பெண்களின் பெயர்கள் சரித்திரத்திலும் வரலாற்றிலும் நின்று நிலவுகிறது; சுவாமி சொல்கிறார்; "வேதங்கள், உலக மாதாவான பராசக்திக்கே முதலிடம் கொடுத்தன. அவை தர்மம் சார்ந்தவை. அவர்களைக் கௌரவித்து உபாசனைக்கும் ஆராதனைக்கும் உரியதாக்கி விளங்கின. எத்தனையோ படைப்புக்களின் மத்தியில் பெண் உயர்ந்த பிறவியாகக் கணிக்கப்பட்டாள். வேதங்கள் காயத்ரியையே உலகமாதாவாக ஒளி வீசுபவளாகக் கண்டன."

மிக உயர்த்தியான நிலையில் வைக்கப்பட்ட பெண்ணினம் காலாவதியில் கீழ்நிலைப்படுத்தப்பட்டது எதனால்?
மதப்பிரிவுகள் சில தோன்றின. பிரம்மச்சரியம் பிரதானமாயிற்று. குடும்பஸ்தனாயினும் சிற்றின்பத்தை நாடக்கூடாது. படைப்புக்காக அருளப்பட்ட தாம்பதியத்தை ஆன்ம ஈடேற்றத்துக்கு தடையாக இருக்கும் சிற்றின்பம் எனக் கூறி பெண்ணைக் கேவலப்படுத்தி கீழ் நிலைக்குத் தள்ளிவிட்டனர். சிற்றின்பம் என்பது தமது மனப் பலவீனம் என்பதை அறியாது, பெண்கள் கண்களிலேயே படக்கூடாதெனும் மனப்பாங்கினை விதைத்தனர்.

தியாகத்தின் மறுபிறப்பே பெண்கள். பக்தியின் சொரூபமே பெண்கள். (மீரா, புனிதவதியார்) ஞானத்தைத் தேடுபவர் ஆண்கள். இறைவனின் வாசல் வரை தான் ஆண்கள் செல்ல முடியும். ஆனால் எல்லாவற்றையும் மறந்த - உள்ளம் உருகுகின்ற பக்தி நெறியோடு உள்ளேயே போகக் கூடியவர்கள் பெண்கள் தான்.

இன்றைய நிலையில் குடும்பங்கள் கோவில்களாகத் திகழமுடியாதபடி உலக ஆசாபாசங்கள் எனும் வலையினால் சுருட்டி வைக்கப்பட்டிருக்கிறோம். குணத்துக்கு கொடுக்க வேண்டிய இடத்தைப் பணத்துக்குக் கொடுக்க வேண்டி ஏற்பட்டு விட்டது. வீடுதான் அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் ஏதுவான இடமாயிருக்க, அது தெரு, கிராமம், தேசம் எனப் பரவி உலக சமாதானம் நிலவும். வீட்டுக்குள்ளேயே அமைதி இல்லாவிட்டால் உலகத்தில் எப்படி அமைதியை எதிர்பார்க்கலாம்?

இராவணனைத் திருத்த முயன்ற மண்டோதரி தோற்றுப் போனாள். இனியென்ன பட்டறிந்து பார்க்கட்டும் என விட்டுவிட்டாள். தமது குழந்தைகளைக் கண்ணுங் கருத்துமாக வளர்க்க வேண்டிய தாய் தேவையின் காரணமாக வேலைக்குப் போகிறாள். வந்தவுடன் சீராட்டவா போகிறாள்.

பிள்ளைக்கு பராக்குக் காட்டி விளையாட விட்டு, வீட்டுவேலை சமையல், கழுவுதல், துடைத்தல் சிறிது வளர்ந்த குழந்தைகளாயின் அவர்களுக்கும் சிறுசிறு பணிகளைக் கொடுத்து நாள் முழுதும் வேலை. ஓய்வில்லை. களைப்பு எரிச்சல் அன்பு காட்டவா முடியும். அவர்களைப் படுக்க வைத்து தானும் படுக்க வேண்டியது தான்.

கண்ணபிரானைக் காந்தாரி கேட்கிறாள். எனது நூறு புதல்வர்களில் ஒருவனையாயினும் உன்னால் காப்பாற்றித் தரமுடியாது போய்விட்டதா? கிருஷ்ணர் என்ன சொல்லியிருப்பார்? நீ கண்ணைக் கட்டிக் கொண்டதாலே உனது பேசும் விழிகளை அருட்பார்வையை, அசைக்கும் பார்வை, வழிநடத்தும் பார்வை எச்சரிக்கும் பார்வை கோபப்பார்வை எதுவும் அவர்களுக்குக் கிடைத்ததில்லை. ஒரு போதுமே அவர்கள் தாயைப்பற்றிப் பேசியதுமில்லையே. இது எத்தகைய விளைவை ஏற்படுத்தியிருக்கிறது பார்' என்றார்.

ஒரு குடும்பத்தின் தலைவி தனது மனைவி ஆகும் போது அவளுக்கு கணவன் கொடுக்கும் மதிப்பே பிள்ளைகளின் பண்பை வளர்க்கும். அவள் அந்த வீட்டின் தெய்வம். அந்த வீட்டின் தாய் எனும் கௌரவத்தைக் கணவன் கொடுக்க வேண்டும். ஒரு தோழி அல்லது நண்பி என்ற ஸ்தானம் ஆவது இருக்க வேண்டும். அந்த வீடு கண்ணியமான குடும்பமாக, பிறரால் பழிக்கப்படாத நேர்மை, அமைவு, மதிப்பு, அன்பு முதலியவற்றால் கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும்' அவளது கண்களில் இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விழக் கூடாது. ஆற்றாது அழுத கண்ணீ ரன்றோ செல்வத்தைக் தேய்க்கும் படை.

கணவன் மனைவியரிடையே போட்டி பொறாமை கூடாது. ஏட்டிக்கு போட்டியாக குற்றங்குறைகண்டுபிடித்து சச்சரவுபடுதல், அகங்காரம், ஆதிக்கம் தலைவிரித்தாடினால் பணிவு வராது பொலீஸ்தான் வரும். பிள்ளைகளின் கதி என்ன? தகப்பனோ தாயோ தனியாக வளர்க்க முடியுமா?

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு குடும்பத்தை ஒரு கோயில் ஆக்குவதைச் செய்ய வேண்டும். 'பிரிவு', 'விவாகரத்து' எனும் சொற்கள் காதில் விழக்கூடாது. வீட்டில் அதிகமான செயல்களைச் செய்பவர் தலைவராகலாம். ஆனால் அந்த ஆதிக்கச் சொல்லை அடியோடு விடுத்து தோழமையோடு பிள்ளைகளை வழிநடத்துவோம். பெண்ணின் மேன்மையை நன்குணர்ந்தவர் இராமகிருஷ்ண பரமஹம்சர். மனைவியைப் பீடத்தில் அமர்த்திப் பூசை செய்தவர்.

எனவே குடும்பத்தில் கணவன், மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு பரஸ்பரம் மதித்து நடந்து சிறிய தவறுகளைப் பெரிதுபடுத்தாமல் குழந்தைகளுக்கு நல்வழிகாட்டிகளாக வாழ்வதே வாழ்க்கையின் இலட்சியமாக கொள்ள வேண்டும்.

**- குறமகள்-**




## மகாஜனாவின் நூற்றாண்டு நினைவை முன்னிட்டு விசேட கணித, பொது அறிவுப் போட்டிகள்

Toronto, Canada. இங்கு வாழ்கின்ற நம் மாணவ சமுதாயத்தினரை ஊக்கப்படுத்தவும் அவர்களுக்கு கணிதம் மற்றும் பொது அறிவில் ஆர்வத்தை வளர்க்கவும் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா வருடாவருடம் இப்போட்டிகளை நடாத்தி பரிசுகளை வழங்கி வருகிறது. கடந்த வருடங்களில் பெற்றொர்களும் பிள்ளைகளும் மிகுந்த அக்கறை காட்டி பெருமளவில் போட்டிகளில் பங்குபற்றினர். கடந்த வருடப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களில் 52 மாணவர்கள் தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.

இம்முறை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு நினைவை முன்னிட்டு இப்போட்டிகள் மகாஜனக்கல்லூரிப் பழைய மாணவர் சங்கங்கள் இருக்கும் ஏனைய நாடுகளிலும் நடைபெற உள்ளன. அத்துடன் இம்முறை கனடாவில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு விசேட பரிசுகளும் வழங்கப்படும். இவ்வருடம் கனடாவில் நடக்கவிருக்கும் போட்டிகளுக்கான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

முதலாம் பரிசு: தங்கப் பதக்கம், இரண்டாம் பரிசு: வெள்ளிப் பதக்கம்
மூன்றாம் பரிசு: வெண்கலப் பதக்கம் விசேட பரிசுகள்: Laptops, Digital Cameras, iPods, ect...

இடம்: Sir John A MacDonald C.I காலம்: Sunday, February 07, 2010
நேரம்: 9:00 am அனுமதிக்கட்டணம்: $15
போட்டிப் பிரிவுகள்:
தரம் 1, தரம் 2, தரம் 3, தரம் 4, தரம் 5, தரம் 6, தரம் 7, தரம் 8, தரம் 9 &10, தரம் 11&12
www.mahajanan.org/contest2010.htm
416-532-7897 416-910-1287 416-269-9482
416-283-4178 416-293-0130 416-438-3141

# BASEMENT RENT

**KENNEDY & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, cable. Close to kennedy subway, plaza. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.759.9859

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, cable, laundry. Close to TTC, mall, bank. Avail. Anytime.
416.289.9125/416.875.9393

**BELLAMY & ELLESMERE**
1 bedroom BSMT Apt. for rent. Sep. entrance. Parking, washer, dryer. Avail. immediately. Close to School,ttc, subway, scarborough centre, stores....
தொடர்புகளுக்கு: 416.289.6076

**SCAR. GOLF CLUB & ELLSEMERE**
1 Large bedroom bsmt for rent. Living room, kitchen, washroom, sep. entrance, parking, laundry. Avail. immediately. Close to school, ttc & all amenities.
416.431.9428 / 416.878.7231

**MIDDLEFIELD & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Attached washroom. Meals if required. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately.
905.471.4777 / 416.505.9086

**NEILSON & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, mall, school, hwy 401. Avail. January 01, 2010.
தொடர்புகளுக்கு: 647.866.9464

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, full washroom, kitchen, stove, fridge included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.201.4786

**MCCOWAN & DENISON**
2 large bedroom bsmt for rent. Sep.entrance, parking, cable, laundry. close to ttc, shopping, school, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.419.5790

**BRIMLEY & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. January 01, 2010.
தொடர்புகளுக்கு: 647.866.9464

**KENNEDY & FINCH**
2 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, mall, school, temple. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.291.2796

**WARDEN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, kitchen, living room. Close to TTC, hwy (401, DVP). பெண்கள், முதியோர், couple விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு: 416.997.6575

**MAVIS & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.602.7873

**WESTNEY & ROSELAND**
1 Bed room basement apartment (Partially furnished) available in Ajax any time. Sep. Entrance. For detail call (647) 333 0029

**EGLINTON & MIDLAND**
**DANFORTH RD. & MIDLAND**
2 Bedroom bsmt. apartment for rent. Sep. entrance. Living room, full bath, cable, parking, utilities included. 24 hours TTC near to subway. No smoke. No pets. Avail. Feb. 01, 2010.
தொடர்புகளுக்கு: 647.342.5075

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry, cable. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.566.1918

**BELLAMY & BRIMORTON DR.**
3 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC. Avail. Anytime.
அறைகள் தனித்தனியாகவும் வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.938.6725

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, laundry. Close to TTC, Malvern mall, school. No smoking. Avail. immediately.
416.724.8727 / 647.280.6163

**BELLAMY & ELLESMERE**
2 bedroom BSMT Apt. for rent. Sep. entrance. Parking, washer, dryer. Avail. February 01, 2010. Close to School,ttc, subway, scarborough centre, stores....
தொடர்புகளுக்கு: 416.289.6076

**MEADOWVALE & SHEPPARD**
Brand new 2 bedroom bsmt for rent. Matheny home builders. Sep. entrance, parking, laundry. Close to TTC, hwy 401, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.287.0876

**LAWRENCE & MORNINGSIDE**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, school, mall & library. Avail.immediately
416.724.7595/416.998.2760

**MARKHAM & PAINTED POST DR.**
2 bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, laundry, cable. Close to school, mall. Avail. immediately. Ladies 0r Old people preferred.
தொடர்புகளுக்கு: 416.400.8125

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Wal-Mart in front. Close to doctors, plaza, school & TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.427.2521

**TAPSCOTT &FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall, school. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.829.9797

**MIDDLEFIELD & DENISON**
1 Bedroom walkout bsmt for rent. Parking, cable, laundry. Close to TTC, mall.
தொடர்புகளுக்கு: 416.727.7550

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, library. Avail. January 01, 2010.
416.439.4054 / 416.899.4835

**MARKHAM & MCLEVIN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.293.8327 / 647.308.8327

# BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
**ROUGH RIVER**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry, cable, stove, fridge, kitchen. Close to TTC, mall. Single couple or students preferred. Avail. immediately. ***416.629.4013 (Call after 6.00pm) /416.457.4921 / 416.286.4664***

# BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD** **Half Month Free**

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry & other facilities. Students, small family, working ladies preferred. No smoking & No pets. Avail. immediately.
***416.724.9493 / 647.290.9635***

**MCCOWAN & 14TH AVE.**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.315.5375

**EGLINTON & MIDLAND**
***MORNINGSIDE/LAWRENCE/KINGSTON***
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. High ceiling. Parking, internet, laundry, utilities inclu. Couple or small family preferred. Very close to TTC - 3 bus routes, shopping mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.283.2124

2 Bedroom walk-out bsmt. for rent. Parking, cable & laundry. Close to kennedy subway. All facilities close by. Avail. immediately.
647.886.3920 / 416.759.9675

**MORNINGSIDE & STAINS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.509.0102

**MORNINGSIDE & SEWELLS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. January 01, 2010.
416.282.8585 / 416.801.8813

**WARDEN & LAWRENCE**
New 2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. TV cable & High speed internet free. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.258.2138

**BRIMELY & DENISON**
2 Bedroom bsmt for rent. Parking, cable, laundry. Close to TTC, mall, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.604.0155

**KENNEDY & LAWRENCE**
2 Bedroom Bsmt apt. for rent. Separate entrance, stove, fridge, washer, dryer, kitchen dinning etc. Very convenient location. Good for single or couple. Available immediately.
416.264.3899 / 647.808.1186

***EAST OF MORNINGSIDE & SHEPPARD***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Near to University. Close to TTC, schoo, shopping. Family preferred.Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.724.2564

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school, Tamil stores, mall. Avail. immediately. Family preferred.
தொடர்புகளுக்கு: 416.820.3116

**BRICHMOUNT & FINCH**
2 Bedroom walkout-out bsmt. apt. for rent. Sep. entrance, laundry facilities. Close to TTC, tamil stores, school, etc. No smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.568.0686

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc. தொடர்புகளுக்கு: 416.551.8379

**McCOWAN & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Washer, dryer, internet, cable & parking. Close to mall, TTC, tamil stores & hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.554.2496

**MORNINGSIDE & MORNINGVIEW TRAIL**
2 Bedroom walkout bsmt for rent. Sep.entrance, parking, laundry, cable, internet. Close to TTC, school, shopping, tamil stores. Working ladies, students, small families preferred. No smoking & No pets. Avail. immediately.
416.830.0643 / 416.533.0768

**NEILSON & FINCH**
2 Bedrooms bsmt for rent. Sep entrance. Parking, laundry. Bills Including. Close to 24 hours bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.456.1031

**MEADOWALE & SHEPPARD**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, tamil store. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.282.6282

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, shopping mall & other all facilities. Avail. Anytime.
416.902.1758 / 416.724.4752

மேலும் பக்கங்கம் 23, 25

# ROOM RENT

**McLEVIN & TAPSCOTT**
1 Master bedroom for rent. Attached washroom. Parking & cable.Close to TTC, mall, school. Backyard patio. Avail. immediately. 292 McLevin Avenue.
தொடர்புகளுக்கு: 905.683.5699

**VICTORIAPARK & ELLESMERE**
1 Room for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, hwy 401, DVP, mall, bank. Avail. January 15, 2010.
தொடர்புகளுக்கு: 416.816.3114

**KENNEDY & ELLESMERE**
தனி அறை ஒன்று வாடகைக்கு உண்டு. First floor. Sep. kitchen, washroom. Close to Kennedy road. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.830.5560

**TAPSCOTT & MCLEVIN**
1 Room for rent. Laundry. Close to mall, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.754.8947

**2** நேரச் சாப்பாட்டுடன் (**2 meals**) நாலு அறைகள் கொண்ட **BSMT** இல் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. **Free internet.** தொலைபேசி குறைந்த கட்டணத்துடன் செய்துதரப்படும். ***Close to all*** facilities.
**PHARMACY & LAWRENCE**
தொடர்புகளுக்கு: 416.288.0303

**BELLAMY & LAWRENCE**
Main floor இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Everything included. Rent $350. Avail. January 01, 2010.
416.289.3459 / 416.433.0491

**MARKHAM & LAWRENCE**
Room available for rent in main floor. Cable inclusive. Close to TTC & plaza. Room $275.
416.439.4076/416.728.0807

**McCOWAN & LAWRENCE**
Room for rent in bsmt. Sep. entrance.Parking. Close to hospital, tamil stores, 2 min. to bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.827.5529

**MCCOWAN & LAWERENCE**
1 Bedroom bsmt இல் வாடகைக்கு உண்டு. Sep. entrance, Parking, laundry, cable. Close to TTC, mall, hospital, bank. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.439.1373

**HIGHGLEN & MIDDLEFIELD**
3 அறைகள் கொண்ட வீட்டில் 1 அறை வாடகைக்கு உண்டு. Avail. immediately. No smoking & No pets. வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 905.209.0545

**TAUNTON & BROCK STREET**
3 அறைகள் வாடகைக்கு உண்டு. Close to mall, TTC, shopping, Doctor Office. Old people Or Working ladies preferred. வயோதிபர்களை பராமரிக்கப்படும்.
416.990.1887/ 647.863.3993

**MIDLAND & LAWRENCE**
**MARTINGROVE & REXDELE**
1 Room in an Aptartment for rent. Rent $ 400. Close to all facilities.
416.731.2833 / 416.615.0222

**MORNINGSIDE & McLEVIN**
2 அறைகள் உடன் வாடகைக்கு உண்டு. இணைந்த தனி குளியலறை. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. விபரங்களுக்கு:
416.732.6931/416.281.9888

**FINCH & BRIDLETOWNE CIRCLE**
Only 1 room for rent in bsmt. Sep. entrance. Parking, cooking facilities. Meals optional. Close to mall, TTC, school. Males only. Avail. immediately.
416.502.3033 / 647.502.0151

**BRIMELY & EGLINTON**
1 Room in a bsmt for rent. Sep. Entrance. Parking, cable, laundry included.No smoking. Rent $350. தொடர்புகளுக்கு: 416.268.5014

**MCCOWAN & STEELES**
1 Bedroom for rent. Parking, laundry. Close to TTC, school, library. Bachelor only. No smoking & No pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.836.6423

**WARDEN & FINCH**
Condo. இல் 1 அறை வாடகைக்கு உண்டு. Parking. Close to bus, Tamil stores, Tamil restaurant. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.499.6437
416.844.6437 / 416.855.9232

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

**FINCH & WARDEN**
One room for rent. Laundry, internet. Close to TTC, shopping mall. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.938.7510

**MARKHAM & STEELES**
1 Room for rent. Parking, laundry. Close to TTC, walmart, bank. Avail. Anytime.
416.951.2200 / 416.951.0034

**MIDDLEFIELD & ELSON**
2 Rooms for rent. Attached washroom. Close to TTC, No Frills, school, tamil stores, Doctor. Avail. immediately. தொடர்புகளுக்கு:
905.471.5340 / 905.209.7359

**KENNEDY & EGLINTON**
one room for rent. Sep. entrance. Laundry, cable. Non smoker preferred. Close to bus, stores, subway. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.757.3303

**NEILSON & FINCH**
அறை உடன் வாடகைக்கு உண்டு. தனி குளியலறை. சமைக்கும் வசதி அல்லது உணவு தரலாம். வயதான பெண்கள் விரும்பத்தக்கது. குறைந்த வாடகை.
தொடர்புகளுக்கு: 416.554.4416

**BRIMLEY & STEELES**
தனி வீடு ஒன்றின் மேல் தளத்தில் அறை ஒன்று வாடகைக்கு உண்டு. Parking, Laundry, cooking facilities. Close to bus, school, தமிழ் கடைகள். Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.844.7550

**FINCH & MIDDLEFIELD**
Bsmt இல் 2 அறைகள் தனித்தனியாக வாடகைக்கு உண்டு. Sep. entrance. Close to mall, ஐயப்பன் கோவில். No smoking. Ladies preffered. Avail. immediately.
416.493.0590/647.286.0590

**DANFORTH & EGLINTON**
Shared Room for rent in bsmt. Another room available for a lady in main floor. Close to bus, stores, 5 min. to Kennedy subway. Males only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.201.3111

**BIRCHMOUNT & MCNICOLL**
அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும். Attached washroom, Double garage. Close to everything.
Call: 416.335.8055/905.294.2674

# HOUSE FOR RENT

**PHARMACY & SHEPPARD**
3 Bedroom house for rent. Parking, laundry, weelchair Facilities. Close to TTC, mall, school, park. Avail. January 01, 2010.
416.756.1050/416.904.5904

**NEILSON & SHEPPARD**
3 Bedroom Main floor with 2 bedroom bsmt house for rent. 2 full washroom, garage parking. Close to bus, mall, library, school, etc. Avail. immediately. தொடர்புகளுக்கு:
416.283.8275

**9TH LINE & HWY 7**
4 Bedroom house for rent. Close to all facilities. Avail. immediately. Rent $1750.
தொடர்புகளுக்கு: 416.575.5055

**DONMILLES & SHEPPARD**
3 Bedrooms house for rent. Parking, laundry, cable, internet. Close to 5 நிமிட நடை தூரத்தில் பஸ் தரிப்பிடம், Donmills Subway, school, mall, DVP, hwy 401. Avail. January 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.502.8053

**NEILSON & MCLEVIN**
4 Bedroom house for rent. Main floor 2½ washrooms, 4 parking. Close to TTC, school, mall etc. Avail. January 01, 2010. அறைகள் தனித்தனியாகவும் வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.724.7603

# HOUSE FOR SALE

**EGLINTON & DANFORTH**
**NEW TOWN HOUSE**
4 Bedrooms house for sale. 1St owner.
தொடர்புகளுக்கு: 647.201.3111

கொழும்பு வெள்ளவத்தை தயா வீதியிலுள்ள 3 படுக்கை அறைகள் கொண்ட தொடர்மாடி Condo. 1st Floor வீடு விற்பனைக்கு உண்டு. 950 Sq.feet, 3 washroom, parking, A/C, just painted, 24hrs. security guard.
ரவி - 416.418.5479
மயூரன் - 001194-11-236-5443

# CARS FOR SALE

2002 Honda Accord Coupe - $4,900,
2005 Honda Accord - 2 door, $ 9,800,
2006 Ford fusion $5,900,
2007 Acura CSX, 5 speed $16,900.
தொடர்புகளுக்கு: 416.575.5055

# CARS FOR SALE PRIVATE SALE

1996 Toyota Camry -LE model, Gold colour, good condition, 203 km, new brake, extra winter tire. 1999 Dodge Caravan, one owner, fully loaded, 221 km
தொடர்புகளுக்கு: ***416-270.2677***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

# இமிகிரேஷன் வழக்குகள்
## Immigration Cases

இமிகிரேஷன் வழக்குகள் வெற்றிகரமாக முடித்துக் கொள்வதற்கு அழையுங்கள்
Paul Ganesh - சட்ட ஆலோசகர்
Tel : 416.284.4772 / 647.403.8780

**பிள்ளை பராமரிப்பாளர் தேவை**
***10 TH LINE & DERRY***
3½ வயது ஆண் குழந்தையை பராமரிப்பதற்கு ஒரு பெண் தேவை. சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.
தொடர்புகளுக்கு: 905.824.8565

# TUITION

**MORNINGSIDE & NIGHTSTAR**
Need a private tutor? Call today!!!! Maths, English & Science. Fluent in both English & Tamil. Affordable rates. Grade JK - 8. Home work help provided. Guaranteed to improve academic performances in less time & at lower cost. Flexible scheduling
Contact: 416. 835.6628

# TUTION CLASSES

Maths, English, Science, Art & Tamil. (JK – Gr. 3) Preparation for next grade. • Homework help • Flexible time. 1 to 1 or group classes.
Call: 905.554.2496

# தமிழ் வகுப்பு

பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியையால் தரம் 1 - தரம் 12 வரை உள்ள மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கப்படும். உங்கள் பிள்ளைகளும் தமிழில் எழுத வாசிக்க அழையுங்கள். 905.554.2496

# WANTED

Used Toyota Corolla 1993 - 1997 தேவை. AC, Airbag.
Raj - 647.269.6552

# SPACE FOR RENT

**KENNEDY & FINCH**
Commercial Place for rent. Out of 6 rooms 4 rooms avail. for rent. Close to TTC, all facilities. Close by immediately.
contact: 416.288.8701

# SCHOOL TRANSPORTATION

***BRIMLEY & HUNTINGWOOD***
பகுதியில் அமைந்துள்ள பாடசாலைக்கு உங்கள் பிள்ளைகளைக் கூட்டிவர வேண்டுமா?
தொடர்புகளுக்கு: 416.274.9726

**THARANEE ELECTRICAL SERVICES**
அனைத்து மின் இணைப்பு தருத்த வேலைகளுக்கும், கனடிய அரசு அங்கீகாரம் பெற்றவர் மூலம் பாதுகாப்பான முறையில் உங்கள் அனைத்து மின்சார வேலைகளையும் செய்து கொள்ள அழையுங்கள்.
Big or Small Job
Licensed Electrician Bala : 647.284.6141

மேலும் பக்கங்கம் 22, 25

# பயண ஊர்திகள்

வண்டி வருகுது, வண்டி வருகுது என்று வண்டியை எதிர்பார்த்துக் காத்திருப்பர் வசதி படைத்தவர்கள். சுகமான, சொகுசான பயணத்திற்கு வண்டிவகை செய்கின்றது. பணக்காரர்களின் ஆடம்பரங்களில் இதுவும் ஒன்று. மாட்டு வண்டி, குதிரைவண்டி, ரயில்வண்டி, மோட்டார் வண்டி, பஸ்வண்டி என்று வண்டிகள் பலவகை உண்டு. இன்று ஒலியை விட வேகமாகச் செல்கின்ற கன்கார்ட் விமானத்தில் மனிதன் பறந்து கொண்டிருக்கின்றான். இது அறிவியலின் வளர்ச்சியை அறிவுறுத்துகின்றது.

ஆதியில் கால் நடையாகச் சென்ற மனிதன் காலப்போக்கில் மிருகங்களைத் தனது வாகனமாகப் பயன்படுத்தினான். மாடு, கழுதை, ஒட்டகம், குதிரை, யானை இவற்றை வாகனமாகப் பயன்படுத்தினான். பாலைவனக்கப்பல் ஒட்டமாகும். பின்னர் அவற்றைப் பழக்கி வண்டிகளில் பூட்டி ஓட்டத் தொடங்கினான். சில்லு கண்டுபிடிக்கப்பட்டது. பயணத்தில் ஏற்பட்ட அபிவிருத்தி எனலாம்.

ஒரு காலத்தில் மனிதன் நூறு மைல் பிரயாணம் செய்வதே மிகப்பெரிய விடயமாகும். நூறு மைல் செல்வதற்கும் சரியான பாதைகள் இருக்கவில்லை. அதனால் பயணம் புறப்பட்ட ஒருவன் திரும்பி வருவானா என்று அவனுக்கே சந்தேகமாக இருந்தது. அந்தக் காலத்தில் நூறுமைல்களுக்கு மேல் பயணம் புறப்படுபவர்கள் முன்னெச்சரிக்கையாக உயில் எழுதி வைத்து விட்டுத்தான் போவார்களாம். புறப்படுமுன் உற்றார், உறவினர்களை அழைத்து இறுதிவிடை பெற்றுச் செல்வார்களாம்.

இது நமக்கு வேடிக்கையாகத் தோன்றலாம். ஆனால் ஒழுங்கான பாதைகள் இன்மை, வாகனவசதி இன்மை, தெருவிளக்குகள் இன்மை, வழிப்பறிக்கொள்ளையர் தொல்லை, ஆகியன இதற்குக் காரணமாகும். எனவே தான் பயணம் பாதுகாப்பாக இருப்பதற்கு முற்காலத்தில் பல்லக்குகளைப் பயன்படுத்தினார்கள். பல்லக்குகளை காவி துணையாக பலபேர் செல்வர். இன்று சில மலைத் தலங்களுக்கு முதியவர்களை கொண்டு செல்ல பல்லக்குகளை பயன்படுத்துகின்றார்கள். ராணிமார்க்கு மாத்திரம் உரித்தான பல்லக்குகளை இன்று சாதாரண மக்களும் பயன்படுத்துகிறார்கள். குதிரை பூட்டிய கோச்வண்டிகளும் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டன. இதற்கு மாறாக மனிதனை வைத்து மனிதன் இழுக்கும் ரிக்ஷாக்களும் பயன்படுத்தப்பட்டன.

தரைவழிப் பயணத்துடன் கடல் மார்க்கமாகவும் பயணம் செய்ய மனிதர்கள் முற்பட்டார்கள். ஆரம்பத்தில் பாய்மரக்கப்பல்களில் பயணம் செய்தவர்கள் பின் நீராவிக்கப்பல்களிலும் பின்னர் எரிபொருளை பயன்படுத்தும் கப்பல்களிலும் பயணத்தை



மேற்கொண்டார்கள். இன்று நீச்சல் தடாகம், விளையாட்டுதிடல் வசதியுள்ள மிதக்கும் அரண்மனை போன்ற பாரிய உல்லாச கப்பல்களில் பிரயாணிகள் செல்கின்றனர்.

பின்னர் மோட்டார் வண்டிகளும், ரயிலும் கண்டுபிடிக்கப்பட்டன. முதலில் நீராவியின் மூலம் ரயில்கள் ஓடின. அது புகைவண்டி எனப்பட்டது. பின்னர் டீசல் ரயில் புழக்கதிற்கு வந்தது. இதில் அனேகர் பயணம் செய்ய முடிந்தது. இவை பல பெட்டிகளை உடைய தொடர் வண்டிகள் எனப்பட்டன. கடுகதி தொடர் வண்டிகளும் சேவையிலிருந்தன. கார்கள் குடும்பத்தவர் பயணம் செய்ய உதவின. வாடகைக் கார்கள் பொதுமக்கள் பயணம் செய்ய உதவின. பேரூந்தும் பொதுப் போக்குவரத்தாகும். தனி உடமையாகவும், பொதுஉடமையாகாவும் அரசு உடமையாகவும் வாகனங்கள் இருந்தன.

நிலத்தையும், நீரையும் போக்குவரத்திற்கு பயன்படுத்திய மக்கள் விண்வெளியையும் விட்டு வைக்கவில்லை. வாயுக்கள் அடைத்த பலூன்களில் முதலில் பறந்தவர்கள் இயந்திரங்களைக் கண்டுபிடித்து புவியீர்ப்புச் சக்தியை எதிர்த்துப் பறக்க முயன்று முடிவில் வெற்றியும் கண்டார்கள். இன்றைக்கு விமானப்பயணம் மிக துரிதப்பயணமாக மாறியுள்ளது. ரைட் சகோதரர்கள் ஆகாய விமானத்தை கண்டுபிடித்தார்கள். ஆயிரக் கணக்கான மைல்களை சில மணிநேரத்தில் கடப்பது இன்று சர்வ சாதாரணமாகிவிட்டது.

மனிதனின் பிரயாண ஆசை இத்துடன் நின்றுவிடவில்லை. ஒரு கிரகத்திலிருந்து இன்னொரு கிரகத்திற்குச் செல்லும் முயற்சிலும் அவன் ஈடுபட்டிருக்கின்றான். ராக்கெட்டுகளில் பறக்கின்றான். வானவெளித் தளங்களில் வாழ்க்கை நடத்துகின்றான்.

மனிதன் கண்டுபிடித்துள்ள பயண சாதனங்கள் இன்று மிகப் பெரிய அளவில் முன்னேறியுள்ளன. பூமியில் அவனுக்கு ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்க வேறு கிரகங்களுக்கு சென்று அவன் குடியேறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

காலத்தையும் தூரத்தையும் மனிதன் வெற்றி கொண்டு விட்டான். அந்த அதிசய கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பது நமக்குப் பெருமை தருவதாகும்.

நாள் தோறும் சனத்தொகையில் ஒரு குறிப்பிட்ட அளவினர், சில்லின் மேலே சீவியம் நடத்துகிறார்கள். அதாவது பயணித்துக் கொண்டே இருக்கிறார்கள். பயணங்கள் முற்றுப் பெறுவதில்லை.



**நா. க. சிவராமலிங்கம்**



## JOB AVAILABLE

Travel Agency நிறுவனத்தில் தொழில் புரிவதற்கு ஆள் தேவை. முன் அனுபவம் தேவையில்லை. பயிற்சி வழங்கப்படும். ஆங்கிலம், தமிழ் சரளமாக பேசக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.

Fax - 416.323.1316

E - mail - Mansukhvilla@hotmail.com.

## Commercial Basement For Rent

### MARKHAM & ELLESMERE

Smart Baby's Diaper Factory Outlet இன் நில அறை வாடகைக்கு உண்டு. Very Busy area.

தொடர்புகளுக்கு:**416.499.8517 / 647.321.7575**

## வீடு விற்பனைக்கு

நல்லூர், யாழ்ப்பாணத்தில் 4.5 பரப்புக்கொண்ட தென்னைமரங்கள் உள்ள காணி விற்பனைக்கு உண்டு. நல்லூர் கோயிலிற்கு ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இந்நிலம் பழைய கல்வித் திணைக்களத்திற்கு (Old Education Department) முன்பாக உள்ளது.

மேலதிக விவரங்களுக்கு: **416.315.9397**

## மணமகன் தேவை

யாழ். இந்து மதத்தைச் சேர்ந்த நன்கு படித்து பட்டதாரியான( M.A பொது நிர்வாகம்) தற்பொழுது நாலகராக பணிபுரியும் 1981 ஆம் ஆண்டு பிறந்த செவ்வாய் குற்றம் உள்ள அழகிய பெண்ணுக்கு தகுந்த நல்ல வரனை பெற்றோர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தேடுகின்றார்கள். (வெளிநாடு விரும்பத்தக்கது)

உள்நாட்டில் - 011.94.021.3214223

வெளிநாட்டில் - 416.710.2686

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில் 29.11.1969 ஆம் ஆண்டு பிறந்த கொழும்பில் பொறியியலாளராக பணிபுரியும் ஆணுக்கு Canada Or America வில் Sponsor செய்யக்கூடிய மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு: 416.759.3597

## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட யாழ். பல்கலைகழகத்தில் Physical Science 4th year இல் படித்துக் கொண்டிருக்கும் 21.08.1984 ஆம் ஆண்டில் பிறந்த பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடுகின்றோம். Sponsor செய்யக் கூடிய வரனாக இருக்க வேண்டும்.

தொடர்புகளுக்கு: 416.284.8757

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## 2010க்கான புதிய வரவுகள்

நவீன Design wedding sarees, heavy work sarees, calcutta designer sarees, hand work banarasi sarees, masakali hand work pattiyala, fancy hand work choli set. என பல வகையான தெரிவுகள். ஒரு முறை நேரில் வந்து பார்த்தால் புரியும்.

416.400.7398/905.201.6791

## JOB JOB JOB

**SCAR. GOLF CLUB & LAWERENCE**

ஒரு கைக்குழந்தையையும் தாயையும் பராமரிப்பதற்கு ஒரு வயோதிபப் பெண் தேவைப்படுகின்றார்.

தொடர்புகளுக்கு: 647.746.9061

**BUS DRIVERS WANTED**

School bus drivers wanted.

தொடர்புகளுக்கு: 416.609.2542

Scarborough வில் உள்ள உணவகம் ஒன்றிற்கு அனுபவமுள்ள பெண்கள் பகுதி நேர வேலைக்கு தேவைப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு: 416.288.0303

**NEILSON & MCLEVIN** சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள பேக்கறி ஒன்றிற்கு நல்ல அனுபவம் உள்ள பேக்கறி வேலைக்கும், சமையல் பகுதிக்கும் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. மேலதிக தொடர்புகளுக்கு:

416.299.5083 / 416.788.5265

*விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு*

***www.vlambaram.com***

மேலும் பக்கங்கம் 22, 23

CTCEO (கனடியத் தமிழ்த் திரைப்பட மேம்பாட்டு மையம்) அனுசரனையில் என் ரி பிக்சஸ் வழங்கும் **மீண்டும்** என்ற எச் டி (High Definition) முழுநீளத் திரைபட்படம் காண்பிக்கப்படவுள்ளது.

இடம்: 5310 Finch Ave. East Unit- 37 , Scarborough, Ontario

காலம்: ஜனவரி 10 2010 (ஞாயிற்றுக் கிழமை)

பிற்பகல் 4 மணிக்கும் 7 மணிக்கும் என இரு காட்சிகள்.

கட்டணம்: Single- $ 7, Family of two- $ 12, Family of four- $ 20

தொடர்புகளுக்கு: 416- 399-1114

## *விற்பனையாகின்றன!*

### *கனி விமலநாதனின் மூன்று நாவல்கள்*



❶ **வேற்றுக்கிரக மனிதர்கள்**

யார் இந்த வேற்றுக்கிரக மனிதர்கள்? அவர்களின் பின்னணி என்ன? வேற்றுக்கிரக மனிதர்களை சந்தித்தவர்கள் உண்டா? வேற்றுக்கிரக மனிதர்களுக்கும் எங்களுக்கும் என்ன தொடர்பு?

❷ **பிரபஞ்சம் பற்றிய வியப்பான செய்திகள்**

எமது பிரபஞ்சம் எப்போது தோன்றியது? தோன்றியபோது எப்படி இருந்தது? எவ்விதம் இவ்வளவு பெரிதாக ஆகியது? பிரபஞ்சத்தின் முதல் நட்சத்திரம் எவ்வாறு தோன்றியது?

❸ **இனம்தெரியாத பறக்கும் தட்டுகள்**

பறக்கும் தட்டுகள் என்பது உண்மைதானா? அவை எங்கிருந்து வருகின்றன? பறக்கும் தட்டுகளை கண்டவர்கள் உண்டா?

பிரபஞ்ச இரகசியங்களை தெளிவு படுத்தும் நூல்கள்

**கிடைக்குமிடம்: முருகன் புத்தகசாலை**

***1241 Ellesmerer Road - Midland & Ellesmere***

***GTA Square - 5215 Finch Ave. E., Middlefield & Finch***

## TORONTO BUSINESS COLLEGE

**கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்**



### COMPUTERIZED ACCOUNTING DIPLOMA

- **EI** பெற்றுக்கொண்டிருப்பவர்கள் ✔
- 3 வருடங்களுக்குள் **EI** பெற்றவர்கள் ✔
- 5 வருடங்களுக்குள் Maternity Benefits பெற்றவர்கள் ✔

அரசாங்க நிதி உதவியில் இலவசமாக கற்கலாம்

CERTIFICATE COURSES

**Take One Get One Free**

Windows,Word,Excel,Power Point,Access,Outlook

Photo Shop,Quick Books,Simply Accounting,Accpac

Day,Evening,Week Ends

**FREE COMPUTER TRAINING FOR BEGINNERS**

**Canadian Securities Course**

Exam 1 & 2

By Arun Senathirajah,ACIB,MBA

Course Start Date: Jan. 16th,2010

**416-291-5155**

**4465 SHEPPARD AVE. EAST #208**

**( SHEPPARD & BRIMLEY )**


**SCARBOROUGH**

t.businesscollege@gmail.com

(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)


# திரை விமர்சனம் - பா

‘பா’... தமிழ் திரைப்படம் இல்லை, ஆனால், மூன்று தமிழர்கள் சேர்ந்து உருவாக்கிய திரைப்படம். எந்த மொழியாக இருந்தாலும் நல்ல திரைப் படம் என்றால் நாம் தேடிப்பிடித்து பார்ப்போம்தானே. அதுவும் தமிழர்கள் உருவாக்கிய படம் என்றால்? ‘பா’ பார்க்க இந்தி மொழி தெரியவேண்டும் என்று அவசியம் இல்லை.



**- பிலிம் நியூஸ் கிருஷ்ணன் -**

இந்தித் திரையுலகின் ‘சூப்பர் ஸ்டார்’ அமிதாப் பச்சனும் அவரது மகன் அபிஷேக் பச்சனும் இணைந்து நடித்திருக்கும் படம், ‘பா’. ஒரு வித்தியாசம்... இதில் அபிஷேக் பச்சன் அப்பாவாகவும் அவரது மகனாக அமிதாப் பச்சனும் வருகிறார்கள். இதனாலேயே படம் வெளியானதும் பரபரப்பாகிவிட்டது. ‘தாரே ஜமீன் பர்’ படத்துக்குப் பிறகு இந்தி மொழிப் பிரதேசங்களையும் கடந்து அதிகம் பேசப்பட்ட படம், ‘பா’ தான். ‘தாரே ஜமீன் பர்’ படத்தில் ‘டிஸ்லெக்ஸியா’ என்ற ஒரு நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது போல், இதில் ‘ப்ரோஜெரியா’ எனப்படும் உடல்ரீதியான ஒரு குறைபாட்டைக் கவனப்படுத்தி இருக்கிறார்கள். விரைவிலேயே மூப்பு அடையும் இந்த வகை நோய் மரபுரீதியானது. இந்த வகைக் குழந்தைகள் பெரும்பாலும் 13 வயதுக்குள் மரணமடைந்துவிடும், ஒரு சில குழந்தைகள் 20 வயது வரையிலும், மிக மிக அரிதாக 40 வயது வரையிலும் உயிர் வாழக்கூடும்.



அபிஷேக் பச்சன், ஒரு இளம் அரசியல்வாதி. அவரது காதலியான வித்யா பாலன், ஒரு பிள்ளைப் பேறு மருத்துவர். அபிஷேக் பச்சன் அரசியலில் பெரிய நிலைக்கு வரவேண்டும் என்று ஆர்வப்படுகிறார். இதனால், திருமணத்தைத் தள்ளிப்போட விரும்புகிறார். வித்யாபாலனின் வயிற்றில் வளரும் கருவை அழித்துவிடச் சொல்கிறார். வித்யாபாலன் மறுத்து, குழந்தையைப் பெற்றுக் கொள்கிறார். அந்தக் குழந்தைக்கு ‘ப்ரோஜெரியா’ குறைபாடு உள்ளது. இதனால் மனங் கசந்து வித்யா பாலனைப் பிரிந்து செல்கிறார் அபிஷேக் பச்சன்.

சில வருடங்களுக்குப் பின்னர், ஆரோ படிக்கும் பள்ளி விழாவில் ஒரு அரசியல்வாதியாக கலந்துகொள்கிறார். அந்த விழாவில், யார் என்றே தெரியாமல் ஒரு மாணவன் செய்த கைவினைப் பொருளான உலக உருண்டையைப் பாராட்டிப் பேசுகிறார். அதனைச் செய்தது வேறு யாருமல்ல, ஆரோதான். 13 வயதிலேயே, அவன் 65 வயதுடையவனாக இருக்கிறன் அவனைத் தன் மகன் என்றே தெரியாமல் பரிசு கொடுத்துவிட்டுப் போகிறார் அபிஷேக். பின்னர் இணைய தளம் மூலம் ‘ஆரோ’ தன் அப்பாவைத் தொடர்பு கொள்கிறான். வெப்காம் மூலம் சாட்டிங் செய்கிறான். அவரது அழைப்பின் பேரில் மும்பையிலிருந்து டெல்லி சென்று அவருடன் சில நாள் இருக்கிறான்.

கடைசிக் காட்சியில், ‘ஆரோ’வின் உடல் நிலை சீரியஸாகி ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகியிருப்பதைக் கேள்விப்பட்டு வரும் அபிஷேக், அங்கேதான் தன் காதலி வித்யாபாலனை மறுபடி சந்திக்கிறார். ‘ஆரோ’ யாரோ அல்ல, தன் மகன்தான் என்கிற உண்மை அப்போதுதான் அவருக்குத் தெரிகிறது. அவர் மீது கோபமாக இருந்த தன் அம்மாவை அப்பாவுடன் சேர்த்து வைத்துவிட்டு ஆரோ கண்ணை மூடுகிறான்.

‘ஆரோ’வாக அமிதாப் பச்சன். ஆள் யாரென்றே கண்டுபிடிக்க முடியாதபடி அமிதாப் பச்சனுக்கு மிகை மேக்கப் போட்டு ‘ஆரோ’வாகவே மாற்றிவிட்டார்கள். குள்ளமான உருவம், சற்றே விகாரமான, மன வளர்ச்சி பிறழ்ந்த மாணவனின் தோற்றம். மட்டுமல்ல, நடையுடை பாவனைகளிலும் கூட சிறிதும் அமிதாப் பச்சனைப் பார்க்க முடியவில்லை. குரலைக்கூட மாற்றிக் கொண்டுவிட்டார். ஆனால், இவ்வளவு மெனக்கெட்டும் அமிதாப்பைச் சரியாக பயன்படுத்திக் கொள்ளாமல் விட்டுவிட்டார்கள். ‘தாரே ஜமீன் பர்’ படத்தில் டிஸ்லெக்ஸியாவை பிரத்தியேகமாக குறிப்பிட்டதோடு நின்றுவிடாமல், கதை மொத்தமும் அழகாக, அற்புதமாக அதை மையப்படுத்தியே சுழன்றிருந்தது. ‘பா’வில் கதை ‘ப்ரோஜேரியா’வை தொட்டுவிட்டு, காதலன் காதலி பிரிவு, அபிஷேக்கின் அரசியல் பிரவேசம், ஊழல் குற்றச்சாட்டு என்று பல்வேறு தளங்களுக்கு நகர்கிறது. எனவே, அமிதாப்புக்கு வேலை குறைவு. சும்மா கைகளைத் தொங்கப் போட்டுக்கொண்டு நடப்பது, முன்னும் பின்னும் கைகளை ஆட்டி, தலைமேல் விரல்களால் தண்ணீர் தெளிப்பது போல் அபிநயிப்பது, வித்தியாசமான குரலில் பேசுவது, சிரிப்பது என அவரை ஒரு குறுகிய வட்டத்துக்குள் இயங்க வைத்திருக்கிறார்கள். கொடுத்த வரையில் தன் பாத்திரத்தை முழுமையாகச் செய்திருக்கிறார் அமிதாப் பச்சன். அதில் சந்தேகமில்லை. கதையை அவரை மையப்படுத்தி இன்னும் வலுவான காட்சிகளை அமைத்திருந்தால், ‘தாரே ஜமீன் பர்’ உயரத்தைத் தொட்டிருக்கலாம்.

அபிஷேக் பச்சனுக்கு அதிகம் வேலையில்லை. என்றாலும், அவர் வருகிற காட்சிகளில் எல்லாம் மிக இயல்பாக இருக்கிறார். கொடுத்த பாத்திரத்தை அநாயாசமாகச் செய்துவிட்டுப் போகிறார். ஒரு காட்சியில் தன் மகனை (அப்பாவை) உப்பு மூட்டை தூக்கிக்கொண்டு போகிறார்.

வித்யாபாலன் நடிப்பு மிக யதார்த்தமானது. ரசிக்க வைக்கிற முகப் பொலிவுடன், சாதாரணமாக நடித்திருக்கிறார். ‘இந்தக் குழந்தையைக் கலைத்துவிடு’ என்று அவரின் அம்மா சொல்ல, அதை எப்படி மறுத்துச் சொல்வது என்று திண்டாடி, கடைசியில் கண்ணீருடன் குழந்தை வேண்டும் என்னும் போது, அற்புதமான நடிப்பு!

இசை இளையராஜா... ஆரம்பக் காட்சியில் வருகிற பின்னணி இசை முப்பது ஆண்டுகளுக்கு முன்பே நாம் கேட்டு ரசித்த, ‘அலைகள் ஓய்வதில்லை’ படத்தில் இடம்பெற்ற ‘புத்தம் புதுக் காலை, பொன்னிற வேளை...’ பாடல் மெட்டாகும். மற்றபடி இதர பாடல்களும் இனிமையாகவே இருக்கின்றன. படத்தின் தன்மைக்கேற்ப மென்மையாகத் தன் பங்களிப்பை வழங்கியிருக்கிறார் இளையராஜா. ரீ-ரிக்கார்டிங் செய்யப்பட்டிருப்பதே தெரியாமல் படத்தோடு ஒன்றியிருப்பது ஒரு பலம். ராஜாவின் இசையில் அமிதாப் ஒரு பாடலும் பாடியுள்ளார். படத்தின் பின்னணி இசையுடன் சில காட்சிகளைப் பார்த்த அமிதாப், ஆனந்தத்தில் கண் கலங்கி, “இந்த நூற்றாண்டின் மகத்தான கலைஞர் இவர். ஏன் இத்தனை காலமும் பாலிவுட் இவரை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை” என்றாராம்!

இரண்டாவது நம்மவர் இந்தப் படத்தின் ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராம். படம் முடிந்த பிறகும் ஒவ்வொரு காட்சியும் கண்ணில் நிற்கிறது. சில கேமரா கோணங்களும் அருகாமைக் காட்சிகளும் வர்ணிக்க வார்த்தைகள் அற்றவை. ஒரு காட்சியில் வித்யா பாலனினதும் அமிதாப்பினதும் முகம் மட்டும் திரையை இருவரின் கண்ணீருடன் நிறைக்கும் காட்சி அழகு!

இயக்கம்... ‘சீனி கும்’ என்னும் வெற்றிப் படத்தைத் தந்த தமிழர் பால்கி எனும் பாலகிருஷ்ணன். ஆரம்ப காட்சிகளில் இருந்து இறுதிக் காட்சிவரை நேர்த்தியாக கொண்டு சென்றிருக்கிறார். அதிலும் ஒரு சோகமான கதையை சுவாரசியமாக கொண்டு சென்ற வகையில், இயக்குநர் என்பதைவிட ஒரு சிறந்த திரைக்கதை ஆசிரியராக பால்கி இதில் வெளிப்படுகிறார். அபிஷேக் பச்சனும் வித்யாபாலனும் கருக்கலைப்பில் ஏற்பட்ட பிணக்கு காரணமாக பிரிகிறார்கள். அங்கேயே அவர்கள் தங்களுடைய லட்சியங்களை தேர்வு செய்துகொள்கின்றனர். வித்யாவுக்கு குழந்தை, அபிஷேக்குக்கு அரசியல். போகப்போக, திரைக்கதை இவர்களுக்கிடையே, இவர்களின் லட்சியங்களுக்கிடையே சின்னச்சின்ன முரண்களை அழகாக எடுத்து செல்கிறது. முடிவு தமிழ் திரைப்படங்களை நினைவுபடுத்தினாலும், உருக்கமாக இருக்கிறது.

‘பா’வை ‘தாரே ஜமீன் பர்’ படத்துடன் ஒப்பிட்டு பாராட்ட முடியாது என்றாலும், பார்க்கலாம்.

# புத்தாண்டு அறவுரை

கவலை துன்பங்களை
விட்டு ஒழியுங்கள்
எமக்கு அப்பாற்பட்ட
சக்தி ஒன்றுண்டு என்பதை
எப்போதும் நம்புங்கள்
அறிஞரின் உரைகளை
ஏற்றுக் கொள்ளுங்கள்
பொய் பேசாதீர்
புறம் கூறாதீர்
ஊன் உணவைக் கைவிடுங்கள்
உயிர்க்கொலை செய்யாதீர்
தானம் செய்யுங்கள்
தவநெறிகளை மேற்கொள்ளுங்கள்
செய்நன்றி மறவாதீர்
தீயவர் நட்பை ஒதுக்குங்கள்
பொய்ச்சாட்சி சொல்லாதீர்
அறவோர் சபையில் சமூகமளியுங்கள்
துன்புற்ற உயிர்களுக்கு உதவுங்கள்
பழிச்செயல்களைச் செய்யாதீர்
இளமை யாக்கை செல்வம்
நிலையாது
வாழ்நாள் போவது போவதுதான்
மரணம் வருவது வருவதுதான்
எனவே
நின்று நிலைக்கும் அறத்தையும்



அனைவரையும் வாழ்விக்கும்
அறிவையும் தேடிவைத்து
உலகம் நல்வழியில் வாழ வழிவகுத்து
உயர்நிலையில் செல்வோமாக!........



முத்துராஜா

SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL

# 10TH ANNIVERSARY SPECIAL!



# BREAD MASTER BAKERY

XMAS SPECIAL

## SPECIAL STARTING FROM DECEMBER 01, 2009

**TAKE - OUT AND CATERING FOR ANY OCCASIONS**

SPECIAL
SAMOSA
Vegi.
5 FOR $1.00
Mutton, Chicken Or Fish 4 FOR 1.00

SPECIAL
RICE & CURRY Vegi.
(வடை, பாயசம், அப்பளம், மிளகாய், ரசம்) 6 கறியுடன்
$4.99 (Tuesday & Friday)

SPECIAL
கொத்து ரொட்டி
Kotthu Rotti
(Chicken, Mutton, Beef)
$3.99

SPECIAL
25 இடியப்பம்
25 String Hopper
(with Potato Curry)
சம்பல், சொதி, கிழங்கு - குளம்பு $2.99

SPECIAL
பிட்டு / Pittu
(with Potato Curry)
கிழங்கு குளம்பு
$2.99


SPECIAL
இடியப்ப மிக்ஸ்
String Hopper Mix
$1.99
பிட்டு மிக்ஸ்
Pittu Mix $2.99

SPECIAL
நூடில்ஸ்
NOODLES
(Chicken & Shrimp)
with Coke
$2.49
Special for Students

SPECIAL
ரொட்டி
(Plain) 0.60¢
வீச்சு ரொட்டி
0.75¢

SPECIAL
Lunch Special for Students
2 Rolls
+ Can Juice
$1.99

10வது வருடத்தில்
கால் பதிக்கும் முகமாக
வாடிக்கையாளர்களுக்கு
**BREAD MASTER**
தரும் சிறப்பு விலை



FRESH FROM THE OVEN

திருமணம்,
பூப்புனித நீராட்டு விழா,
பிறந்தநாள் வைபவம்,
ஒன்றுகூடல்கள், அந்தியேட்டிக்
கிரியைகள் மற்றும் எந்த
வைபவங்களானாலும்
சுத்தமான முறையில்
எத்தனை பேர்களுக்கும்
கேற்றறிங் செய்து தரப்படும்

SPECIAL
CROISSANT
3 FOR
$1.00



OPEN 7 DAYS A WEEK! 7.00 A.M - 9.00 P.M

MANY MORE ITEMS FOR SPECIAL

## 31 TAPSCOTT ROAD, UNIT #B3

LOWER LEVEL, MALVERN TOWN CENTRE - SCARBOROUGH

## TEL: (416) 299-5083

McLevin Ave.
N
Bread Master Bakery (Plaza behind the Malvern Mall)
Neilson
Tapscott

SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL

# கருந்துளைகள் - 7

பண்டிகை நாட்கள் விடுமுறை நாட்கள் என பரபரப்பாக இருந்திருப்பீர்கள். மீண்டும் ஒரு புதுவருடத்திற்குள் நுழைந்து விட்டோம். கடந்த வருடத்தின் வலி இன்னமும் ஆறவில்லை, என்றும் ஆறாது. இருப்பினும் வாழ்க்கை ஓடிக் கொண்டேதான் இருக்கும். நேர்த்தன்மையான நோக்குடன் இன்னமும் செல்வோம். நடப்பவை இனி நல்லதாகவே நடக்கட்டும். 'தை பிறந்தால் வழி பிறக்கும்' அல்லவா! நம்புவோம்.

சென்ற தடவை கருந்துளையினை விளங்கிக் கொள்வதற்காக, தேவையான அளவிற்கு பொதுச் சார்புத் தத்துவத்தினைப் பற்றித் தெரிந்து கொண்டோம். இன்று பொதுச் சார்புத் தத்துவத்தின் வழியேயான கருந்துளைகளின் விளக்கத்தினைப் பார்ப்போம்.




## பேரண்டம் - 55

கருந்துளை அமைப்பிற்கான விளக்கம்.

வெளி நேர நாற்பரிமாண வெளியில் உள்ள பொருட்கள் எல்லாம் தம்மைச் சுற்றியுள்ள வெளிநேரத்தில் வளைவுகளை ஏற்படுத்துகின்றன. பொருட்களின் அதாவது சடங்களின் திணிவானது அதிகமாக இருந்தால் இந்த வளைவானது பெரியதாக இருக்கும். இதனைப் பின்வருமாறு வல்லுனர்கள் தெளிவுபடுத்துகின்றனர். வெளி-நேரப் பரிமாணமானது ஈர்க்கப்பட்ட ஓர் இறப்பர் துண்டு போலானது எனக்கருதுங்கள். கிடையாகப் பிடிக்கப்பட்ட இவ் இரப்பர் துண்டின்மேல் ஓர் இரும்புக் குண்டினை வைத்தால் என்ன நிகழும்? இரும்புக்குண்டு வைக்கப்பட்ட இடம் கீழாகப் பதியும் என்பது எங்கள் எல்லோருக்கும் தெரியும். இரும்புக்குண்டின் பாரம் கூடவாக இருக்கும் போது, கீழாகப் பதியும் அளவும் கூடும். இது போன்றதோ வெளி-நேரப் பரிமாணத்தில் பெரிய திணிவுகள் இருப்பதும். வெளிநேரம் என்ற நாற்பரிணாம வெளியை அதில் உள்ள பூமி, சந்திரன் போன்ற திணிவுகள் இன்னமும் கூடுதலாகப் பதியச் செய்கின்றன. பதியச் செய்கின்றன என்பதை விட, திணவுகள் வெளிநேரத்தினைச் சுருட்டிக் கொள்கின்றன என்பது மிகப் பொருத்தமாகும். ஏனெனில் இந்தப் பதியும் தன்மையானது முப்பரிமாணத்திலும் நிகழும் செயலாகும். விளங்கிக் கொள்வதற்கு வசதியாக இனியும் பதியும் என்றே கூறுகின்றேன்.

சந்திரனினால் ஏற்படுத்தப்படும் பதிவினை விட, பூமியினால் உண்டாக்கப்படும் பதிவு கூடுதலாக இருக்கும். இன்னமும் திணிவு கூடிய கதிரவன் ஏற்படுத்தும் பள்ளம் இன்னமும் அதிகமாக இருக்கும். கதிரவன் எவ்வளவு பெரியது என்பது எங்களுக்குத் தெரியும். அது எவ்வளவு பாரமானது என்பதும் எங்களுக்குத் தெரியும். எங்களது பூமியைப் போல 10 இலச்சம் மடங்கு பருமனானது. 3 இலட்சத்து 33ஆயிரம் மடங்கு திணிவுடையது. அதன் திணிவினை மாற்றாமல் அதன் உருப்படியை மட்டும் 6 கிலோமீற்றர் ஆரையுடைய கோளமாகச் சின்னதாக்கினால், சிறியதாக்கப்பட்ட கதிரவனால், அதன் பெரும் திணிவு சிறிய இடத்தில் இருக்கும். அதன் காரணமாக இப்போது கதிரவன் இருக்கும் இடத்தில் பள்ளமாகும் தன்மை அதாவது வெளிநேரத்தினைச் சுருட்டிக் கொள்ளும் தன்மை அதிகமாக இருக்கும். எப்படியெனில், கிட்டத்தட்ட 3 இலச்சம் பூமியின் அளவிலான பாரம், வெளிநேரப் பரிமாணத்தின் 10 இலச்சம் பூமியின் பருமனான இடத்தில் பரந்து ஏற்படுத்தும் விளைவினை, கிட்டத்தட்ட 6 கிலோமீற்றர் ஆரையுடைய பருமனான வெளிநேரப் பரிமாணப்பகுதியில் கொடுக்கையில், 6 கிலோமீற்றர் ஆரையுடைய பகுதி நன்றாகக் கீழே போகும் என்பது எமக்கெல்லாம் தெளிவாகத் தெரிந்த விடயம்தானே.

இது மாத்திரமல்ல, எமது பூமியினைப் போல் 3 இலச்சத்து 33 ஆயிரம் மடங்கு பாரமும் ஒரு புள்ளியில் வந்து சேரும்போது இன்னதும் பெரும் ஆழத்துக்குள் வெளிநேரம் சென்றுவிடும். அப்புள்ளிதான் ஒருமம். எனவே கருந்துளையின் மத்தியில் உள்ள ஒருமத்தில் வெளிநேரத்தின் வளைவானது முடிவிலிப் பெறுமானமான வளைவாக வந்து விடுகின்றது. ஆக மொத்தத்தில் சடமெல்லாம் ஒன்றாக ஒடுங்கிய புள்ளியானது முடிவிலி வளைவினைக் கொண்ட வெளிநேரமாகவும், அதனைச் சுற்றியுள்ள சிறு கோளப் பகுதி பெரிய வளைவினையுடைய வெளிநேரப் பகுதியாகவும் வருகையில் அவ்விடம் கருந்துளையாகி விடுகின்றது.

இவ்விளைவே பெரும் திணிவொன்றினை வெளிநேரப் பரிமாணத்தில் கருந்துளையாகக் காட்டுகின்றது. இச்சிறிய ஆனால் மிகவும் ஆழமான பள்ளத்திற்கு அருகில் வரும் எதுவும் உள்ளே வந்து விழுந்துவிடும். அத்துடன் வெளிநேரத்தில் சக்தியும் பயணப்படுகின்ற ஒன்று என்பதனால் மிகப் பெரியதான இது போன்ற வளைவுகளினுள் ஒளியும் விழுந்து விடுவதினால் அப்பகுதி இருண்டு கருமையாக இருக்கும் இவ்விரண்டு விளைவுகளின் வெளிப்பாடாக அங்கே கருந்துளை வந்துவிடும்.

நமது கதிரவனை கருந்துளையின் மாதிரியாகக் காட்டினேன். உண்மையில் குறைந்தது எமது கதிரவனின் திணிவினைப்போல் 3 மடங்கு, அதாவது எமது பூமியின் திணிவினைப் போல் 10 இலச்சம் மடங்கு திணிவுடைய சுப்பநோவா எச்சங்களே கருந்துளைகளாக வரமுடியும். அப்படியாயின் அக்கருந்துளையின் பருமன் எமது யாழ்ப்பாணத்தின் குறுக்கு வெட்டினையும் விடப் பெரியதான பகுதியினைக் கொண்ட கோள இடத்தினைப் பிடித்திருக்கும்.

கருந்துளைகளுக்கான விளக்கத்தினை மிக எளிமையாகத் தெரிந்து கொண்டோம். இக்கருந்துளைகள் அபரிமிதமான பெரும் ஈர்ப்புப் புலத்தினைக் கொண்டிருக்கின்றனவே, அருகில் உள்ள எதனையும் தம்முள் இழுத்து, ஒருமத்துடன் சேர்த்துக் கொள்கின்றனவே. அப்படியாயின் விண்வெளியைப் பொறுத்தவரையில் அவை மிகவும் ஆபத்தானவையாக இருக்குமோ? என்ற கேள்வி எழுவதற்கு இடமுண்டு. அதனை அடுத்த பகுதியிற் பார்ப்போம்.

கடந்த வருடத்தில் பலர் என்னுடன் தொடர்பு கொண்டு பேரண்டம் தொடர் பற்றிய கருத்துக்களைக் கூறியிருந்தீர்கள். குறிப்பாகப் 'பேரண்டக்கதை' பலரையும் கவர்ந்திருந்ததை அறியக் கூடியதாக இருந்தது. என்னைத் தட்டிக் கொடுத்து, நெறிப்படுத்தி, உற்சாகப்படுத்திய அத்தனை உறவுகளுக்கும் நன்றி. கருத்துத் தொடர்பாடல்களுக்கு 416 261 1348ல் என்னைச் சந்திக்கலாம்.

விளம்பரம் வாசகர்களுக்கு 'பொங்கல் வாழ்த்துக்கள்' தனை முன்னதாவே கூறிக் கொள்வதில் விளம்பரம் நிர்வாகத்தினருடன் சேர்ந்து, தன் குடும்பத்தினருடன் மகிழ்வுறுகின்றான், கனி.



**- கனி -**

# அழகு

அழகு என்பதற்குப் பலவிதமான வரைவிலக்கணங்கள் கொடுக்கப்படுகின்றன. அழகு என்பது ஒரு மனிதன், விலங்கு, இடம், பொருள் அல்லது எண்ணம் என்பனவற்றின் பண்புசார்ந்தது எனப்பொதுவாகக் கொள்ளப்படு கின்றது. அனுபவரீதியாகக் கிடைக்கும் இங்கிதம், அதன் பயன்மிக்க கருத்து, மனதில் ஏற்படும் திருப்தி என்பனவற்றை மேற்குறிப்பிட்ட வற்றினூடாகக் கிடைப்பதனைக் குறிப்பிடலாம். அழகு என்பது அழகியல், சமூகவியல், சமூக உளவியல், கலாச்சாரம் சார்ந்த ஒரு படிப்பினையாக அமைகின்றது எனக்கொள்ளப்படு கின்றது. அழகு என்பதற்கு உடன்பாடு என்னும் பொருளும் கொள்ளப்படு கின்றது. எதிலும் முரண்படாதிருத்தலும் அழகே. முற்றவர்களைக் கவரும் தன்மை பெற்றிருப்பதும் அழகே. அழகுக்கலை இன்று பல்வேறு பொருள்களில் கையாளப்படுகின்றது.

உலகில் அனைவருமே அழகை ரசிக்கின்றார்கள், விரும்புகின்றார்கள், அழகாக இருக்கவும் விரும்புகின்றார்கள். அழகு என்பது எதாவது ஒன்றோடு சேர்ந்துபோவதாக அமைகின்றது. பொருள், மனிதன், விலங்கு, இயற்கை இவ்விதமாக ஏதாவது ஒன்றோடு இணைந்ததாகவே அது காணப்படுகின்றது.

எத்தனை கோடி இன்பம் வைத்தாய் - எங்கள்
இறைவா! இறைவா! இறைவா!

சித்தினை அசித்துடன் இணைத்தாய் - அங்கு
சேரும்ஐம் பூதத்து
வியனுல கமைத்தாய்
அத்தனை யுலகமும் வர்ணக் களஞ்சிய
மாகப் பலபல நல் லழகுகள் சமைத்தய்.

என்று மகாகவி பாரதியார் உலகின் அழகனை எங்கெங்கெல்லாம் காணமுடியுமோ அங்கங்கெல்லாம் காணுகின்றார். மனிதரில் மட்டுமல்ல, நடமாடும் விலங்குகளில் மட்டுமல்ல மரம், செடி, கொடி, நதி, மலை, மழை, இடி, மின்னல் அனைத்திலும் அழகொளிர்வதை நினைந்து நினைந்து மெய்யுருகி நின்றார். அவ்வளவிற்கு இரசனை உள்ளம் கொண்டவர் பாரதியார்.

பெண்களின் அழகினை தனித்துவமானதாகவும் ஒட்டுமொத்தமானதாகவும் பார்க்கின்றார்கள். கண்ணழகு, இதழ் அழகு, நடையழகு, இடையழகு, கூந்தல் அழகு, உடையழகு எனப் பற்பல வகையாகப் பிரித்தும் பார்க்கப்படுகின்றது. அழகு என்பதற்கான வரையறை என்ன என்பது யாராலும் திட்டவட்டமாகக் கூறப்படவில்லை. அழகு என்னும் சொல் பல்வேறு கருத்துக்களை உள்ளடக்கியதாக அமைகின்றது. 'காக்கைச் சிறகினிலே நந்தன் லாலா உந்தன் கரிய நிறம் தோன்றுதையா' என்று பாடிய பாரதி கருமைநிறைந்த காகத்தில்கூட அழகைக் காண்கின்றான். மனிதப்பிறவியில் அழகு என்னும் பதம் பெண்களுக்கே உரியதாகக் கொள்ளப்படும் அதேவேளை ஆண்களுக்கு ஆண்மைதான் அழகாகக் கொள்ளப்படுகின்றது. அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களையும் பெண்களின் அணிகலன் களாகக் கொள்கின்றார்கள். பெண்மைக்கு அழகுதருவதாகக் குறிப்பிடும் அதேவேளை மனித குலத்திற்கு அழகு தருவது கல்விதான் என்னும் கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.



**- த. சிவபாலு-**

பொதுவாக நாம் அழகைப் பற்றிப் பேசும்போது பெண்கள்தான் மனக்கண்முன்னே வருவார்கள். பெண்களின் அழகு அலாதியானது. பெண்களின் அழகு எங்கு காணப்படுகின்றது என்னும் கேள்விக்கு விடைகாணப் பலர் முயற்சித்துள்ளனர். இதற்காகப் பல ஆய்வுகளையே மேற்கொண்டுள்ளனர். அண்மை யில் ஐக்கிய அமெரிக்காவிலும் கனடாவிலும் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின்படி பெண்களுக்குக் கண்கள் மட்டுந்தான் அழகைத் தருவதல்ல அல்லது அவர்களது உதடுகளோ அன்றி நெற்றியோ அன்றி இமைப் புருவங்களோ, கூந்தலோ அல்ல இவை அனைத்தும் அமைந்துள்ள விகிதாசாரப் பொருத்தப்பாடே அழகைத்தருகின்றது என்னும் முடிவுக்குப் பல பெண்களின் பலவிதமான புகைப்படங்களைப் பலரிடம் கொடுத்துக் கருத்துக்கணிப்பை மேற்கொண்டார்கள். சரியான முகத்தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒரே ஆளின் வெவ்வேறு விதமான புகைப்படங்களைக் கொடுத்து எது அழகானது என வினவப்பட்டபோது அங்கு கண்களுக்கும், உதடுகளுக்கும். காதுகளுக்கும் மூக்குக்கும், கூந்தலுக்கும் இடையேஉள்ள அளவுகளை ஒப்பிட்டுப்பார்த்து அவை சமச்சீரோடு இருப்பதே அழகானது எனக்கண்டறியப்பட்டது. இது முகவமைப்பிற்கும் அழகுக்கும் உள்ள தொடர்பை எடுத்தக்காட்டுவதாக உள்ளது.

# "January மாசம், எப்படித்தான் சமாளிக்கப்போறோமோ...?"

Hyderabad இல் நடந்த 16 ஆவது International Children's Film Festival இல் சிறந்த இயக்குனர் விருதைப் பெற்று வந்திருக்கிறார் "பசங்க" பாண்டிராஜ். (எல்லோரும் எழுந்து நின்று கைத்தட்டி இருந்தால் அன்புக்கரசு I.A.S சந்தோஷப்பட்டிருப்பான்!)

பசங்க படம் பெற்றோருக்கு ஒரு இன்ப அதிர்ச்சி! படத்தில், அப்பா தொலைந்து போன மகனைத் தேடி தவறான "spot" க்குள் நுழைந்து விட, அங்கே "நமீ" Club dance ஆடிக் கொண்டிருப்பதாக காட்சிகள் ஒன்றும் இல்லை. (அதற்காக அப்பாக்கள் கவலை அடைந்தார்களா என்பது வேறு topic!)

சிறுவர்களின் உலகம் (பெற்றோர் மறந்து போன..) இவ்வளவு அழகானதா... விசித்திரமானதா.. சிக்கலானதா... என்று சிந்திக்க வைத்தது! (பசங்க என்னம்மா "என்ஜாய்" பண்ணுறாங்க, நம்ம லைப் தான் இப்பூடிப் போச்சே ...என்று ஆங்காங்கே பெரியவர்கள் அழுதும் இருக்கலாம்!)

பிள்ளைகளுக்கு உணவு, உடை, உறையுள், இவை தான் எங்கள் கடமை, என்று வட்டம் போட்டுக் கொள்ளும் பெற்றோரை முகத்தில் அறைகிறது. ("அப்பா, நான் ஓடும் போது c'mon, c'mon என்று கைதட்டி எல்லாரும் encourage பண்ணுங்கப்பா", என்று அன்பு ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொள்ள முன்னே வந்து குடும்பத்தினரைக் கேட்பதும், "பாரு, பையன ஓடச் சொன்னா குடும்பமே ஓடுது", என்று ஆசிரியர் கூறுவதுமாக அமையும் காட்சிகள், பெற்றோருக்குச் சொல்லும் சேதிகள் எக்கச்சக்கம்!!)

திரைப்படத்தில் வரும் இன்னுமொரு அருமையான காட்சி, ஆசிரியரான சொக்கன், 2nd Rank வாங்கியதற்காக (அதாவது மகன், தன் விருப்பத்தை பூர்த்தி செய்து விட்டதற்காக) மகன் ஜீவாவுக்கு நன்றி சொல்வது! பெற்றோர்கள் எப்போதுமே பிள்ளைகள் தமக்கு நன்றிக் கடன் பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று சொல்லும் நடைமுறையில் இருந்து வேறுபட்டு, பெற்றோருக்கும், வளரும் பிள்ளைகளுக்கு நன்றி சொல்ல வேண்டிய கடமை இருக்கிறது என்று மென்மையாகச் சொல்லப்பட்டிருந்தது.




குழந்தைகளாக இருந்த நாம் தான் இப்போது பெரியவர்கள் ஆகி இருக்கிறோம்! (ஆஹா, என்ன கண்டுபிடிப்பு!), ஆனால் அந்தக் குதூகல உலகத்தை எங்கு தொலைத்தோம்?

அண்மையில் ஆனந்தவிகடன் (4.11.09) இதழில் வெளியான கவிதை, நெஞ்சை ஏதோ செய்தது!

நிலா கேட்கும் குழந்தை - தி. அய்யப்பன்

இரண்டு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள்
ஒரு குழந்தையின் கையில் நட்சத்திரங்கள்
இன்னொரு குழந்தையின் கையில் வெண்ணிலாக்கள்
நட்சத்திரங்கள் வைத்திருந்த குழந்தை நிலா வைக் கேட்டது.
"ஒரு நிலாவுக்கு ஐந்து நட்சத்திரங்களைக் கொடு"
என்று கேட்டு பரிமாற்றம் செய்து கொண்டார்கள்.
பார்த்துக்கொண்டிருந்த எனக்கும் ஆசை வந்து கேட்டேன்.
"சூரியனைக் கொடுத்தால் நிலாவையும் நட்சத்திரத்தையும் தருகிறோம்"
என்றார்கள். என் கைகளைப் பார்த்தேன் அதில் சூரியன் இல்லை.
சிறு வயதில் வைத்திருந்ததாய் ஞாபகம்
பெரியவனானதும் தொலைத்துவிட்டேன்.

உண்மை தான் பெரியவர்களான நாம் நிறைய விடயங்களைத் தொலைத்துத்தான் விட்டோம்!

"எனக்கே, எனக்கா" என்று சிறுவர்கள், படம் பற்றி பெருமிதம் கொள்ளலாம், அவ்வளவு cool படம்! அவர்களின் கனவுகள், ஏக்கங்கள், உணர்வுகள் எல்லாம் "பக்கடாவாக" (Sorry!) பக்காவாகத் திரையில் வந்திருந்தது!

என்ன நண்பனா ஏத்துக்க, என்ன நண்பனா ஏத்துக்கன்னு வந்து கெஞ்சுவே பாரு..
நடக்கவே நடக்காதுடா..
என்ன bet ?..
50 India stamps....

படத்தின் முக்கிய பாத்திரங்கள் ஜீவாவுக்கும், அன்புக்கும் நடக்கும் "fight" உரையாடல் இது. ஆனால் PS2, Nitando என்று வளரும் நம் குழந்தைகள் இந்தப் படத்தை எவ்வளவு enjoy பண்ணினார்கள் என்பது கேள்விகுறி தான்.

சுற்றிவர நண்பர்கள், பாசமான குடும்பம் என்று வாழத்தான் இளையவர்கள் விரும்புகிறார்கள். சின்னச் சின்னச் ஆசைகளை மனசிலே சுமந்து திரியும் அவர்கள், குடும்பம் என்ற வேரை நம்பித் தான் வாழ்கிறார்கள். பெற்றோர்களின் பிரச்சனைகள், பிள்ளைகளைப் பாதிக்கும் என்று "பசங்க" படம் பார்த்துத் தான், பெரியவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லைத்தான். ஆனாலும் "வளர்ந்த" பெற்றோர்கள், "சின்னப்" பசங்க மாதிரித் தான், நாங்க நடந்து கொள்வோம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு நின்றால் குழந்தைகள் என்னதான் செய்வார்கள்?

தான் 10 ஆம் வகுப்புப் பொதுப் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்த போது வீட்டில் நடந்த வாய் தகராறுகள் எப்படித் தன் கல்வியைப் பாதித்தது, என்று எனது நண்பன் ஒரு முறை கூறி இருக்கிறான். "அட பையனுக்குப் பரீட்சை என்று நினைத்து ஒருவர் கூட விட்டுக்கொடுக்க முன்வரவில்லை, ஏன் இவர்கள் எல்லாம் பிள்ளை பெற்றுக் கொள்கிறார்கள்", என்று அவன் கேட்டது, கொஞ்சம் "பச்சை" மிளகாய்க்காரம் தான்!
"குழந்தை பெற்றுக் கொள்ளுவதில" பெற்றோர் காட்டும் ஆர்வம்(!?), அவர்களை வளர்ப்பதில், அன்பு காட்டுவதில் இல்லையா?
இந்தக் கேள்விக்குப் பல சமயங்களில் பதில், குழந்தைகளிடம் தான் இருக்கிறது!

ஜாலியான "பசங்க" படம் பற்றிய கட்டுரை, கொஞ்சம் "சீரியஸ்" ஆகத்தான் போய்விட்டது.! ஆனாலும், January மாதத்தை காலெண்டரில் பார்த்து விட்டு "January 1st லீவு, அப்புறம் Weekends லீவு அவ்வளவுதான், plus Winter - கொடுமை வேற, January மாசம் ரொம்ப மோசம், எப்பிடித்தான் சமாளிக்கப்போறோமோ?" என்று "பக்கடா" ஸ்டைலில் சொல்லிக்கொண்டு இறங்கும் போது ஒரு சிரிப்பு வரத்தான் செய்கிறது! நன்றி பசங்களா!

# எதிர்காலம்...

20ஆம் பக்கத்தொடர்ச்சி

ராஜ்கமல் ஃபிலிம்ஸ்ல எந்தப் படம் ஷூட் பண்ணினாலும் நான் அங்க போயிடுவேன். அப்போ கமல் 'விக்ரம்' படத்துல நடிச்சிக்கிட்டு இருந்தார். அப்போதான் எனக்கு சத்யராஜோட அறிமுகம் கிடைச்சுது. ராஜ்கமல் ஃபிலிம்ஸ் சார்பா 'கடமை கண்ணியம் கட்டுப்பாடு' படம் எடுக்க முடிவாச்சு. நான் அந்தப் படத்தை தனியா டைரக்ட் பண்ணினேன். அதுக்கப்புறம் சிவாஜி சாரை வச்சு, 'என் தமிழ் என் மக்கள்' பண்ணினேன். அது அவர் புதுசா கட்சி ஆரம்பிச்சிருந்த நேரம். அதுக்கப்புறம் பிரபு நடித்த 'பூவிழிராஜா', 'சின்ன மாப்பிள்ளை', 'வியட்னாம் காலனி', கமலின் 'குணா', 'மகாநதி', கலைஞர் கருணாநிதி கதை வசனத்துல 'காவலுக்கு கெட்டிக்காரன்', 'எங்கிருந்தோ வந்தான்' எல்லாம் எடுத்தேன்.

உங்க காலக்கட்டத்து இயக்குநர்கள் நிறைய பேர் இப்போ படம் எதுவும் பண்ணாம சும்மா இருக்காங்க. இயக்கத்துக்கும் வயசுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கா?

இதுக்கெல்லாம் சர்வைவல்தான் காரணம். வயசு காரணம் இல்ல. ஹாலிவுட்ல 60 வயசுக்கு மேல இருக்குற டைரக்டர்கள் எல்லாம் இன்னும் படம் பண்ணிக்கிட்டுதான் இருக்காங்க. இப்போ தமிழ் சினிமாவுல புதுசு புதுசா நிறைய பேர் வர்றாங்க. காலம் மாறிக்கிட்டு இருக்கு. நான் நடிச்சாலும் சினிமாவுலதானே இருக்கேன். வேற வேலைக்குப் போயிடலையே!



சினிமாவுல ட்ரெண்டுன்னு ஏதாவது இருக்கா?

நிச்சயமா இருக்கு. ஆரம்ப காலத்துல ஒரு படத்துல முப்பது, நாப்பது பாட்டு இருந்தாத்தான் படம் ஓடும். அப்புறம் வசனத்துக்காகவே சில படங்கள் ஓடுற காலம் வந்துச்சு. அப்புறம் கலோக்கியலா பேசுற வசனங்கள் இருக்குற படங்கள் நிறைய வர ஆரம்பிச்சுது. எங்க டைரக்டர் காதலுக்கு புது பரிமாணத்தைக் குடுத்தார். இடை இடையில கமர்ஷியல் படங்கள் வந்துக்கிட்டு இருந்தாலும் 'உதிரிப்பூக்கள்', 'பதினாறு வயதினிலே' மாதிரி நல்ல படங்கள் வந்து தமிழ் சினிமாவின் முகத்தை மாத்த ஆரம்பிச்சுது. இப்போ 'சுப்ரமணியபுரம்', 'நாடோடிகள்', 'பருத்திவீரன்', அப்புறம் சேரனோட எல்லா படங்களுமே நல்ல படங்கள். புது டிரெண்ட் இப்பிடி மாறிக்கிட்டே இருக்கு.

எதிர்கால தமிழ்சினிமா எப்படி இருக்கும்?
ரொம்ப நல்லா இருக்கும். தொழில்நுட்பரீதியாக இப்போவே நல்ல வளர்ச்சி இருக்கு. அதோட நல்ல கதை அம்சம் சேர்ந்த இன்னும் நல்லா இருக்கும்.






*மீண்டும் ஒரு புதுவருடம் - 2010*

# கனவுகள்

கனவுகள், கற்பனைகள், சோகங்கள், சோதனைகள். சாதனைகள்.

சோதனைகள் சாதனைகள் ஆவதும், சாதனைகள் சோதனைக்கு ஆளாவதும் நித்தியம், நிரந்தரம். மாறும் உலகில் மாறாது இருப்பது 'மாற்றம்' மட்டுமே. மாற்றங்களுக்கு நடுவிலும் கனவு காண்பது மனித இயல்பு. யாருக்குத் தான் கனவுகள் இல்லை? துறவிக்கும் கனவுகள் உண்டு. 'வாழ்க வையகம்' என்று வாழ்த்துவதும் ஒருவகை கனவு தானே! வையகத்தில் தான் எத்தனை எத்தனை. சண்டைகள், சச்சரவுகள், போட்டிகள், பொ-றாமைகள். வாழ்நாள் அளவிடற்குரியது. ஆனால் அதற்குள் இத்தனையும் வந்து போய் விடுகின்றது.

இந்த வாழ்க்கைத் தடைகளுக்கு அப்பால் உயர்பவர் எத்தனை பேர்? உயர நினைப்பவர் எத்தனை பேர்? அதுதான் வாழ்வின் இலட்சிமோ? இருக்கலாம் வாழ்வின் குறிக்கோள் வாழ நினைப்பது, தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைப்பது. வாழ்க்கைக்குத் தேவையானவை பல. பட்டியல் இட முயன்றால் பட்டியல் நீண்டு கொண்டே போகும். முடிவு வர, முடிவைக் கொண்டு வர சிரமப்பட வேண்டும்.

தேர்ந்த ஞானியான திருவள்ளுவர் என்ன சொல்கிறார்? சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பெருமகன் அவர். இவ்வுலகில் வாழ 'பொருள்' தேவை. மறு உலகில் வாழ 'அருள்' தேவை. அருளைத் தேட தனியொரு காலம் உங்களுக்கு இல்லை. பொருளைத் தேடும் காலத்தே தான் அருளையும் தேட வேண்டும்.

அருளைத் தேட முற்படும் போது உங்களையறியாமல் நீங்கள் நல்லொழுக்கங்களின்பால் ஈர்க்கப்படுகின்றீர்கள். ஒழுங்கு, கட்டுப்பாடு என்பவைகள் இயல்பாகவே வருகின்றன. நிர்ப்பந்தம் இல்லை. அச்சுறுத்தல் இல்லை. விரும்பி நீங்கள் மேற்கொள்கின்றீர்கள். பொருளைத் தேடுதல் வாழ்வின் ஒரு அங்கம், எப்படித் தேடுகிறீர்கள் என்பது தான் முக்கியம். எவ்வளவு தேடினீர்கள் என்பது தான் முக்கியம் அல்ல. உழைப்புக்கு ஏற்ற ஊதியம் அடுத்தவர் கண்ணீரில் வராத காசு உங்களை வாழ்விக்கும், உங்கள் வம்சத்தையும் வாழ்விக்கும் அருளையும் தரும். பொருளோடு இணைந்த அருளும், அருளோடு இணைந்த பொருளும். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையுமே பெற்றுத்தர வல்லது.

பொருள் ஈட்டவும், அருள் பெறவும், கனவுகள் தேவை. கனவுகள், அற்புதமான கனவுகள். யாருக்குத் தான் இல்லை?
கனவில்லா வாழ்வு அர்த்தமற்றது.
கனவில்லாமல் வெற்றி பெற்றவர் யாருமில்லை.
வெற்றி பெற்றவர்களிடம் எல்லாம் நிச்சயம் கனவு இருந்திருக்கின்றது.
சாதாரண மனிதன் கனவு என்பதையே இன்றைக்கு வணிக ரீதியில் பேசும்போது குறியீடு இலக்கு (Goal) என்கிறார்கள். அதுவே வியாபாரத்திட்டமிடல் (Business Plan), தொலைநோக்குப் பார்வை (Vision) என்று விரிகின்றது.

வணிகத்துக்கு மட்டுமல்ல நித்திய வாழ்வுக்கும் இலக்கு (Goal) இருக்க வேண்டும். திட்டமிட்டுப் பணத்தைக் கையாள வேண்டும். (Personal Financial Planing). வாழ்வின் தொலைநோக்கம் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். அல்லது தெரிந்து கொள்ளவாவது குறைந்த பட்சம் முயற்சி செய்ய வேண்டும்.

எனவே கனவு காணுங்கள்.
கனவு, தொலைநோக்குப் பார்வை.....
இவை வெற்றிக்கான அடிப்படைகளில் முக்கியமானவை. கனவும், தொலைநோக்குப் பார்வையும் இல்லையேல் தனிமனிதர்கள் மட்டுமல்ல, பெரும் நிறுவனங்களும் நாடுகளும் கூட தோல்வியையே தழுவுகின்றன.

எனவே கனவு காணுங்கள்.
உங்கள் கனவு எதைப் பற்றி வேண்டுமானாலும் இருக்கலாம். அது எதுவாயினும் கடைசியில் வள்ளுவர் சொன்னதைப் போல இரண்டில் ஒன்றில் தான் முடியும்.
'அருள்' அல்லது 'பொருள்'
அழகான வீடு
அருமையான வாழ்க்கைத் துணை.
குணமான குழந்தைகள்
திருப்தியான வேலை
சொகுசான வாகனம்
கைகொடுக்கும் நண்பர்கள்
பாலம் அமைக்கும் உறவுகள்
பகை இல்லாத சமுதாயம்
மகிழ்வான ஓய்வு காலம் - என்று
கனவு எதைப் பற்றி வேண்டுமானாலும் இருக்கலாம். அல்லது எல்லாவற்றைப் பற்றியும் இருக்கலாம்.

**- துறவி -**

இந்த எல்லாக் கனவுகளின் பின்னணியில் 'பொருளோ', 'அருளோ' இருப்பதை நீங்கள் காணலாம்.

நண்பர் ஒருவர் செல்வமெட்டும் எய்தி நின்னாற் செம்மேயேறி வாழ்வேன் என்ற பாரதியின் பாட்டைக் குறிப்பிட்டு மணமக்களை வாழ்த்தும் போது எழிலுறு செல்வம் எட்டும் பெற்று வாழ்வாங்கு வாழ்வீராக என்று வாழ்த்தினார். அவர் கூற்றின்படி பின்வருவனவே எழிலுறு செல்வம் எட்டு ஆகும்.
1. அரசு, 2. மக்கள், 3. சுற்றம், 4. பொன், 5. மணி, 6. நெல், 7. வாகனம், 8. வேலையாட்கள்.

மேலும் 'பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்வீராக!' என்று வாழ்த்துவதே பெரும்பான்மையோருக்குத் தெரிந்த வாழ்த்து. இங்கு குறிப்பிடப்படும் பதினாறு செல்வங்கள் எனக்குத் தெரிந்த அளவில் இவையே.

1. கல்வி, 2. வயது, 3. நட்பு, 4. வளமை, 5. இளமை, 6. (ஆரோக்கியமான) உடல், 7. (சலியா) மனம், 8. வாழ்க்கைத்துணை. 9. பொறுமை, விடாமுயற்சி, 10. புகழ், 11. உண்மை(யையே பேசுதலும், வாழ்தலும்) 12. கொடை அல்லது தானம். 13. நிதி அல்லது பணம். 14. நிர்வாகம் அல்லது நிர்வகிக்கும் பொறுப்பு. 15. (உயர்வான) வாழ்க்கை. அல்லது உயிரோட்டம். 16. அன்பு அல்லது காதல் (அன்பே சிவம்)

மாறுபட்ட விவரங்களும், கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன. அவ்வாறு தரப்படும் கருத்துக்கள், சிலசமயங்களில் அடுத்து வரும் கட்டுரையிலும் இடம்பெறலாம். இந்த பதினாறு செல்வங்களின் பின்னணியில் இருப்பது எது?

### அருள் அல்லது பொருள் தானே!

இன்றைய நடைமுறை வாழ்க்கையில் பொருள் இல்லை என்றால் எத்தனை பேர் இல்லாதவனை நெருங்குவர். இல்லானை பொருள் இல்லானை இல்லாளும் அதாவது மனைவியும் வேண்டாள். ஈன்றெடுத்த தாயும் வேண்டாள் என்று தமிழில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சொல்லப்பட்ட செய்திகள் இன்றைக்கும் மிகப் பொருந்துவன அல்லவா?

அருளும், பொருளும் நிறைந்த வாழ்வு, தாமரையிலைத் தண்ணீர் போன்றது. தாமரை இலையும், தண்ணீரும் ஒன்றோடு ஒன்று இணைந்திருக்கும். ஆனால் ஒன்றோடு மற்றொன்று ஒட்டுவதில்லை. அருளாளர்கள் பொருளைப் பெறும் போது தங்களைச் சமுதாயத்தின் டிரஸ்டியாகவே கருதி அப்பொருளில் அழுந்தி விடாமல், தங்கள் தேவைக்கு ஏற்ப சொற்பமானதை மட்டும் பயன்படுத்தி கொண்டு மற்றதைச் சமுதாயத்துக்கே பயன்படச்செய்து விடுகிறார்கள்.

ஆயினும் இந்தப் புதிய கட்டுரைத் தொடர் பொருள் பற்றியதே. ஆனாலும் பொருளைச் சம்பாதிக்கும் அருளைச் சம்பாதிக்கும் வழிவகைகளையும் ஆங்காங்கே ஆராயும்.

மாதநடுவில் வரும் அடுத்த விளம்பரத்தில் மீண்டும் சந்திப்போம். இதற்கிடையில் உங்கள் கனவுகளையும், கருத்துக்களையும் என்னுடன் பரிமாறிக் கொள்ள மின் அஞ்சல் முகவரி
vlambaram@sympatico.ca

# 2010 உங்களுக்கு...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆணுக்கான இலக்கணம் என்பதையே இந்த வருடம் மீண்டும் ஒருமுறை விளக்க விரும்புகின்றது. ஆண்களில் பலர் ஆதிக்க குணமுடையவர்களாக இருப்பது அவர்களது அறியாமை என அறியாமல் இனியும் இருத்த லாகாது என இந்தவருடம் எதிர்பார்க்கின்றது. ஆளுமைத்திறன் அற்றவர்களே மற்றவர்களை அடக்கி ஆளும் ஆதிக்ககுணம் உள்ளவர்களாக மாறிவிடுகிறார்கள் என மிகவும் மென்மையாகச் சொல்லி நிற்கின்றது. பிறப்பில் இருந்தே ஒரு ஆண் ஆளுமைக்கான மனோபாவங்களின் உள்வீடுகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இதற்குப் பெற்றோர்களும், ஆசிரியர்களும், நெருங்கிய உறவினர்களும், நண்பர்களும் முக்கியமான பங்களிப்பைச் செய்தல் வேண்டும். இவ்வாறு பங்களிப்பு செய்பவர்களுக்கு 'பானையில் இருந்தால்தானே அகப்பையில் வரும்' என்பதையும் நினைவுபடுத்த விரும்புகின்றது. எனவே பானையை முதலில் நிரப்புங்கள்.

## பெண்களுக்கு

பெண்களே நீங்கள் யார் என்பதை சரியாகப் புரிந்து கொள்வீர்கள் என இந்தவருடம் மிகவும் நேர்த்தியாக எதிர்பார்க்கின்றது. ஆணாதிக்கம், பெண்ணடிமைத்தனம் என்பதெல்லாம் எதனால் என்பதைப் புரிந்து கொள்ளமுடியாமல் தடுமாற்றம் அடைவதை நிறுத்துமாறு இந்த வருடம் வேண்டிநிற்கின்றது. உலக இயக்கத்திற்காக உடலியல், உளவியல் ரீதியில் வகைப்படுத்தப்பட்ட இருபிரிவுகள்தான் ஆணும் பெண்ணும். ஒன்று இல்லாமல் இன்னொன்று இல்லை. எனவே இந்த இருபிரிவினரும் எந்தவிதத்திலும் ஏற்றத்தாழ்வானவர்கள் அல்ல. என்மீது ஒருவர் ஆதிக்கம் செலுத்துகின்றார் என்பதும் என்னை ஒருவர் அடிமைப்படுத்து கின்றார் என்பதும் தாழ்வு மனப்பான்மையின் வெளிப்பாடே. ஆணின் ஆளுமைக்கான ஆணிவேர் நீங்கள் அல்லவா! அந்த ஆளுமைக்குச் சிறப்புக் கொடுத்து உங்களையும் மற்றவர்களையும் பெருமைப்படுத்தக்கூடிய இயற்கையின் கொடுப்பனவுகள் அனைத்துக்கும் சொந்தக்காரர்கள் தான் நீங்கள் என்பதை அறிந்து கொள்வது மட்டுமல்ல புரிந்து கொள்ளவேண்டும் என்பதையும் இந்த வருடம் எதிர்பார்க்கின்றது.

## மாணவர்களுக்கு

அடிப்படையில் இந்தவருடமானது கல்வி என்றால் என்ன என்பதை மாணவன் எனப்படும் ஒவ்வொருவருவரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என வேண்டி நிற்கின்றது. ஒரு மாணவனின் செயற்பாடுகள் அனைத்தும் கல்வி சார்ந்ததாகவும் அதன் பெறுபேறுகள் நிறைவேற்றுத் திறனை எதிர்பார்ப்பதாகவும் இருப்பதனால் இந்த வருடமானது இரண்டு சமன்பாடுகளை முன்வைத்து அதைப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் இந்த சமன்பாடுகளைப் புரிந்து நடைமுறைப்படுத்தும் மாணவர்கள் நிச்சயம் மன்னவர்களாவார்கள் எனவும் உறுதி கூறுகின்றது.

கல்வி = அறிவுத்திறன் + பண்புடைமை
Education = Intelligence + Character

நிறைவேற்றுத்திறன் = அறிவு X நம்பிக்கை X செயல்
**Performance = Knowledge X Believe X Action**

மேற்குறிப்பிட்ட கல்விக்கான சமன்பாட்டில் (+) கூட்டல் அடையாளம் உள்ளது. அதாவது ஒன்று இல்லாவிட்டாலும் மற்றையது இருக்கும். ஆனால் இரண்டாவது சமன்பாட்டில் (X) பெருக்கல் அடையாளம் உள்ளது. அதாவது இவற்றுள் ஏதாவது ஒன்று இல்லாவிடின் முடிவு பூச்சியம் தான்.

இந்த வருடம் மாணவர்களுக்கு ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்லி நிற்கின்றது. கல்வி என்னும் சமன்பாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள இரண்டு விடயங்களையும் தன்னகத்தே கொள்ளும் மாணவர்களுக்கு இரண்டாவது சமன்பாடு இயல்பாகவே முழுமைப்படுத்தப்படும் என்பதாகும்.

## தனிப்பட்ட முறையில் உங்களுக்கு

ஆண்டாண்டு காலமாகக் கூறிவருகின்ற அதே விடயத்தைத்தான் இந்த வருடமும் கூறுகின்றது. அதாவது நாம் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள் என்பதே. நம்மைவிட மற்றவர்கள் உயர்ந்தவர்களுமல்ல, தாழ்ந்தவர்களுமல்ல. கிளியைப் பார்த்து ஒருவர் காகம் என்று கூறினால் அவருக்குக் கிளியையும் தெரியாது காகத்தையும் தெரியாது என்பது போல் ஒருவர் மற்றவரை விட உயர்ந்தவர் அல்லது தாழ்ந்தவர் என்பது அவர் தன்னையும் அறியவில்லை, மற்றவரையும் அறிய முடியவில்லை என்பதே. உங்களை நீங்கள் அறிந்து கொண்டு அதை ஊருக்கும் சொன்னால் உத்தமராக முடியும் என இந்த வருடம் உறுதி கூறுகின்றது. இந்த இலக்கை நோக்கி நாம் ஒரு அடி வைத்தால் இந்த வருடமானது எம்மை நோக்கிப் பத்து அடி முன் வைப்பதற்கு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது.

*ஆம் வாசகர்களே!*
*இந்த வருடம் நமது கையில். பயனடைவோம்.*

# வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர் அனைவருக்கும் உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்




தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது

**நிரு பிராண்ட் தயாரிப்புக்களே.**

# தளுக்கு

யாழ்ப்பாணத்தில் ஒரு கிராமத்தில் மூன்று சிநேகிதிகள் இருந்தார்கள். மூன்று உடலும், ஓர் உயிரும் என்று சொல்லலாம். ஒன்றாகவே சைக்கிளில் பள்ளிக்கூடம் போனார்கள். ஒன்றாகவே படித்தார்கள். ஒன்றாகவே விளையாடினார்கள். ஒன்றாகவே ரகஸ்யம் பேசினார்கள். ஒரு கரண்ட் வயரில் வேலை செய்யும் மூன்று பல்புகள் போல அவர்கள் இருந்தார்கள்.

பேன் பார்ப்பதில் கூட ஒரு புதுமை செய்தார்கள். முக்கோண வடிவில் உட்கார்ந்து கொண்டு ஒருவர் தலையை ஒருவர் பார்த்தார்கள். அவர்களுடைய கூரிய கண்களில் இருந்தும், பரபரப்பான விரல்களில் இருந்தும் பேன் என்ற உயிர்ப்பிராணி தப்பவே முடியாது.

காரியம் இப்படிப் போய்க் கொண்டிருக்கும்போது இவர்களில் ஒருத்திக்கு அதிர்ஷ்டம் அடித்தது. அந்த அதிர்ஷ்டக்காரி யின் பெயர் பத்மலோசனி. அதிர்ஷ்டம் அடிக்காத மற்ற இருவருக்கும்கூட பெயர்கள் இருந்தன. அவை இங்கே தேவையில்லை.

அதிர்ஷ்டக்கார பத்மலோசனியின் மாமா கனடாவில் இருந்தார். பணக்காரர் என்றால் மொத்தமான பணக்காரர். அவருடைய மகள்தான் மைதிலி. பத்மலோசனியின் வயதுதான் அவளுக்கும். பதினாறு முடிந்து சில நாட்கள் ஆகியிருந்தன. மைதிலி தகப்பனிடம் தன் சிறுவயது தோழியை பார்க்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறாள். ஒரே மகள். அவள் கேட்டதை தட்டமுடியுமா? பத்மலோசனிக்கு டிக்கட்டும், விசா எடுப்பதற்கு அவர் கம்பனி தலைப்பு போட்ட பேப்பரில் உத்திரவாதம் கொடுத்து இங்கிலீஸில் டைப் அடிக்கப்பட்ட ஒரு கடிதமும், கறுப்பு கழுத்து வாத்துகள் படம் போட்ட இருபது டொலர் தாள்கள் பத்தும் அவள் மாமா அனுப்பியிருந்தார்.

அந்தக் கிராமத்தவர்களுக்கு இது அதிசயத்திலும் அதிசயம். எப்படி பாஸ்போர்ட் எடுப்பது, எப்படி விசா எடுப்பது, எப்படி பிளேன் ஏறுவது என்று குழம்பிப்போய் விட்டார்கள்.

காரணம் இதுதான். கள்ள பாஸ்போர்ட் எடுப்பது எப்படி என்று அவர்களுக்குத் தெரியும். எந்த ஏஜண்டைப் பிடித்தால் எந்த பாதை திறக்கலாம் என்பதும் தெரியும். எந்த எந்த விசா குத்தவேண்டும், எந்த எந்த விசா குத்தக்கூடாது என்பதும் தெரியும். ஆனால் உண்மையான பாஸ்போர்ட்டில், உண்மையான விசா குத்தி உண்மையான டிக்கட்டில் பயணம் செய்வது பற்றி அவர்கள் ஒருவருக்கும் ஒன்றுமே தெரிய வில்லை.

கடைசியில் ஒரு வழியாக பயண ஏற்பாடுகள் செய்து முடிக்கப்பட்டன. ஒரு புளியமரத்தின் கீழ் பத்மலோசனியும், அதிர்ஷ்ட மில்லாத மற்ற இரண்டு சிநேகிதிகளும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள், ஒருவர் விரலை ஒருவர் பிடித்தபடி. இதுவே முதல் தடவை அவர்கள் பிரியப்போவது. கொஞ்சம் பொறாமைப்பட்டார்கள். கொஞ்சம் மூக்கைச் சிந்தினார்கள். கொஞ்சம் அழுதார்கள்.

'எடி, கடிதம் போடுவாயோ?' என்றாள் ஒருத்தி.

'மறக்க மாட்டாயே!' என்றாள் மற்றவள், அவள் குரல் தழுதழுத்தது.

அவர்கள் வாங்கி வரச்சொன்ன லிஸ்டை எடுத்து ஞாபகமாக பிளவுசுக்குள் சொருகினாள் பத்மலோசனி. ரூல் போட்ட அந்த ஒற்றையில் ஒரு பக்கம் முடிந்து பின் பக்கத்திலும் சில சாமான்கள் எழுதப்பட்டிருந்தன. ஒருவரை ஒருவர் கிள்ளினார்கள். இறுதியாக கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்து விடைபெற்றுக் கொண்டார்கள்.

இது எல்லாம் நடந்து ஒரு மாதமாகி விட்டது. அன்று பத்மலோசனி கனடாவில் இருந்து திரும்பி வருகிறாள். அந்த இரண்டு சிநேகிதிகளும் ஒருவர் விரலை ஒருவர் பிடித்தபடி மரத்தடியில் காத்திருந்தார்கள். ஏதோ பரீட்சை முடிவை எதிர்பார்ப்பதுபோல அவர்கள் நெஞ்சுகள் படபடவென்று அடித்துக் கொண்டன.

சொன்னபடியே சித்தப்பாவின் வாடகைக் கார் பத்மலோசனியை கொண்டு வந்து இறக்கியது. அவள் அங்கே இங்கே திரும்பிப் பாராமல் மிடுக்கோடு உள்ளே போனாள். இரண்டு மணி நேரமாக இவர்கள் காத்திருந்தார்கள். ஒருத்தி அளவுக்கு மீறி வளர்ந்திருந்த தன் ஒல்லிக் கால்களை பாவாடையினால் இழுத்து இழுத்து மூடினாள். மற்றவள், பின்னலில் சேர்த்துக்கொள்ளப்படா மல் அனாதரவாக விடப்பட்ட முற்றா மயிர் சுருள்களை விரல்களினால் உருட்டிக் கொண்டிருந்தாள். அந்த தரித்திரம் பிடித்த கார் இன்னும் அங்கேயே நின்றது. கடைசியில் ஒருவாறாக அது கிளம்பியதும் பத்மலோசனி இவர்களை நோக்கி ஓடிவந்தாள்.

அ. முத்துலிங்கம்

அவளைப் பார்த்த இரண்டு சிநேகிதிகளும் திகைத்து விட்டார்கள். நல்ல சாப்பாட்டினால் உண்டாகும் ஒரு இஞ்ச் சதை அவள் உடம்பை முழுக்க மூடியிருந்தது. ஒரு நாளைப்போல மாட்டும் செருப்புக்கு பதிலாக முன்பக்கம் கூர்மையாக்கப்பட்ட, வார் வைத்து குதி உயர்த்திய கறுப்பு சப்பாத்தை அவள் அணிந்திருந்தாள். வழக்கமான கோதுமை மா அவித்த மணம் அப்போது எழும்பவில்லை. ஒரு புதுவிதமான சென்ற் வாசம்பரவியது. புது ஆடை மணமும், பிளேன் மணமும், கொஞ்சம் கனடா மணமும் அங்கே வீசியது. எல்லோரும் கட்டிப்பிடித்து ஒரு சொட்டு அழுதார்கள். சிறிது சந்தோஷப்பட்டார்கள். பிறகு மூக்கை சிந்தினார்கள்.

அவள் தான் வாங்கிவந்த சாமான்களை எல்லாம் எடுத்து பரப்பி வைத்தாள். வாசனைத் திரவியம், பவுடர், உதட்டுச் சாயம், நகப்பூச்சு என்று அத்தனையும் கிடைக்கமுடியாத அபூர்வ பொருட்கள். நெற்றிப் பொட்டுக்கூட வாங்கியிருந்தாள். கனடாவில் நெற்றிப்பொட்டும் செய்கிறார்களா என்று ஒருத்தி விசாரித்தாள். இன்னொருத்தி வெளிநாடு என்றாலே ஒரு மவுசுதான் என்றாள்.

'இது என்னடி? கறுப்பாய், நீட்டாய் வலைபோல?'

'இதுதான் நைலோன்ஸ். இதைப் போட்டுக்கொண்டுதான் அங்கே எல்லோரும் வெளியே போவார்கள். அப்படியில்லை, அப்படியில்லை. இப்படி தொடைமட்டும் இழுத்துவிட வேண்டும்' என்றாள்.

இரண்டுபேரும் அவள் மேலே விழுந்து தொடையிலே கிள்ளிவைத்தார்கள்.

எல்லா ஆரவாரமும் அடங்கிய பிறகு பத்மலோசனி ஒரு பொக்கிஷத்தை எடுப்பது போல ஒன்றை எடுத்தாள்.

'இஞ்ச பாருங்கோடி, இது சீப்பு இல்லை, சோப்பு இல்லை, முகம் பார்க்கும் கண்ணாடி இல்லை. விக்டோரியா சீக்கிரட்டில் வாங்கிய பிரேஸியர்ஸ். விலையை படியுங்கோ. அதில் 39.95 என்று போட்டிருக்கு ரூபாய் இல்லை. டொலர்ஸ், பெரிய பெரிய ஹொலிவுட் நடிகைகள் எல்லாம் இதைத்தான் அணிவார்களாம்'.

அதிர்ஷ்டமற்ற இரண்டு சிநேகிதிகளும் ஆவென்று வாயை பிளந்து பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

'இது மாங்காய் புடுங்குவதற்கோ, தேங்காய் உரிப்பதற்கோ போட்டுக்கொண்டு போகிற சமாச்சாரம் இல்லை. உண்மையான பெரிய விஷேசங்களுக்கு மட்டுமே அணியவேணும். இந்தாடி உனக்கு சின்ன சைஸ், எடியே! உனக்கு இரண்டு சைஸ் பெரியது.'

பாதி எலுமிச்சம் பழம்போல மார்பு உடையவள். 'ஏன்டி, இரண்டு சைசுக்கும் விலை ஒண்டுதானா?' என்றாள். அவள் தன்னுடைய பிராவை கையிலே தூக்கி மணி போல ஆட்டிக்கொண்டிருந்தாள்.

'ஸ்டுபிட், இது என்ன பானையா, சருவமா ஒவ்வொரு சைசுக்கும் ஒவ்வொரு விலைபோட? எல்லா சைசுக்கும் ஒரே விலைதான்' என்றாள் பத்மலோசனி.

'ஐயோ, அப்படி என்றால் எனக்கு நீ இரண்டு சைஸ் பெரிதாக வாங்கி இருக்கலாமே. நான் வளர வளர வைத்து போடுவேன்' என்று முறையிட்டாள்.

'சீ, மூதேவி, ஆசையை பார்' என்று தாடையில் இடித்தாள் பெரிய மார்புக்காரி.

மூன்று நாட்களாக அவர்கள் வேறு ஒன்றுமே பேசவில்லை. ஒரே கனடாக் கதைதான். கேட்டு கேட்டு அலுக்கவில்லை. இவர்களுக்கு எல்லாமே புதுமையாக இருந்தது. சில கதைகளை இன்னொருமுறை கூறும்படி அவளை கெஞ்சிக் கேட்டார்கள். அவளும் கொஞ்சம் நடப்பு காட்டிவிட்டு பிறகு சொல்வாள். நயகரா நீர்வீழ்ச்சியிலோ, சி.என் கோபுரத்திலோ, ஸ்கைடோமிலோ அவர்களுக்கு ஆர்வமில்லை. மைதிலி பற்றி கேட்கவே ஆசையாயிருந்தது.

'உண்மைதானே. சொல்லடி, மைதிலி மொடலாகப் போகிறாளா?'

'அவள் மொடலிங் படிக்கத்தான் ஆசைப்படுகிறாள். அவளுடைய தகப்பன் அவள் என்ன சொன்னாலும் கேட்பார். இரண்டு விளம்பரப் படங்களில் ஏற்கனவே நடித்து விட்டாள்.'

'அப்படி அழகா?' என்றாள் ஒருத்தி. அவள் குரலில் ஏக்கம் தொனித்தது.

'அவளுடைய கலர் எங்களுடையதைப்போல வெள்ளை இல்லை. அவள் நடுக்கறுப்பு. அந்த நிறத்துக்காக அங்கே கொலைகூடச் செய்வார்கள். அவ்வளவு மதிப்பு, அவளுடன் மோலுக்குள் நடந்து போனால் ஆட்கள் அவளை திரும்பிப் பார்த்தபடியே போவார்கள்.'

'ஏன்டி, நீ ஒரு மாதம் இருந்திருக்கிறாய், நீ அங்கே பார்த்த மறக்க முடியாத ஆச்சரியம் என்ன?' என்றாள் பெரிய மார்புக்காரி.

'அங்கே பெண் தபால்காரிகள் இருக்கிறார்கள்.'

'அது என்ன பெண் தபால்காரி, தபால்காரி என்றால் பெண்தானே. வேறு என்ன?'

'ரோடு கூட்டும் மெசின். இரவிரவாக வந்து ரோட்டைக்கூட்டிவிடும். காலையில் பார்க்கும்போது ரோட்டுகள் பளிச்சென்று இருக்கும்.'

எல்லோரும் பெருமூச்சு விட்டார்கள். அணில்கள் அவர்களுக்கு நெருக்கமாக வந்து பொறுக்கி சாப்பிட்டன. ஒருத்தி மெல்லிய குரலில் கேட்டாள். 'ஏன்டி, உன்ரை மைதிலிக்கு காதலன் இருப்பானோ?'

'அங்கே அவளை மைதிலி என்று கூப்பிடமுடியாது. அவள் பெயரை சுருக்கி 'மித்' என்றுதான் கூப்பிடுகிறார்கள். மித் என்றால் நம்பிக்கைக்கு அப்பாற்பட்டது என்று பொருள், அவள் அழகும் அப்படித்தான்.'

'சொல்லடி, அவளுக்கு லவர் இருக்கிறானா?'

'பலர் இருந்தார்கள்.'

'அப்ப?'

பத்மலோசனி ஓர் மர்மப்புன்னகையை செய்து மொனலிசா போல மௌனமாகிவிட்டாள்.

இருவரும் அவள் மீது பாய்ந்து விழுந்தார்கள். அவளைப் பிடித்து அமுக்கினார்கள். அவள் 'ஆவூ' என்று காயம்பட்ட விலங்குபோல கத்தினாள். அணில்கள் பிய்த்துக்கொண்டு ஓடி மறைந்தன.

'நான் சொல்லமாட்டன். அது ரகஸ்யம்.'

'புரொமிஸ், புரொமிஸ்' என்றார்கள் இருவரும்.

மித்துக்கு ஒரு காதலன் இருக்கிறான். முழுக்க முழுக்க வெள்ளைக்காரன். அவன் ஒரு நாள் அவளை வெளியே கூட்டிப்போவதற்கு வந்திருந்தான், கண்ணைச் சுற்றி காது வரைக்கும் வளைந்த கறுப்பு கண்ணாடி போட்டுக்கொண்டு. அவனுடைய பெயர் பொறித்த இலக்கத்தகடு உள்ள கார் அவனிடம் இருந்தது. பத்மலோசனியும் அவர்களுடன் வரவேண்டும் என்று மித் அடம்பிடித்தாள்.

'நான் எப்படி வருவேன். நீங்கள் இரண்டு பேரும் ஒருத்தர் மூஞ்சியை ஒருத்தர் பார்த்துக்கொண்டு இருப்பீர்கள். நான் எதற்கு நடுவே, ஹலொவீன் பூசணிக்காய் போல' என்று சொன்னாள் பத்மலோசனி.

'அதென்னடி பூசணிக்காய்?'

'என்னவோ பூசணிக்காய், அதைவிடு. மித் எனக்காக ஒரு புது டிரஸ்கூட வாங்கியிருந்தாள். என்ன செய்யமுடியும்? அதைப் போட்டுக்கொண்டு நானும் அவர்களுக்கு பின்னால் இழுபட்டேன்.'

அன்று மித் உடுத்திய உடைபோல ஒன்றை பத்மலோசனி தன் வாழ்நாளில் பார்த்ததில்லை. மெல்லிய பட்டுத்துணியினால் தயாரிக்கப்பட்ட விலை உயர்ந்த ஆடை அது. ஆயத்த ஆடையாக வாங்காமல், கைதேர்ந்த தையல்காரரால் அளவெடுத்துச் செய்யப்பட்டது. சிறு காற்றுக்கும் அசைந்து கொடுக்கும் அந்த உடை, மிக நுட்பமான வேலைப்பாடுகளை அதன் தோள்மூட்டிலே கொண்டிருந்தது. எவ்வளவுதான் உயர்ந்ததாக படைக்கப்பட்டிருந் தாலும் அந்த ஆடை மறைக்க உத்தேசித்திருந்த அவள் உடலின் அழகு அதையும்விட பன்மடங்கு வசீகரத்துடன் இருந்ததாகவே பத்மலோசனிக்கு பட்டது.

அந்த வெள்ளைக்கார காதலன் அவர்களை ஓர் ஐந்து நட்சத்திர ஹொட்டல் உணவகத்திற்கு அழைத்துப் போனான். அது

**தொடர்ச்சி 33ஆம் பக்கம்**

# கோபன்ஹேகன்...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

2. வெப்பவாயு வெளியேற்றத்தை எவ்வளவால் குறைப்பது என்பது பற்றி சரியான முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை. விஞ்ஞானிகளின் குறிகோளான 2050 களில் 50 வீத வாயு குறைப்பு பற்றி எந்த விதமான காத்திரமான முடிவும் கிட்டவில்லை.

3. முன்னேற்றமடைந்து வரும் நாடுகள் தமது வாயு வெளியேற்ற நடைமுறை கணக்கு புத்தகத்தை எல்லோரும் பார்க்க கூடிய விதத்தில் வழி-வகை செய்யவேண்டும். முன்னேற்றமடைந்து வரும் நாடுகள் இந்த விடயத்துக்கு ஒத்துக்கொள்ளாவிட்டால் தன்னால் எந்தவொரு உடன்பாட்டுக்கும் வரமுடியாது என்று அமெரிக்கா முதலில் அடம்பிடித்தது. தனது உள்நாட்டு விடயங்களில், வெளிநாடுகள் மூக்கை போடுவதற்கு இது ஒரு குறுக்கு வழியாக அமைந்துவிடும் என்பதால் சீனா இந்த விடயத்துக்கு தனது முதுகு புறத்தைகாட்டி நின்றது. இறுதியில் இந்த விடயம் "சர்வதேச ஆலோசனைகளுக்கும் பகுப்புக்கும் உடன்படுவது" என்ற பதத்துடன் சீனா தப்பித்துக்கொண்டது.



4. அபிவிருத்தியடைந்த நாடுகளின் செயற்பாடுகள் தான் பூமி வெப்பமடைவதற்கு மூலகாரணமாக இருப்பதால், அந்த நாடுகளின் உதவியுடன் நிதியமொன்றை உருவாக்கி, வளந்து வரும் நாடுகளின் பசுமை மயமாக்கம் செயல்பாடுகளுக்கு வழங்க வேண்டும். இது சம்மந்தமாக ஏழை நாடுகள் தமது பசுமை மயமாக்கல் செயல்பாடுகளை ஐக்கிய நாடுகள் சபையின் பரிசீலனைக்கு உட்படுத்தினால், 100 பில்லியன் டொலர்களை அபிவிருத்தியடைந்த நாடுகளிடமிருந்து பெற்றுத் தரமுடியும் என்ற கிலாறி கிளிங்டனின் வாக்குறுதியுடன் இந்தவிடயம் உடன்பாட்டுக்கு வந்தது.

5. இறுதியாக 1997 இல் உடன்பாட்டுக்கு வந்த கியோடோ ஒப்பந்தம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கவேண்டும்.

இந்த ஒப்பந்தமானது இன்னும் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தால் தான் 2010 ஆம் ஆண்டளவில் சட்டரீதியாக அமலுக்கு வர முடியும்.

அரசியல் தலைவர்களும், மற்றும் அரச உத்தியோகத்தர்களும் டென்மார்க் மகாநாட்டுக்கு வருகை தந்திருக்காவிட்டால், அவர்கள் பயணித்த விமானத்திலிருந்து வெளியேறிய வெப்பவாயு வெளியேற்றத்தையாவது குறைத்திருக்கலாமென்று பத்திரிகைகள் தலையங்கம் தீட்டி தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தின.

# Under The ...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

கேள்விக்கு?..............
'என்னிடம் ஜக்கெட்டை தந்து விட்டு குண்டுகளுக்குள் இறந்து விட்டான்'.

படத்தின் இயக்குனர் Philippe Aractingi லெபனானைச் சேர்ந்தவர். கதையை மட்டும் மனதில் கொண்டு போர் முடிந்து பத்து நாட்களுக்குள் தெற்கு லெபனானில் படத்தை எடுத்துள்ளார். போரின் புழுதி படம் முழுவதும் காணப்படுகின்றது. 'பாதிக்கப்பட்வர்கள் சாட்சிகளாக இருக்க வேண்டும்' என்பதற்காகவே இதனை போர் முடிந்த சில காலங்களில் படமாக்கினேன் என இயக்குனர் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார். மேற்கத்தியர்களுக்கு 'போர் ஒரு கோப்பை தேநீர், எங்களுக்கு போர் தான் வாழ்க்கை' இதனை எனது படத்தில் நிறுவியுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். வழமை போல் இல்லாமல் முதலில் காட்சிகள் எடுக்கப்பட்டு பின்னர் திரைக்கதை மெருகூட்டப்பட்டு பின்னர் மிகுதி காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன. படத்தில் வரும் பல காட்சிகள் பாதிக்கப்பட்ட மக்கள் நிஜமாக கூறியவை.

பாதிக்கப்பட்ட மக்களின் துக்கங்களை கமரா காவிச் செல்கின்றது. படத்தில் இறந்த உடல்கள் காட்டப்படவில்லை. அவர்கள் அங்குள்ள கல்லுக்கு பின்னால் உடைந்த சுவரின் கீழ் உள்ளனர். அந்த எதிரொலி படம் முழுவதும் உள்ளது.

வழமையான போர் படங்கள் ஒன்றில் அரசு சார்பாக இருக்கும் இல்லையேல் தீவிரவாதிகள் பக்கமாக இருக்கும். முதன் முதலாக ஒரு படம் மக்கள் சார்பாக எடுக்கப்பட்டுள்ளது. படத்தின் முக்கிய பாத்திரங்கள் இருவரும் போரை எதிர்த்தாலும், தங்களது தேசிய நலனின் மீது அக்கறை கொண்டவர்கள். ரொனி நண்பர் இஸ்ரேலில் வேலைக்கு செல்வதை எதிர்க்கின்றான். சினா தனது மண் மீது தீவிர காதல் உள்ளவர். ஆனால் இந்த போர் எனது அல்ல எனக் கூறுகின்றார்.

உடைக்கப்பட்ட துண்டுகளை ஒன்றிணைக்க முற்படமால், உடைவுகளாகவே படமாக்கியுள்ளார். சிதைவுகளில் இருந்து சிற்பத்தை செதுக்குவது போல் , காட்சிகளின் சுதந்திரத்தை சிறகடிக்காமல் திரைப்படத்தை தொகுத்தளித்துள்ளார். படத்தின் action image இக்காட்சிகள் தான்.



கமாஸிடம் சிறையில் இஸ்ரேல் இராணுவ வீரர் Gilad Shalit ன் தந்தை நோம், காசா மக்களை நோக்கி பத்திரிகையாளர்களூடாக தெரிவித்த செய்தி 'உங்களின் விரும்பிகள் கொல்லப்பட்டுள்ளார்கள். பெண்கள், சிறுவர்கள், அப்பாவிகள்'. ஒரு பெற்றோராக பல்லாயிரம் பெற்றோரிடம் கேட்கின்றேன் எனது குடும்பத்தின் துயரத்தை விளங்கிக்கொள்ளுங்கள். (Some of your loved ones have been killed-women and children, young and innocent.....As a parent speaking to a multitude of parents, I ask you to understand my family's anguish.)

இதனை இஸ்ரேலிய அரசு விளங்கிக் கொள்ளும் வரை, இந்தத் தாயின் வலியை நாங்கள் தான் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

# தளுக்கு

பளபளவென்று மார்பிள் தரையையும், பனை உயரம் எட்டும் திரைச்சீலைகளையும் கொண்டிருந்தது. நீண்ட வெண்கலச் சங்கிலிக-ளில் தொங்கிய பாரமான சரவிளக்குகள் மெல்லிய ஒளியைப் பாய்ச்சின. அவையினுடைய பிரம்மாண்டத்துக்கும் அவை வீசிய ஒளிக்கும் சம்பந்தமே இருக்கவில்லை.

தூயவெள்ளை மேசை விரிப்பின் நடுவில் மலர் அலங்காரமும் அதைச் சுற்றி நாலு நீண்ட வைன் கிளாஸ்களும் இருந்தன. ஹொலிவுட் அழகி போன்ற ஒரு பரிசாரகி மெல்லிய சிவப்புத் தோல் மெனு அட்டையை அவர்களிடம் கொண்டுவந்து கொடுத்தாள். அது பாதி ஆங்கிலத்திலும் பாதி பிரெஞ்சிலுமாக இருந்தது. காதலர்கள் ஏதோ புரியாத உணவு வகைகளை ஓடர் பண்ணினார்கள். பத்மலோசனி தன் பங்குக்கு ஒரு பதார்த்தத்தை சுட்டிக்காட்டி அதற்கு ஆணை கொடுத்தாள். அதை தெரிவு செய்த காரணம் அதில் அவளுக்கு தெரிந்த இரண்டு வார்த்தைகள் இருந்ததுதான், 'முட்டை' மற்றும் 'சாதம்'.

உணவுகளுக்கு விலைப்பட்டியல் போட்டிருக்கவில்லை. உண்மையான உயர்ந்த உணவகங்களில் விலைப்பட்டியல் இராது என்று மித் பின்னால் பத்மலோசனிக்கு விளக்கினாள். உணவுப்பிரியர்கள் உணவைத்தான் பார்ப்பார்களாம், விலையை அல்ல.

காதலர்கள் தங்கள் உலகத்தில் சஞ்சரித்தார்கள். பத்மலோசனி இரு கைப்பிடிகள் வைத்த சொகுசான உயர்ந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். அப்படி அவள் இருந்தாலும் அந்த வெளியை நிறைத்த உணர்வே அவளுக்கு இல்லை.

பத்மலோசனியின் பிளேட்டை கொண்டு வந்து மேசையிலே வைத்துவிட்டு பளபளவென்று மினுங்கும் மூடியை ஒரு மந்திரவாதியின் கைவேகத்தில் அகற்றினாள் சேவகி. சிறிய சோறு. மஞ்சள் வடிவத்தில் ஏதோ ஒன்று. பூப்போல சீவி அழகுபடுத்திய பீட்ருட், பச்சை வடிவத்தில் சிறு துண்டுகளாக வேகவைத்த அஸ்பரகஸ். இன்னும் நடுவிலே அவித்து வைத்த முட்டை. அந்த சாதாரண முட்டைகூட அழகாகத்தான் இருந்தது.

இடது கையிலே பத்மலோசனி முள்ளுக்கரண்டியை பிடித்தாள். வலது கையிலே கத்தியே தூக்கினாள். அந்த அவித்த முட்டையையே அவள் பார்த்துக்கொண்டு இருந்தாள். அது சுற்றிவர வெள்ளையாக இருந்தது. நடுவிலே கொஞ்சம் மஞ்சள் தெரிந்தது. அதை எங்கே இருந்து ஆரம்பிக்கலாம் என்ற சிந்தனையில் அவள் மூழ்கியிருந்தபோது, ஞாபத்திலே இருந்து விடுபடாமல் இருப்பதற்கு காரிலே தன் பெயரை எழுதிவைத்திருந்த அந்த காதலன் ஒரு காரியம் செய்தான். அங்கே இருந்த அத்தனை விருந்தினர்களுக்கு முன்னும், பரிசாரகிகளுக்கு முன்னும், பத்மலோசனிக்கு முன்னும், அவள் சாப்பிட உத்தேசித்திருந்த முட்டைக்கு முன்னும் அவன் அதைச் செய்தான். அந்த முட்டையில் இருந்து திடீரென்று ஒரு கோழிக்குஞ்சு வெளியே வந்து பறந்து போயிருந்தால்கூட பத்மலோசனி அவ்வளவு ஆச்சரியப்பட்டு இருக்க மாட்டாள்.

அந்த காதலன் ஒரு முழுங்காலில் மித்தின் முன் உட்கார்ந்து அவள் விரல்களைப் பிடித்தான். பிறகு ஆங்கிலப் படங்களில் வருவது போன்ற ஒரு ஆடம்பரமான வாசகத்தை பேசினான்.

'நீ பக்கத்தில் இல்லாதபோது என் சுவாசம்கூட முழுதாக வருவதில்லை. இந்த உலகில் வாழும் அத்தனை ஜீவராசிகளிலும் நான் மிக்க மகிழ்ச்சியுடையவனாக இருப்பேன், என்னிடம் எஞ்சியிருக்கும் வாழ்நாளை நீ என்னுடன் சேர்ந்து கழிக்க சம்மதித்தால். என் அன்புத் தேவதையே! தயதுசெய்து சரியென்று சொல்' என்று இறைஞ்சியபடியே ஒரு பளபளக்கும் மோதிரத்தை நீட்டினான்.

மித்தின் கண்களில் நீர் கட்டியது. சரி, சரி என்று சொல்லியபடியே அவன் கழுத்தை சுற்றி வளைத்துப் பிடித்து உதட்டிலே முத்தம் கொடுத்தாள். அவன் விடுபட்டு மூச்சு விடுவதற்காக நிமிர்ந்தபோது விரல்களால் அவன் பிடரியை மீண்டும் வளைத்து மீதி முத்தத்தைத் தொடர்ந்தாள்.

அப்பொழுது இரண்டு பரிசாரகிகளும், இன்னும் பக்கத்து மேசை விருந்தினர்களும் எழும்பி நின்று கை தட்டினார்கள்.

'நீ என்னடி செய்தாய்?'

'நான் என்ன செய்ய. என் பசியை தீர்ப்பதற்கு ரெடியாயிருந்த அந்த முட்டையை பார்த்துக்கொண்டு இருந்தேன்' என்றாள்.

அவர்கள் விட்ட பெருமூச்சுகள் எல்லாம் சுற்றியிருந்த காற்றின் கனத்தை கூட்டின. அங்கே மௌனம் நிலவியது. புளிய மரத்தில் இருந்து பூ உதிரும் சத்தம்கூட அப்போது கேட்டது.

'உண்மையாகவே அவன் உதட்டில் முத்தமிட்டாளா?' ஏக்கமாகக் கேட்டாள் எலுமிச்சம்பழ மார்புக்காரி.

அவ்விடத்தில் கொஞ்சம் பொறாமை முளைவிட்டது. பத்மலோசனி ஆழ்ந்த யோசனையில் தலையில் ஒரு விரலை வைத்தபடி இருந்தாள். சாலையில் சிவப்பு விளக்கு மாறுவதற்கு நிற்பதுபோல அந்த யோசனை அவர்களைக் கடந்து போகும்வரை காத்திருந்தார்கள்.

திடீரென்று 'என்னடி தலையை சொறியிறாய்! பேன், பேன்' என்றபடி இருவரும் அவள் மேல் பாய்ந்தார்கள். மிகவும் விலை உயர்ந்த போல்மிஷேல் கூந்தல் ஸ்பிரே அடித்து அழகாக வாரப்பட்டிருந்த அவளுடைய தலைமயிரை இழுத்துப்பிடித்து அலங்கோலம் செய்தார்கள். ஒருத்தி பெரிய வாய்க்கால் வெட்டுவதற்கு தயார் செய்வது போல அவளுடைய உச்சியை சாவகாசமாக பிரித்தாள். மற்றவள், மயிர் கற்றைகளை விரல்களினால் ஒதுக்கி மண்டைச் சருமம் தெரியும் வரை இழுத்து வைத்து தேடினாள்.

'அங்கே, அங்கே' என்றாள் ஒருத்தி. அந்த வெளிநாட்டுப் பேன் மிக லாகவமாக அவர்களுடைய துரிதமான விரல்களுக்கு அகப்படாமல் அந்த மயிர்கால்களுக்குள் ஓடி மறைந்தது.

'என்ன தளுக்கு, என்ன தளுக்கு' என்றாள் ஒருத்தி.

'ம்' என்ற பெருமூச்சு விட்டாள் மற்றவள்.

END

# சக்கர ஊர்திப் பயணங்கள் - 2




அன்று கொஞ்சம் நீண்ட தூரம் போகவேண்டியிருந்தது. ஆகவே காலை 8:35 க்கு ஊர்தி வருவதாக இருந்தது. நான் வாசலில் உட்கார்ந்து குமார் புனிதவேல் எழுதிய நூலினை வாசித்துக் கொண்டிருந்தேன். மணி 9:00தையும் தாண்டி விட்டது. ஊர்தி வருவதாயில்லை. பிந்திப் போகலாம், ஆனால் திரும்ப என்னை அழைப்பதற்காக வரும் வண்டி நேரத்துக்கு வந்தால் பிரச்சினை. அதற்குள் மதிப்பீடு முடித்தாக வேண்டும். பொறுமை கொஞ்சம் விடைபெற்றது. அவர்களை அழைப்பதற்கு முன்னர் வெளியே ஒருமுறை பார்க்கலாமென்று கதவைத் திறந்து பார்த்த பொழுது ஊர்தி என் வாசலில் நின்றது. ஓட்டுனர் இறங்கி அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டிருந்தார். எனக்கோ நேரம் போய்விட்டது என்ற மனத் தாங்கல். அவர் என்ன என்றால் அசட்டையாக அங்கும் இங்கும் பார்க்கிறார். கொஞ்சம் கோபம் எட்டிப்பார்த்தது, உடனடியாக வீட்டை விட்டு வெளியே வந்து விடுவிடென ஊர்தியை நோக்கிப் போனேன், சற்று சிடுமூஞ்சித்தனத்தை அவருக்குப் பலப்படுத்தும் விதமாக. அவரோ என்னைப் பார்த்துக் கேட்ட கேள்வி என்னைக் குற்றவாளியாக்கி விட்டது. 'நீ ஏன் வீட்டு எண்ணினை வீட்டின் வெளியே குறிக்கவில்லை, நான் பக்கத்து வீட்டு எண்ணைப் பார்த்துத் தான் உன் வீட்டைக் கண்டு பிடிக்க முடிந்தது' என்றார். 'இல்லை எண் உள்ளது, எனது பூக்கொடிகள் மறைத்து விட்டன' என்றேன். குளிர்காலம் கிளிமாற்றிஸ் கொடிகள் இலையை உதிர்த்துவிட்டு நிர்வாணமாக நின்றாலும் அவற்றின் அடர்த்தியான கிளைகள் என் வீட்டு எண்ணினை மறைத்துவிட்டன' என்றேன். அது உனக்குத் தெரியுந்தானே இந்தக் கார் நிறுத்தும் கொட்டிலின் முன்பக்கத்திலே உனது வீட்டு எண்ணினை எழுதி விடு என்றார். அது அவர் தந்த இலவச ஆலோசனை. எனது கோபம் மெல்லத் தணிந்தது. பிரயாணம் ஆரம்பமானது. ஊர்தியை ஓட்டத் தொடங்கியவர் அதனை நிறுத்திவிட்டு, 'மன்னித்துக் கொள் ஒரு சிறுவேலை செய்துவிட்டுப் போவோமே' என்றவர், எனது ஒப்புதலைக் கேட்காமலேயே தனது செல்லிடபேசியில் சில எண்களை அமுக்கினார். சிறிது நேரத்தில் 'ஹல்லோ டார்லிங்! எழும்பி விட்டாயா? அப்போ சரி. உனது நாள் நல்ல நாளாகட்டும். மாலை சந்திப்போம்' என்று சொன்ன பின்னர் அதனை மூடி வைத்தார். ஊர்தியை ஓட்டத் தொடங்கினார். ஆச்சரியமாக அவரைப் பார்த்த என்னை நோக்கியவர், 'அது என் மனைவி. காலையிலே கொஞ்சம், ஆளைப் புரட்டித்தான் நித்திரையால் எழுப்பவேணும். இரவிலே நெடுநேரம் இருப்பார். ஆனால் காலையில் அவர் பாடசாலைக்குப் போக வேண்டும் அல்லவா ஆகவே நான் எப்பொழுதும் எங்கே இருந்தாலும் காலையில் அவரை அழைப்பது வழக்கம். காலையில் அவர் எழும்பத் தவறினால் நான் எழுப்பி விடுவேன். இன்று கொஞ்சம் பிந்திவிட்டேன் என்றார்.

அவருக்கு ஒரு நாற்பது வயதிருக்கும் கிரேக்கர். 'உன் மனைவி பாடசாலைக்குச் செல்கிறாரா. என்ன படிக்கிறார்' என்றேன். 'என்ன விளையாடுகிறாயா அவள் எமது வீட்டுக்கு அருகே உள்ள கிங்ஸ்லேக் ஆரம்பபப் பாடசாலையில் நிரந்தர ஆசிரியை' என்றார். எனது அசட்டுத்தனத்தினை நான் மறைத்து 'ஓ அந்தப் பாடசாலையை எனக்குத் தெரியுமே. எம் இனத்துப் பிள்ளைகள் அனேகர் அங்கே கல்வி கற்கின்றார்கள்' என்றேன். சகசநிலைக்கு வந்துவிட்டதன் அறிகுறியாக இப்போ கதை குடும்பம் பற்றியதாகியது.

'எனது மனைவி இறந்து விட்டார். நான் பிள்ளைகளுடன் வாழ்கிறேன்' என்றேன். 'ஐயோ பாவமே! நீ ஏன் இன்னொருத்தியை கல்யாணம் செய்திருக்கலாம் தானே' என்றார். 'பிள்ளைகள் உள்ளனர், அவர்களோடு காலத்தைக் கழிக்கலாம் என்ற எண்ணத்தில் வாழ்கிறேன்' என்றேன். 'உதுதான் பிழையான அபிப்பிராயம், எமக்குப் பிள்ளைகளே இல்லைத் தெரியுமா?' என்றார். எம்மவர்கள் தமக்குப் பிள்ளைகள் இல்லை என்று சொல்கின்ற போது எத்தனை சோகம் முகத்தில் பிரதிபலிக்கும். இவன் மனுசன் என்னடாவென்றால் அதனைப் பெரும் சாதனை என்ற மாதிரியாக அல்லவா பெருமையுடன் சொல்கிறான்.

'கவலைப்படாதே உனக்கென்ன இப்போ 40 வயது தானே இருக்கும். ஆகவே குழந்தை பெற்றுக்கொள்வதற்கு இன்னும் காலம் உள்ளது' என்றேன். 'பூ! நீ என்ன ஒன்றும் புரியாதவனாய் இருக்கிறாய்., எனக்கு எத்தனை வயதில் கல்யாணம் நடந்தது தெரியுமா? 25 வயதில். அப்போ நான் 15 வருடம் குடும்ப வாழ்க்கை வாழ்ந்துள்ளேன். பிள்ளை வேணும் என்றால் நான் இது வரை எத்தனை முறை பெற்றிருப்பேன் தெரியுமா' என்றார்.




நன்றி.: *Economist, December -16, 2009*

'நீ என்ன சொல்கிறாய்?' என்றேன். 'உனக்கு விளங்கவில்லையா? நாம் இருவரும் பிள்ளை பெற்றுக் கொள்வதில்லை என்ற நோக்கத்துடனேயே வாழ்க்கையை நடத்தி வருகிறோம். பெற்றதும் இல்லை இனிப் பெறப்போவதுமில்லை' என்றார்.

இவன் என்ன ஒரு வித்தியாசமான பிரகிருதியாக உள்ளானே என்ற மலைப்புடன் அவனைப் பார்த்தேன். என்ன என்னை ஒரு மாதிரியாகப் பார்க்கிறாய்.. நான் கேட்பதற்கு ஒரு சரியான மறுமொழி சொல் பார்க்கலாம். பிள்ளைகளை எதற்காகப் பெற்றுக் கொள்ள வேண்டும் சொல் பார்க்கலாம்' என்றார்.

இவனுக்கு வள்ளுவரின் ஏழாவது அதிகாரத்தை வாசித்துப் பார், அவர் மக்கட் பேறு என்ற தலைப்பிலே பத்துக் குறட் பாக்களை எழுதியுள்ளார். அதில் மூன்று அற்புதமான குறட்பாக்கள் குழந்தைகளைத் தொட்டால், பார்த்தால், சொற்கேட்டால் முகர்ந்தால் எத்தகைய இன்பம் விளையும் என்பதைக் கூறுகிறது எனச் சொல்லி விளக்க முடியுமா?

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ் (குறள் - 64)
(சிறந்த பொருளை அமிழ்தம் எனக் குறிப்பிட்டாலுங் கூடத் தம்முடைய குழந்தைகளின் பிஞ்சுக் கரத்தால் அளாவப்பட்ட கூழ் அந்த அமிழ்தத்தை விடச் சுவையானதாகி விடுகிறது)

மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு (குறள் - 65)
(தம் குழந்தைகளைத் தழுவி மகிழ்வது உடலுக்கு இன்பத்தையும், அந்தக்குழந்தைகளின் மழலை மொழி கேட்பது செவிக்கு இன்பத்தையும் வழங்கும்)

குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர் (குறள்- 66)
(தங்கள் குழந்தைகளின் மழலைச் சொல்லைக் கேட்காதவர்தான் குழலோசை யாழோசை ஆகிய இரண்டும் இனிமையானவை எனக் கூறுவார்கள்.)

ஆகவே அவனுக்கு தெரிந்த முறையிலே தான் அணுகவேண்டும் என்பதை உணர்ந்து. 'திருமணம் செய்வதன் நோக்கம் தான் என்ன?' என்றேன். பொரிந்தே தள்ளிவிட்டான் பாவி. இனத்தினைப் பெருக்குவது, வாரிசை உருவாக்குவது, எமது தலைமுறை தொடருவதற்கான வழிவகுப்புத் தான் திருமணத்தின் நோக்கம் என நான் உயிரியல் இரீதியான விடை ஒன்றினைச் சொல்வேன் என்று நீ எதிர்பார்த்தால் ஏமாறுவாய். அந்தப் பத்தாம் பசலி வாதம் எல்லாம் என்றோ முடிந்த கதை (அட யோகர் சுவாமி பற்றித் தெரியும் போல) இன்றைய சமூகம் ஓரினச் சேர்க்கைத் திருமணங்களை அங்கீகரிக்கிறதே. இன்னும் ஒரு சில வருடங்களிலே உலகநாடுகள் அத்தனையும் ஓரினச்சேர்க்கைத் திருமணங்களை அங்கீகரித்து விடும் என்பதில் ஐயமில்லை. ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் தெருவெல்லாம் நின்று காதல் செய்யப் போகிறார்கள். அங்கே, எங்கே மகப் பேறு?

'அப்போ திருமணத்தின் நோக்கம் தான் என்ன?' என்றேன். அதுவா? முதலாவது நோக்கம், பாலியல் தேவையினை ஈடு செய்தல். விலங்கினம் அத்தனைக்குமே உள்ள பிரதான தேவைகளில் பாலியல் தேவை முதன்மையானது என்பதை மறுப்பதற்கில்லை. மாஸ்லோவ் என்கிற உளவியல் அறிஞர் விலங்குகளின் தேவை படிமுறையில் (Maslov's Hierarchy of Needs) பாலியல் தேவையையும் இன்றியமையாத ஒன்று என்கிறார். இரண்டாவதாகச் சொல்வதானால் தனிமையை விரட்டுதற்கு ஒரு வாழ்க்கைத் துணை இன்றியமையாதது. ஒரு பற்றுக் கோடு தேவை. அமெரிக்கர்கள் கல்யாணத்தின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகப் பிள்ளைகள் பெறுதல் என்பதை இப்போ முற்றாகவே ஒதுக்கிவிட்டத்தை எதிர்மறையான மாற்றம் (Negaative Change) என சிலர் வர்ணித்தாலும் கூட இதுவேதான் யதார்த்த நிலை என்பதை உணர வேண்டும். மனுசன் கொஞ்சம் விசயம் புரிந்தவன் என்பது புலனாகியது. ஆகவே அவனுடன் இலாகவமாகவே கதையாட வேண்டும்.

'நீ சொன்னாயே தனிமையை போக்குதற்கு ஒரு துணை வேண்டும் என்று. அதனை பெரும் அளவிலே தரவல்லவர்கள் பிள்ளைகளே. அவர்கள் பிறந்தது, வளர்ந்தது அத்தனையிலுமே வெவ்வேறு வகையான தனிமை போக்கும் சந்தர்ப்பங்களைப் பிள்ளைகள் எத்தனை நேர்த்தியாக வழங்குகின்றனர். அதனைச் சொல்லி விளக்க முடியாது. பட்டறிவ-ின் மூலம் தான் உய்த்து உணர முடியும்.' என்றேன்.

'அட முட்டாள் மனுசா. உன்னைத் தூக்கி வெய்யிலில் போட. இதோ பார் இதனைப்பார். குழந்தைகள் பிறந்தது முதல் அவர்களை வளர்ப்பதற்கு ஒவ்வொரு பெற்றோரும் எத்தனை கஷ்டப் படுகிறார்கள். அவர்கள் உடல் வளரச்சி, உளவளர்ச்சி, அறிவு வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி என்ற அத்தனைக்கும் பெற்றோர்கள் அர்ப்பணித்து தமது இன்ப துன்பங்கள் அத்தனையுமே தியாகம் செய்து வளர்க்கிறார்கள். ஆனால் முடிவில் என்னத்தைக் காண்கிறார்கள். அத்தனை பிள்ளைகளுமே சுயநலப்பிண்டங்கள். எத்தனை கெதியில் பெற்றோரை விட்டு அகன்று விடலாமோ அத்தனை கெதியில் போய் விடுகிறார்கள். சரி போனால் போகிறார்கள். கடைசி காலத்திலாவது அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டாமா? பெற்றோர்கள் செய்த தியாகத்துக்கு அந்த சந்தர்ப்பத்திலாவது நன்றிக் கடன் காட்ட வேண்டாமா. தங்கள் இன்பத்துக்குப் பாதகம் விளைத்து விடுவார்கள் என்பதால் ஏதாவது ஒரு காப்பகத்தில் விட்டு விடுகிறார்கள். இது உண்மையா ? இல்லையா? சொல்' என்றார்.

'எங்கள் சமூகத்தில் இது பிரச்சினையாக அமையவில்லை. பெரும் பாலான பிள்ளைகள் திருமணமாகும் வரை பெற்றோர்களுடனேயே வாழ்கிறார்கள். செய்கின்ற தொழில் நிமித்த மாக வேறு இடங்களில் வாழவேண்டி வந்தால் என்ன செய்யலாம்? பிரிந்து செல்லத்தானே வேண்டும். இன்றும் பல குடும்பங்கள் விரிவாக்க குடும்பங்களாக (Extended family) இருப்பதைக் காண முடிகிறது' என்றேன்.

**பொ. கனகசபாபதி**
Email: vlambaram@sympatico.ca

'Empty Nest Syndrome என்றால் என்ன என உனக்குத் தெரியுமா?' என்றார். 'நீ தான் சொல்லேன்' என்றேன். இது உங்கள் சமூகத்தவருக்கு வரும் ஒரு வகையான பிணி. இந்த வெற்றுக் கூடு நோய் பிள்ளைகள் பெற்றோரினை விட்டுப் பிரிந்து செல்வதால் பெற்றேருக்கு ஏற்படும் மனஅழுத்தம், தளர்ச்சி போன்ற அறிகுறிகளைக் காட்டும் மன நோய். இந்நோய் எற்படுவது கணிசமான அளவு அண்மைக்காலத்தில் குறைந்துள்ளது என்றாலும் பார்பரா மிற்சல் எனும் பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்து சமூகவியல் பேராசிரியர் நடத்திய ஆய்வின் முடிவினைக் கேள். உங்கள் சமூகத்தினைச் சார்ந்தவர்களை இந்நோய் 58%மும் பிரிட்டிஷ் மக்களை 20%, ஐரோப்பியர்களைப் 19% சீனர்களைப் 18% மும் பாதிக்கிறதாம். உங்கடை சமூகம் எப்பதான் ஜதார்த்தமாகச் சிந்திக்கப் போகிறதோ தெரியவில்லை.' என்றார் ஒரு பெரிய்ய பெருமூச்சுடன்.

நல்லகாலம் எனது பாடசாலை வந்தது. தப்பினேன் பிழைத்தேன் எனத் தாவி தாண்டித் தாண்டி ஓட்டம் பிடித்தேன். இன்னும் சிறிது தூரம் அவனுடன் பிரயாணம் செய்திருந்தால் நானும் பிள்ளைகள் பெறாதீர்கள் எனும் பிரசாரக்குழுவில ஒருவனாகச் சேர்ந்திருப்பேனா???

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## யாழ். வடமராச்சி உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும், கனடாவையும், அமெரிக்கா கொலம்பஸ் ஒகாயோ (Ohio) மாநிலத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த பொறியியலாளர்

# அமரர் திரு. முருகுப்பிள்ளை பாஸ்கரநாதன்







மண்ணின் மடியில் - 1958.02.17

ஆண்டவன் அடியில் - 2009.01.09

ஆளுமை கொள்ளும்
அறிவும் துணிவும் கொண்டு
இல்லறத்தில் எனைச்
சிறப்பித்த நாயகனே
எமையெல்லாம் அழவிட்டு
நீண்டபயணம்
ஏன் சென்றீர்
உம்பிரிவால் நானின்று
நிமிடத்தை மணியாக்கி
நாள்தோறும் தவிக்கின்றோம்
தினத்தை மாதமாக்கி
ஆண்டொன்றாய் ஆக்கிவிட்டீர்
நெஞ்சுக்குள் உமைச்சுமந்து
நித்தமும் பூசிக்கின்றோம்

காலன் கையில்
நீங்கள் போயிருந்தாலும்
காலமெல்லாம் எங்களுடன்
வாழ்கின்றீர்கள்
நீங்களில்லாத உலகம்
எமக்கு நரகமே
மாமனிதராய் வாழ்ந்த எம்
மாமாவின் மா இழப்பை
மருமக்கள் நாம் எப்படித் தாங்குவோம்

ஆண்டொன்று போனாலும்
மீண்டுமொருமுறை
பார்க்கத் துடிக்கின்றோம்.

உறவிலே
அண்ணனாய் தம்பியாய்
குடும்பப் பொறுப்பிலே
தலைவனாய் தந்தையாய்
சுமைகளெல்லாம் தாங்கிய எம்
உடன்பிறப்பே
எம்முள்ளே நீ
இன்னும் வாழ்கின்றாய்

பார்த்த இடத்திலெல்லாம்
பாஸ்கரன் நீயய்யா?
வார்த்தைகள் எழவில்லைக்
கூர்த்தனை வசைபாட
கூர்த்தர் யார்
கடமை வீரன்
அவனுக்கொன்றே
ஆண்டொன்று கடந்ததய்யா
கடந்ததுவோ தெரியவில்லை
நீ இன்னும்
எம்முடனே வாழ்கின்றாய்

உனை மறப்போமா
மறக்கத்தான் முடியுமா?

பல்கலைக்கழகத்திலே
பார்த்த முகத்துடன் எல்லாம்
பண்பாகப்பழகினாய்
இன்முகத்துடன்
புதுநண்பர்களை
உள்ளங்கொண்டாய்
வஞ்சகம் தெரியாத
நெஞ்சகத்தோனே
உன்னுடல் மறைந்ததென்னவோ
உண்மைதான்.
உன்நினைவோ
உன்செயலோ எமைவிட்டு மறையவில்லை.
எம் அழகிய கூட்டினிலே
கல்லெறிந்து கலைத்தது யாரடா
மாயவித்தைக்குள் நீயா முதற் போகவேண்டும்.
மரணம் மனிதனுக்கு?
அது உனக்கில்லை
ஏனென்றால் நீ.....

*உன்னை உள்ளத்தில் சுமக்கும்*
*குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்.*

# உன் வாழ்வை உயர்த்த 10 கட்டளைகள்

வாழ்வில் சில விடயங்கள் ஒரு போதும் மாறுவதில்லை, அழிவதுமில்லை. காலத்தை வென்று சிரஞ்சீவித்வம் பெற்ற அவற்றை மேலும் சிரத்தையுடன் ஆழமாகவும் நான் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை இன்று மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன்.

மலர்ந்திருக்கும் இப்புதிய மிலேன்னிய சகாப்தத்தில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்திட நீங்கள் ஒவ்வொருவரும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய 10 கட்டளைகள் இதோ!

1. முதலாவதாக ஒவ்வொரு காலையும் உனக்குள் சிறு பொறியாய் உறையும் உன்னைப் படைத்த இறைசக்தியைப் போற்றித் துதிக்க சில நிமிடங்களை ஒதுக்கிப் பிரார்த்தனை செய்!


2. உன்னை நன்கு வழிநடத்துமாறு பிரார்த்தித்ததும் உன் தாய் தந்தைக்காகப் பிரார்த்தனை செய்!

3. சுயமதிப்புடனும், சுயமரியாதையுடனும் வாழும் நீ பிறரின் உயிருள்ள உயிரற்ற உடைமைகளை ஒருபோதும் விரும்பிக் கவரக்கூடாது.

4. ஒருவரைப் பற்றிய அவதூறினை சம்பந்தப்பட்ட நபருக்கு முதலில் நேரடியாக நீயே தெரிவிக்காமல் வேறு ஒருவருக்கும் சொல்லாதே!

5. இறைவனுக்கு நேரடியாக நீ சொல்ல வெட்கப்படும், சொல்லப் பயப்படும் எதனையும் வேறு ஒருவருக்கும் சொல்லாதே!

6. ஒவ்வொரு நாளும் உனக்கே உனக்காக இரண்டு நன்மைகளைக் கட்டாயம்



செய்துமுடி!

7. ஒவ்வொருநாளும் நிச்சயமாக மற்றொருவருக்கு ஒரு நன்மையையாவது செய்!

8. இரண்டு கிழமைகளுக்கு ஒருமுறை பௌர்ணமி மலர்ந்திருக்கும் புதன்கிழமை இரவு 2 மணிக்கும் 3 மணிக்கும் இடையில் மட்டுமே, உனது சிணுங்கல்கள் பிறரைக் குறைகூறி விமர்சிக்கும் பிரலாபங்கள் போன்றவற்றை இனிமேல் நீ செய்யலாம். பௌர்ணமி புதன்கிழமை வராவிட்டால், அப்படி வரும்வரை நீ காத்திருக்க வேண்டும். புரிகிறதா!

9. முழுமையான வாழ்வை நீ வாழ வேண்டும். அரைகுறையாக ஏனோதானோ என வாழக்கூடாது.


10.இறைவனிடமிருந்து உனக்கு வேறு தகவல் வந்தாலொழிய எதிலும், எவரிலும் சிறந்தவை மட்டுமே இருப்பதாக நீ முற்றுமுழுதாய் நம்பவேண்டும்!

பழைய மனித மேம்பாட்டு நடைமுறைகள் கோட்பாடுகளை வாழ்வில் நீ கடைப்பிடிக்கத் தேவையில்லை என இன்றுவரை நம்பியிருக்கலாம். ஆனால் மேற்கூறிய 10 கட்டளைகளையும் உனது வாழ்வின் சகல பரிணாமங்களிலும் இனிமேல் அனுஷ்டிக்க ஆரம்பி!

**பழைய மிலேனியத்தின் அடிப்படை மனிதமேம்பாட்டு நியதிகளை இப்புதிய நூற்றாண்டிலும் இனி நான் நிச்சயம் கடைப்பிடித்து வாழ்வேன் என இன்று உறுதி பூண்டு கொள்கிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 161

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணனி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES



வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க
எந்தவித அடமானக் கடன்களும் பெற
Direct - 416.575.5055
Anton Jeeva
Real Estate / Principal Mortgage Broker
* எனது சேவையைப் பெற்றவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள் *
RE/MAX

FOR SALE $358,000



• 27 Brimstone Cres
• Middlefiels & Finch
• 3+1 bedroom
• 3 washrooms
• 1 kitchen
• Detached house 2-Storey

For Sale $284,900



• Markham/ Lawrence
• Semi-Detached Bungalow
• 4 bedrooms • 3 washrooms
•2 Stoves, Fridge, All Window Coverings, All Electric Light Fixtures. Gas Burner ...

FOR SALE $569,900



• 2411 Canal Rd E
• Simcoe Rd To Canal E
• 2 + 2 Bedrooms
• 2 Washrooms
• 2 Fridges, 2 Stoves, Washer, Dryer, All Elf, All Window Coverings. Farm Equipments Are Available At Reduced Cost.

Condo. for Sale $334,900



• Midland & Lawrence
• Bedroom : 3+1
• Washroom : 3
• All Elfs, Fridge, Stove, Washer&Dryer, B/I Dishwasher, All Window Coverings.

FOR SALE $6.5 Million




• HWY 401& Markham
• Height #189-16' To Joists , #195-14' To Joists , Truck Loading Docks And Grade Level Docks Available. Tons Of Parkings Available.

For Sale $654,900



• Islington & Rutherford
• Detached, 2-Storey
• Bedroom : 4 + 1
• Washroom : 5 • All Window Coverings , Gas Stove, Fridge , Washer , Dryer , B/I Dishwasher

NEW TORONTO ICE CONDO. PHASE II




For Sale $327,500



• Markham/Eglinton
• 3-Storey
• Att/ Row/ Twnhouse
• Bedroom : 3
• Washroom :3
• Finished Walk-Out Basment With Full Fenced Backyard.Fridge & Stove, Dishwasher, Washer/Dryer

Mortgages & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO
REMAX VISION REALTY INC.
Speciallized in Power of Sale Homes

MAX 2000
BUS & TOURS SERVICES
மார்ச் Break ஐ முன்னிட்டு
Florida vacation மார்ச் 13 இலிருந்து 21ஆம் திகதி வரை
ஒன்பது நாட்கள்

பாடசாலை விடுமுறையை முன்னிட்டு பிள்ளைகளுக்கான சுவாரசியமான சொகுசு பயணம்.
பெற்றோர் பிள்ளைகளுடன் மகிழ்சியுடன் சென்று வர ஓர் அருமையான பயணம்.
பயணத்தில் பயணிகளை மகிழ்ச்சிப்படுத்தி மகிழ்விப்பவருக்கு தகுந்த பரிசும் வழங்கப்படும்.
எவ்வளவு மகிழ்ச்சியான பயணம் என்று.




1. **வேர்ஜினியா**வில் Luray Caverns (குகை), இயற்கைக் காட்சிகள்.
2. **யோஜியாவில்** உலகிலேயே மிகப் பெரிய மீன் தடாகம்
3. *Orlando Disney World* (மூன்று நாட்கள்)
4. *Daytona Beach*
5. *South Carolina Sight Seeing*
6. *Pennsylvania - Grove city outlet mall. Shopping Center*

**விலை விபரம்** : தங்குமிடம், பேருந்து, காலை உணவு உட்பட நான்கு பேர் தங்குவதாயின் நபருக்கு : **$490/** மூன்று பேர் தங்குவதாயின் நபருக்கு : **$580 /** இரண்டு பேர் தங்குவதாயின் நபருக்கு:**$640 /** ஒரு King கட்டில்.

மேலதிக தொடர்புகளுக்கு AVM MAX 2000
விபரங்களுக்கு: 416-609-2542